பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:16 வள்ளுவர் ஆண்டு 2032 ஆவணி 4 திங்கட்கிழமை (20-08-2001) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:267

## பாதுகாப்புப் பிரச்சினைகள் காரணமாக

# இராஜதந்திரிகளின் அலுவலகங்களை இலங்கையிலிருந்து இடம்மாற்ற முயற்சி!

## பல நாட்டுத் தூதரகங்களும் ஆலோசனை

கொழும்பு,ஓகஸ்ட்20

**இலங்கையின் தலைநகர் கொழும்பின் பாதுகாப்புக் குறித்து வெளிநாட்டு இராஜதந்திரிகள் மட்டத்தில் கிளப்பப்பட்டு வரும் உறுதியற்ற - சந்தேக - நிலைமையை அடுத்து, பல வெளிநாடுகள் கொழும்பில் உள்ள தமது தூதரகங்களை அயலில் உள்ள வேறு நாட்டுக்கு இடம்மாற்றுவது குறித்தோ அல்லது கொழும்பில் உள்ள தமது அலுவலகத்தின் தரநிலையைக் குறைப்பது குறித்தோ தீவிரமாக ஆலோசனை நடத்தி வருகின்றன.**

**கொழும்பில் உள்ள சிரேஷ்ட இராஜதந்திரிகளுடன் தொடர்புடைய வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.**

ஏற்கனவே கொழும்பில் மத்திய வங்கி மீதான தாக்குதல், கொலன்னாவை எண்ணைக் குதங்கள் மீதான தாக்குதல், நாடாளுமன்றப் பாதையில் நடத்தப்பட்ட தாக்குதல் மற்றும் பல தற்கொலைத் தாக்குதல்கள் என்று தொடர்ச்சியாக இடம்பெற்ற சம்பவங்கள் கொழும்பின் பாதுகாப்புக் குறித்து இராஜதந்திர வட்டாரங்களில் ஏற்படுத்திய சந்தேக நிலைமையை உயர் பாதுகாப்புமிக்க கட்டுநாயக்கா விமானத் தளம் மற்றும் சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றினுள் ஊடுருவி நடத்தப்பட்ட அதிரடித் தாக்குதல் மேலும் வலுவடைய வைத்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

தங்களது உயர்பாதுகாப்பு வலயங்களையே பாதுகாக்கமுடியாத ஸ்ரீலங்கா அரசால், தலைநகரில் உள்ள வெளிநாட்டுத் தூதரகங்களுக்கு போதிய பாதுகாப்பு வழங்க முடியுமா என்ற கேள்வி இராஜதந்திர வட்டாரங்களில் எழுப்பப்பட்டு வருவதாகத் தெரிகின்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## அபிவிருத்தித் திட்டங்களுக்கு நிதி வழங்க வேண்டாம்!

### திறைசேரிக்கு ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு,ஓக.20

நாட்டில் ஏற்பட்டுள்ள பெரும் பொருளாதார நெருக்கடி நிலையை அடுத்து, அமைச்சுக்களால் மேற்கொள்ளப்படும் புதிய திட்டங்கள் உட்பட சகல அபிவிருத்தித் திட்டங்களுக்கும் அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கு நிதி வழங்கவேண்டாம் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க திறைசேரிக்குப் பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்தக் காலப்பகுதியில் குறைநிரப்புப் பிரேரணை மூலமும் இத்தகைய திட்டங்களுக்கு நிதி உதவி பெறவேண்டாம் என்றும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

கடந்த மாதம் 24 ஆம் திகதி கட்டுநாயக்கா விமானத்தளம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலை அடுத்து, நாட்டில் உருவாகியிருக்கும் பெரும் பொருளாதார நெருக்கடியை சமாளிக்கத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு வர்த்தக சமூகம் ஜனாதிபதியைக் கோரியிருந்தது குறிப்பிடத்தக்கது.

(ஐ-3)

## நல்லூரில் பொலீஸார் கடமை

யாழ்ப்பாணம்,ஓக.20

நல்லூர் கந்தசுவாமி கோயிலின் வருடாந்த மஹோற்சவம் நேற்று நடைபெற்ற பூங்காவனத் திருவிழாவுடன் நிறைவுபெற்றது.

இறுதிநாளான நேற்று முருகனின் திருக்கல்யாணக் காட்சிகாண பெரும் எண்ணிக்கையான பக்தர்கள் திரண்டு வந்திருந்ததால் ஆலயப்பகுதி நேற்று மாலை சனத்திரளாகக் காட்சியளித்தது.

நேற்றுமுன்தினம் இரவு யாழ். மாநகரசபை இந்து விடுதிப் பகுதியில் இடம்பெற்ற களேபரத்தை அடுத்து, நேற்று வீதித்தடைகளில் தொண்டர்களுடன் பொலீஸாரும் கடமையில்

(14 ஆம் பக்கம் பார்க்க)

### கப்பல் கட்டணத்தைக் காரணம் காட்டி

## பொருள்களின் விலைகள் கொழும்பில் அதிகரிப்பு!

கொழும்பு,ஓக.20

தலைநகர் கொழும்பில் உணவுப் பொருள் வகைகளின் விலைகள் திடீரென அதிகரித்திருப்பதாக வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடந்த சில தினங்களில் உணவுப் பொருள்களின் விலைகள் குறைந்தது கிலோவுக்கு இரண்டு ரூபாய்களால் உயர்ந்துள்ளதாக புறக்கோட்டை வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்திருக்கின்றன.

இலத்திரனியல் சாதனங்கள் உட்பட ஏனைய பாவனைப் பொருள்களின் விலைகளும் கிடுகிடுவென அதிகரித்துவருகின்றன.

கட்டுநாயக்காத் தாக்குதலை அடுத்து கொழும்பு துறைமுகத்துக்கு வரும் கப்பல்களின் யுத்த அபாயக் காப்புறுதிக் கட்டணங்கள் பெருமளவில் அதிகரித்ததன் விளைவாகவே பொருள்களின் விலைகளில்

(14 ஆம் பக்கம் பார்க்க)

### காப்புறுதிக் கட்டணத்தைக் குறைக்க

## லொய்ட்ஸ் நிறுவனம் அரசுக்கு நிபந்தனை!

கொழும்பு,ஓக.20

இலங்கையில் விமான நிலையம் மற்றும் துறைமுகப் பகுதிகளில் இனிமேல் தாக்குதல்கள் எதுவும் நிகழ்ந்தால் அதனால் ஏற்படும் சேதங்களுக்காக அரசு முதலில் 500 கோடி ரூபாவைச் செலுத்தவேண்டும்.

இதனை அரசு ஏற்றுக்கொண்டால் ஸ்ரீலங்காவுக்குச் செல்லும் கப்பல்களுக்கான யுத்த அபாயக் காப்புறுதிக் கட்டணங்களைக் குறைக்கமுடியும்.

கப்பல்களுக்கான காப்புறுதிக் கட்டணங்களைத் தீர்மானிக்கும் சர்வதேச அமைப்பான லண்டன் லொய்ட்ஸ் நிறுவனம் ஸ்ரீலங்கா அரசுக்கு இவ்வாறு நிபந்தனை விதித்திருக்கிறது.

கட்டுநாயக்காத் தாக்குதலை அடுத்து கப்பல்களுக்கான காப்புறுதிக் கட்டணங்கள் அதிகரிக்கப்பட்டதைத் தொடர்ந்து உருவாகியுள்ள பொருளாதார நெருக்கடி நிலையை அடுத்து ஸ்ரீலங்கா அரசின் உயர்மட்டக் குழு ஒன்று லண்டன் விரைந்து லொய்ட்ஸ் நிறுவன அதிகாரிகளுடன் பேச்சு நடத்தி வருகிறது.


அமைச்சர் ரொனி டி மெல் தலைமையிலான அரசுக் குழுவினரே லண்டன் சென்றுள்ளனர்.

ஸ்ரீலங்காவுக்கு வரும் கப்பல்களுக்கான யுத்த அபாயக் காப்புறுதிக்

(14 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் பேசுவதற்கு அரசு தயாராக உள்ளது!

### ஜனாதிபதி தெரிவிப்பு



கொழும்பு,ஓக.20

சமாதானத்தை அடைவதற்காக விடுதலைப் புலிகளுடன் தொடர்ந்தும் பேச்சு நடத்த அரசு தயாராக இருக்கின்றது.

இவ்வாறு தெரிவித்திருக்கிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க. கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த சமுர்த்தி உத்தியோகத்தர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்துகொண்ட வைபவம் ஒன்று நேற்று ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்றது. அங்கு ஜனாதிபதி உரையாற்றினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

கொழும்புத் துறைமுகத்துக்குவரும் கப்பல்களுக்கு 'லொயிட்ஸ்' நிறுவனம் விதித்துள்ள மேலதிக காப்புறுதிக் கட்டணத்தை இருவார காலத்துக்குள் அரசால் நீக்க முடியும். கட்டுநாயக்காவில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலை அடுத்து அந்த நிறுவனம் கோரியிருந்த உத்தரவாதத்தை அரசு வழங்கியுள்ளது. எந்தக் கட்சி அதிகாரத்துக்கு வந்தாலும் அரச ஊழியர்கள் தமது கடமைகளைத் திறமையாகச் செய்ய வேண்டும்.

ஐ.தே.கட்சியின் தூண்டுதலின் பேரில் - அரசு வீழ்ச்சி காணும் என்ற வகையில் - சில அதிகாரிகள் வதந்திகளைப் பரப்பி வந்தாலும் அரசு ஒருபோதும் தோல்வி காணமாட்டாது.

(14 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா ஆலயத்தில் அதிசய நிகழ்வு

வவுனியா,ஓக.20

வவுனியா தாண்டிக்குளம் பகுதியில் உள்ள ஐயனார் ஆலயத்தில் நேற்று ஓர் அதிசய நிகழ்வு இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது.

அங்குள்ள ஐயனார் சிலையில் இருந்து நேற்று அதிகாலை முதல் கண்ணீர் வழிந்து கொண்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த அதிசயம் பற்றிய செய்தி பரவியதை அடுத்து பெரும் எண்ணிக்கையானோர் நேற்றுப் பகல் ஆலயத்துக்குப் படையெடுத்துச் சென்று அந்த அதிசயத்தைப் பார்வையிட்டுத்

(14 ஆம் பக்கம் பார்க்க)



**- கட்டுநாயக்காவுக்கு அருகே சீதுவைப் பகுதியில் நேற்றுமுன்தினம் வீழ்ந்து நொறுங்கிய 'மிக் - 27' ரக விமானத்தின் சிதைவுகளையே படத்தில் காண்கிறீர்கள்.**

**மரங்களை முறித்துக் கொண்டு வீடுகளின் மீது விமானம் வீழ்ந்ததால் எழுபேர் காயமடைந்ததும் விமானி பலியானதும் தெரிந்ததே.**

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# எத்தகைய நிலைமையையும் எதிர்கொள்ள குடாநாட்டில் அரசுப் படைகள் தயார்நிலை!

## தளுவத்தை தலைமையில் தளபதிகள் நேரில் சென்று ஆராய்வு!

கொழும்பு,ஓக.20

யாழ்.குடாநாட்டைக் கைப்பற்றுவதற்கு அடுத்த வாரங்களில் மீண்டும் விடுதலைப் புலிகள் பெரும் தாககுல்களை ஆரம்பிக்கலாம் என்று பேச்சு அடிபடுகின்ற போதிலும் அரசின் பிரதான புலனாய்வுத் தகவல்கள் ஏதும் அத்தகைய தகவலை உறுதிப்படுத்தவில்லை. எனினும் அரசு இது விடயத்தில் கவனயீனமாக இருக்கத் தயாரில்லை. அரசுப் படைகள் எந்த நிலைமையையும் எதிர்கொள்ள ஆயத்தங்களுடன் தயாராக உள்ளன என்று பாதுகாப்பு ஆய்வாளர் ஒருவர் தகவல் வெளியிட்டுள்ளார்.

கடந்த வெள்ளியன்று தளகர்த்தா ஜெனரல் றொஹான் டி எஸ் தளுவத்தை உயர் படை அதிகாரிகள் சகிதம் யாழ்.குடாநாட்டுக்கு விமானத்தில் சென்று பாதுகாப்பு ஏற்பாடுகளை நேரில் பார்த்து, ஆராய்ந்து உறுதிப்படுத்திக் கொண்டார். அவருடன் கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயா சந்தகிரி, விமானப்படைத் தளபதி ஏயர் மார்ஷல் ஜயலத் வீரக்கொடி, இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் லயனல் பலகல்ல, நடவடிக்கைப் பிரிவுப் பணிப்பாளர் பிரிகேடியர் நிமால் ஜெயசூரிய ஆகியோரும் குடாநாட்டின் பாதுகாப்பு ஏறபாடுகளைச சுற்றிப் பார்வையிட்டனர்.

இந்த உயர்மட்டப் பாதுகாப்பு அதிகாரிகள் குழப்பத்துக்குரிய தனங்கிளப்புப் பிரதேசம் உட்பட யாழ்ப்பாண நகரத்துக்கு தென்கிழக்கே உள்ள படைகளின் முன்னணிப் பிரதேசத்தை நேரில் சுற்றிப் பார்த்தனர். படையினரின் பாதுகாப்பு ஏற்பாடுகளையும் தயார் நிலையையும் அவர்கள் பரிசீலித்தனர்.

பின்னர் குடாநாட்டில் உள்ள இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவற்றின் முக்கிய நிலைகளுக்குப் பொறுப்பான அதிகாரிகளுடன் உயர்மட்டப் பாதுகாப்புக் கலந்துரையாடல் ஒன்றையும் அவர்கள் நடத்தினர்.

பாதுகாப்பு நிலைகள் மீது கெரில்லாக்களின் தாக்குதல் ஏதும் நடத்தப்பட்டால் தகுந்த பதிலடி கொடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் -

எத்தகைய முறையில் பதில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட வேண்டும் என்பதையும் -

அந்த மாநாட்டில் ஜெனரல் தளுவத்தை விளக்கினார்.

இதேசமயம் -

புலிகளின் குரல் வானொலி மூலம ஒன்றும், துண்டுப் பிரசுரம் மூலம் மற்றொன்றுமாக, குடாநாட்டு மக்களுக்கு விடுதலைப் புலிகளால் இரண்டு அறிக்கைகள் வெளியிடப்பட்டதாகக் கூறப்படுவது குறித்து அரச புலனாய்வுப் பிரிவு தனது விசாரணைகளை முடுக்கிவிட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

- இவ்வாறு இராணுவ ஆய்வாளர் ஒருவர் தகவல் வெளியிட்டிருக்கின்றார். (உ)

## கல்முனையில் 67 முறைப்பாடுகள் பதிவு

மட்டக்களப்பு,ஓக.20

கல்முனைப் பகுதியில் கடந்த ஜனவரி மாதம் தொடக்கம் இன்று வரையிலான காலப்பகுதியில் கைது செய்யப்பட்டமை மற்றும் காணாமற்போனமை தொடர்பான 67 முறைப்பாடுகள் மனிதஉரிமைகள் ஆணைக்குழுவினருக்கு கிடைத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வருடத்தில் மட்டும் இதுவரை 52பேர் பல்வேறு சந்தர்ப்பங்களிலும் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-6)



யாழ்.றக்கா வீதியில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் 'கலாமுற்றம்' கலைமண்டபம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் கலந்து கொண்ட யாழ்.மறை மாவட்ட ஆயர் அதிவண. தோமஸ் சவுந்தரநாயகம் மற்றும் யாழ்.மறைக் கோட்ட குரு முதல்வர் ஜே.பி.ஈ. செல்வராஜா திருமறைக் கலாமன்ற இயக்குநர் அருட் தந்தை நீ.மரியசேவி அடிகள் ஆகியோரும் திருமறைக் கலாமன்ற பிரதிநிதிகளும் புதிதாகத் திறந்து வைக்கப்பட்ட கலாமுற்றத்தின் முன்பாக எடுத்துக் கொண்ட படம். (ஐ-6)

# 65 சரக்குக் கப்பல்களின் கொழும்புப் பயணம் ரத்து!

கொழும்பு,ஓக.20

கட்டுநாயக்கா விமான நிலையத் தாக்குதலில் எதிரொலியாக - கொழும்பு வரும் சரக்குக் கப்பல்களின் யுத்த அபாயக் காப்புறுதிக் கட்டணங்கள் திடீரென அதிகரிக்கப்பட்டதை அடுத்து வெளிநாட்டு நிறுவனங்களைச் சேர்ந்த சுமார் 65 கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்துக்கு வருகை தருவதை தவிர்த்துக்கொண்டுவிட்டதாக துறைமுக வட்டாரங்கள் தெரிவித்தன.

கட்டுநாயக்காத் தாக்குதலை அடுத்து வெளிநாடுகளில் இருந்து சரக்குகளை ஏற்றிவரும் கப்பல்களுக்கான யுத்த அபாயக் காப்புறுதிக் கட்டணங்களை வெளிநாட்டுக் கப்பல் முகவர்கள் அதிகரித்திருந்தனர்.

இந்தக் கட்டண உயர்வையடுத்து கொழும்புக்கு சரக்குகளை ஏற்றிவர வேண்டிய 65 கப்பல்கள் வரவில்லை என்று துறைமுக வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை -

கப்பல் காப்புறுதிக் கட்டண உயர்வைக் குறைப்பது தொடர்பாகப் பேச்சு நடத்துவதற்காக அமைச்சர் றொனி டி மெல் தலைமையிலான குழு ஒன்று லண்டன் வந்துள்ளது என்றும் -

இந்தக் குழு நடத்திய பேச்சுக்களின் பயனாக கட்டணங்கள் குறைக்கப்படக் கூடிய சாத்தியம் ஏற்பட்டிருப்பதாகவும் -

லண்டனில் உள்ள இலங்கைத் தூதரகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கட்டணம் குறைக்கப்படலாம் என்று கப்பல் உரிமையாளர் சங்கம் எதிர்பார்ப்பதாக அந்தச் சங்கத்தின் தலைவர் பராக்கிரம திசாநாயக்கா தெரிவித்தார். (ஐ-3)

## 3 அமைச்சுக்கள் மீது ஊழல் விசாரணை?

கொழும்பு,ஓக.20

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசில் அங்கம் வகிக்கும் மூன்று சிரேஷ்ட அமைச்சர்களின் அமைச்சுகள் மீது ஊழல் குற்றச்சாட்டுத் தொடர்பான விசாரணைகளை நடத்த முயற்சி எடுக்கப்பட்டு வருவதாக கொழும்பில் வெளியாகும் ஆங்கில வார ஏடு ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

தேசிய நல்லிணக்க அரசு ஒன்றை அமைக்க வேண்டும் என்று அரசுக்குக் கோரிக்கை விடுத்துவந்த அமைசசர்களான பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ், எஸ்.பி.திஸநாயக்கா, மஹிந்த விஜயசேகர ஆகியோரின் அமைச்சுக்கள் மீதே விசாரணைகள் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

பான் ஏசியா வங்கியிடமிருந்து மூன்று லட்சம் பங்குகள் கொள்வனவு செய்தமை, புடைவைகளுக்கான கோட்டா வழங்கியமை, மரங்களை திருட்டுத்தனமாக வெட்டி அகற்றியமை, ஆகிய விவகாரங்கள் தொடர்பாகவே விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக அப்பத்திரிகை தகவல் வெளியிட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுகளுக்குப் போதிய சான்றுகள் இல்லை என்றும -

அரசுத் தலைமையுடன் அரசியல ரீதியாக முரண்பட்ட காரணத்துக்காகவே அமைச்சர்களைப் பழிவாங்கும் நோக்குடன் இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டவிருக்கின்றன என்று - தகவல் அறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-3)

## குற்றப் பிரேரணை முடியும் வரை

# பிரதம நீதியரசர் சில்வா பதவி விலகி இருக்கவேண்டும்

## ஐ.நா. அதிகாரி கோருகிறார்

கொழும்பு,ஓக.20

பிரதம நீதியரசர் சரத் என்.சில்வாவுக்கு எதிராகக் கொண்டு வரப்பட்டுள்ள அரசியற் குற்றப்பிரேரணை விவாதிக்கப்பட்டு, அதில் இருந்து அவர் விடுவிக்கப்படும் வரை அவர் பதவியில் இருந்து விலகி இருக்க வேண்டும்.

ஐ.நா.நீதித்துறை அதிகாரியான பரம் குமாரசாமி மேற்கண்டவாறு ஜனாதிபதியைக் கேட்டுள்ளார்.

. ஜனாதிபதிக்கு அவர் எழுதியுள்ள கடிதம் ஒன்றிலேயே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இதேவேளை -

ஐ.நாவின் நீதித்துறை அதிகாரியான பரம் குமாரசாமி இலங்கைக்குச் சென்று நீதித்துறையின் சுதந்திர நிலைப்பாட்டை மதிப்பீடு செய்ய அனுமதிக்குமாறும் -

அதற்குப் பொருத்தமான திகதியை அறிவிக்குமாறும் -

ஐ.நா. மனிதவுரிமை ஆணையாளர் மேரி றொபின்சன் இலங்கை அரசுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியிருந்தார்.

இந்தக் கடிதத்துக்கு இலங்கை அரசு இதுவரை பதில் எதனையும் அனுப்பவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)



நல்லூர்க் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவத்தின் தீர்த்தத் திருவிழா அன்று பக்தர்களால் பெரும் எண்ணிக்கையான காவடிகள் எடுக்கப்பட்டன. பருத்தித்துறை வீதி வழியாக ஆலயத்தை நோக்கி வந்த இரு தூக்குக் காவடிகளைப் படத்தில் காணலாம். (ஐ)

# வடக்கு - கிழக்கில் மீண்டும் போலியோ தடுப்புப் பணி

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் இவ்வருடம் மீண்டும் போலியோ தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. கடந்த 5 வருடங்களாக இலங்கை முழுவதும் மேற்கொள்ளப்பட்ட போலியோத் தடுப்புப் பணி வடக்கு - கிழக்கு மாகாணத்தில் பூரணமாக வெற்றியளிக்கவில்லை. இதனால் இவ்வருடம் இப்பிரதேசங்களில் இந்நடவடிக்கையினை மீண்டும் செயற்படுத்துமாறு உலக சுகாதார ஸ்தாபனம் சுகாதார அமைச்சுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது. இதன்படி செப்ரெம்பர் மாதம் 22 ஆம் திகதி முதலாவது சொட்டு மருந்து ஏற்றலும், ஒக்ரோபர் மாதம் 20 ஆம் திகதி இரண்டாவது சொட்டு மருந்து ஏற்றலும் இடம்பெறுவதற்கான ஏற்பாடுகளை சுகாதார அமைச்சு மேற்கொண்டுள்ளதாக திருகோணமலைப் பிராந்திய தொற்று நோய்த் தடுப்பு அதிகாரி வைத்திய கலாநிதி நுதவக்கொடிராஜா தெரிவித்தார்.

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் வன்னி மாவட்டத்திலும் ஏனைய பகுதிகளில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசங்களிலுமே 5 வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட இத்தடுப்பு நடவடிக்கை திருப்தியைத் தரவில்லை என அறிக்கைகள் தெரிவிப்பதாகவும் இத்தடவை திருகோணமலை மாவட்டத்தில் 253 நிலையங்கள் ஊடாக இத்தடுப்பு நடவடிக்கையினை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஐ-145)

# ஜே.வி.பியின் ஆதரவு இன்றியே பிரேரணையை நிறைவேற்ற முடியும்

## எதிர்க்கட்சித் தலைவர் நம்பிக்கை

கொழும்பு,ஓக.20

மக்கள் விடுதலை முன்னணியின் (ஜே.வி.பி.) பத்து நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு இன்றியே அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிறைவேற்ற முடியும் என்று ஐ.தே. கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நம்பிக்கை வெளியிட்டார்.

கடந்த வியாழனன்று நாடாளுமன்ற குழு அறையில் இடம்பெற்ற கூட்டத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணியைச் சேர்ந்த குறைந்த பட்சம் எட்டு உறுப்பினர்கள் அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை ஆதரிப்பர் என்றும் அவர் மேலும் கூறினார்.

இதேவேளை -

அடுத்த மாதம் 7 ஆம் திகதி கூடவுள்ள நாடாளுமன்றம் அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையை விவாதிக்கும் என்றும் -

இதனைத்தவிர்க்க வேண்டுமாயின் பிரதமரும் அமைச்சர்களும் உடனடியாக பதவி விலகி ஆட்சியை அமைக்கும் சந்தர்ப்பத்தை ஐ.தே. கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்க வேண்டும் என்றும -

ஐ.தே. கட்சிப் பேச்சாளர் கருணசேன கொடித்துவக்கு தெரிவித்தார்.

திகதியிடப்படாத இராஜினாமாக் கடிதங்களை பிரதி அமைச்சர்களும் அமைச்சர்களும் ஜனாதிபதியிடம் கையளிக்கத் தேவையில்லை என்றும் - நம்பிக்கையில்லாப் பிரேரணை விவாதத்தின் போது யார் யார் பிரேரணையை ஆதரிக்கின்றார்களோ அவர்களை ஐ.தே. கட்சி உள்வாங்கும் என்று அவர் தெரிவித்தார். (ஐ-3)

## கணிதபாட செயலமர்வு

தென்மராட்சி,ஓக.20

தென்மராட்சி கல்விவலயம் ஏற்பாடு செய்துள்ள ஜி.சீ.ச சாதாரண மாணவர்களுக்கான கணிதபாட விசேட செயல் திட்டத்தின் முதலாவது செயலமர்வு எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது. மேற்படி செயல்திட்டத்துக்கெனத் தெரிவு செய்யப்பட்டுள்ள போதனாசிரியர்களையும், தரம் 11 வகுப்புகளைக் கொண்ட பாடசாலைகளின் அதிபர்களையும் அன்றைய தினம் தவறாது சமுகமளிக்குமாறு வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ம-7-17)

## சூழலை வெப்பமேற்றும் வாயுக்களால்

# பசுபிக்கின் தீவு நாடுகள் கடலில் மூழ்கும் அபாயம்!

வாஷிங்ரன்,ஓக.20

பசுபிக் கடற் பகுதியில் கடல்நீர் மட்டம் உயர்வதால், அப்பகுதியில் அமைந்துள்ள, தீவநாடுகளில் பலவும கடல் நீரில் மூழ்கிவிடும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அதிலும் பசிபிக்பெருங்கடல் தீவு நாடான துவாறுவில் கடல் மட்டத்துக்கு 5மீற்றர்கள் உயரத்துக்கு மேல எந்தப்பகுதியும் இல்லை. ஆகவே கடல் மட்டம் உயருவதால் கடலில் மூழ்கும் அபாயத்தை முதலில் துவாறுவே எதிர்நோக்குகிறது.

தொழிற்சாலைகளிலிருந்து வெளியேற்றப்படும் சூழலை வெப்பமடையச செய்யும் வாயுக்களினாலேயே கடல் நீர்மட்டம் உயரநேரிடுகிறது.

அத்தகைய மாசுபடுத்தும் வாயுக்களை அதிகளவில் வெளிவிடும் நாடு அமெரிக்கா, இதனால் தாம் எதிர் நோக்கும் அபாயம் குறித்து விவாதிக்க, பசுபிக் பெருங் கடல்தீவு நாடுகளின் தலைவர்கள், அமெரிக்க அதிபர் புஷ்ஷுடன் விவாதிக்க அவருடன் பேச்சு நடத்த உள்ளனர்.

உலகளவில் சூழல் வெப்ப மேறுவதைத் தடுப்பது குறித்த 'கியூட்டோ' உடன்படிக்கையை நிராகரிக்கும் புஷ்ஷின் முடிவை விலக்கிக்கொள்ள வேண்டும் என்று தலைவர்கள் அமெரிக்க அதிபரிடம் அப்போது வேண்டுகோள் விடுக்க உள்ளனர்.

இதேசமயம கடல்மட்டம் உயர்வதால் கடலில் மூழ்கும் அபாயத்தை எதிர் நோக்கியுள்ள துவாறுவில் வசிக்கும் சுமார் 12 ஆயிரம் மக்களையும் வேறு பாதுகாப்பான இடத்தில் குடியேற்ற உதவி செய்ய அமெரிக்காவிடம் உறுதிமொழிகளை துவாறு அரசு எதிர்பார்ப்பதாகக் கூறப்படுகிறது.

## பலூனில் உலகைச் சுற்றும் முயற்சியில் அமெரிக்கர் தோல்வி அடைந்தார்

வாஷிங்ரன்,ஒக.20

பலூனில் உலகைச் சுற்றும் முயற்சியில் ஈடுபட்ட அமெரிக்கக் கோஸ்வரர் ஸ்ரீவ் பொசெற், மோசமான வானிலை காரணமாக கைவிட்டுவிட்டார்.

அட்லாண்டிக்கடலின் மீது, இடி, மழை, புயற்காற்று ஆகியவற்றுடன் கூடிய மோசமான வானிலை உருவாகிக் கொண்டிருப்பது தெரியவந்ததையடுத்து, பொசெற் உருகுவே நாட்டு எல்லைக்கருகில் தெற்குப் பிரேஸிலின் வயல்வெளி ஒன்றில், தான பயணித்த பலூனை இறக்கினார்.

13 நாள்கள் நீடித்த பொசெற்றின் வான்பயணத்தின் முடிவில் தரையிறங்கிய பொசெற்றுடன் 'வயர்லெஸ்' தொடர்பை ஏற்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அடர்த்தி குறைந்தவாயு நிரப்பப்பட்ட பாரிய பலூனின் அடியில் இணைக்கப்பட்ட கூடையில் பயணித்து, உலகைச் சுற்றிவர ஏற்கெனவே தான் மேற் கொண்ட 4 முயற்சிகளில் தோல்வி கண்ட பொசெற், தற்போது 5ஆவது முயற்சியிலும் தோல்வியடைந்தமை குறிப்பிடத்தக்கது.

## பிரிட்டனில் ஒரே கர்ப்பத்தில் 6 குழந்தைகளைப் பெற்ற பெண்

லண்டன்,ஓக.20

பிரிட்டனில் பெண்ணொருவர் ஒரே கர்ப்பத்தில் 6 குழந்தைகளைப் பெற்றுள்ளார்.இந்தப் பெண்ணுக்கு மருத்துவர்கள் குறிப்பிட்டிருந்த பிரசவத் திகதிக்கு 12 வாரங்களுக்கு முன்னதாகவே சத்திரசிகிச்சை மூலம் குழந்தைகள் கர்ப்பத்திலிருந்து வெளியே எடுக்கப்பட்டன.

முன்னதாகக் கர்ப்பத்திலிருந்த 6 சிசுக்களில் ஒன்று இறந்துவிட்டதை மருத்துவர்கள் தெரிந்துகொண்டதாலேயே - இறந்த குழந்தையால், உயிருடனுள்ள மற்றக் குழந்தைகளுக்குப் பாதிப்பு ஏற்படக்கூடும் என்பதால் - சத்திர சிகிச்சை மூலம் குழந்தைகள் வெளியே எடுக்கப்பட்டன.

உயிருடனுள்ள மற்றைய குழந்தைகளில் 3 ஆண் சிசுக்களும், இரு பெண் சிசுக்களும் உள்ளன.5 குழந்தைகளில் ஆகக் கூடிய நிறையுள்ள குழந்தை ஒரு கிலோ கிராம் எடை உள்ளது. ஒரே கர்ப்பத்தில் 6 குழந்தைகளைத் தாங்கிய அந்தத் தாயார் லிபிய நாட்டைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஓ)

## கணனியில் ஏற்பட்ட கோளாறால் 'டிஸ்கவரி' திட்டத்தில் இடையூறு

விண்வெளியில் அமைக்கப்பட்டு வரும் சர்வதேச விண் ஆராய்ச்சி நிலையத்தில் கணனிக் கோளாறால், 'டிஸ்கவரி' விண்கலத்திலிருந்து பொருள்களை ஆராய்ச்சி நிலையத்துக்கு மாற்ற முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான் கனடா உட்பட சில நாடுகள் ஒன்றிணைந்து விண்வெளியில் அமைத்து வரும் ஆராய்ச்சி நிலையத்துக்கு 'டிஸ்கவரி' விண்கலத்தின் மூலம் உபகரணங்கள் அனுப்பப்பட்டன.

தற்போது விண்வெளி நிலையத்துடன் இணைந்துள்ள 'டிஸ்கவரி' விண்கலத்திலிருந்து, விண்வெளி நிலையத்துக்கு உபகரணங்களை மாற்ற உதவும் 'ஜைனோஸ்கோப்' கருவிகளைக் கட்டுப்படுத்தும் கணனிகளில் கோளாறு ஏற்பட்டுள்ளதால் திட்டமிட்ட பணியில் இடையூறு ஏற்பட்டுள்ளது. (ஓ-4)

## பெண் சிசுக் கொலையைத் தடுக்க தமிழக அரசு புதிய நடவடிக்கை

சென்னை,ஓக.20

தமிழகத்தில் பெண் சிசுக்கொலையைத் தடுக்க, தமிழக அரசு புதிய திட்டமொன்றை அறிவித்துள்ளது.

12.96 லட்சம் ரூபா செலவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள புதிய திட்டத்தின்படி மதுரை, தேனி, திண்டுக்கல், தர்மபுரி ஆகிய மாவட்டங்களில அனைத்து வசதிகளுடன் கூடிய குழந்தை ஏற்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன.

அத்துடன் பெண் குழந்தைகளை ஏற்கும் மனப்பக்குவத்தை வளர்ப்பது, பெண் குழந்தைகளுக்கு உதவித் தொகை மற்றும் கல்வி உதவி வழங்குவது போன்ற நடவடிக்கைகளும் புதிய திட்டத்தின் கீழ் நடைமுறைப் படுத்தப்படும்.

தமிழகத்தில் நிலவும் சீதன வழமை மற்றம் பெண் அடிமைத்தன சம்பிரதாயங்கள் போன்றவற்றால் வறுமையின் பிடிக்குள் சிக்கிய குடும்பங்களில் பெண் குழந்தை பிறந்தால், பிறந்த உடனேயே அந்தக் குழந்தையை கள்ளிச் செடியின் பாலைப் புகட்டுதல், நெல் மணிகளை சிசுவின் தொண்டைக் குழிக்குள் திணித்தல் ஆகிய வழிகள் உட்பட பல கொடூரமான விதங்களில் கொன்றுவிடும் வழக்கம், பின் தங்கிய மாவட்டங்களாகக் கருதப்படும் மதுரை, தேனி, திண்டுக்கல், தர்மபுரி ஆகிய மாவட்டங்களில் இடம்பெறுகின்றது.

ஆகவே, பெண் சிசுக்களை கொல்லப்படுவதிலிருந்து காப்பாற்றி அவற்றை வளர்க்க தமிழக அரசு தற்போது இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தத் தீர்மானித்துள்ளது.

கடந்த அதி.மு.க. ஆட்சிக் காலத்தில் தொட்டில் குழந்தைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அரசு மையங்களின் வெளியில் வைக்கப்பட்டிருந்த தொட்டிலில் வேண்டாத குழந்தைகளை அவற்றில் பெற்றோர் இட்டால், அந்தக் குழந்தைகளை அரசு பொறுப்பேற்கும் திட்டமே தொட்டில் குழந்தைத் திட்டமாகும். (ஓ-6)

## ஜெயலலிதாவுக்கு தண்டனை விதிக்கப்பட்ட 'டான்சி' வழக்குத் தொடர்பாக கோரிக்கை மனு சமர்ப்பிப்பு

சென்னை,ஓக.20

ஜெயலலிதாவுக்கு 3 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட 'டான்சி' நில பேர வழக்கின் மேன் முறையீட்டு விசாரணையை ஒன்றுக்கும் மேற்பட்ட நீதிபதிகளைக் கொண்ட குழு விசாரிக்க வேண்டுமென மூத்த வழக்கறிஞர்கள், தலைமை நீதிபதியிடம் கோரிக்கை மனு கொடுத்துள்ளனர்.

ஜெயலலிதா சார்பில் தாக்கல் செய்யப்பட்ட மேன்முறையீடு சென்னை உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோதே இந்த வேண்டுகோள் விடப்பட்டுள்ளது.

முன்னதாகக் கடந்த 14ஆம் திகதி வழக்கறிஞர்கள், தலைமை நீதிபதியிடம் 'டான்சி' நில பேர ஊழல் வழக்கின் மேன்முறையீட்டு மனுவை ஒன்றுக்கு மேற்பட்ட நீதிபதிகள் விசாரிக்கக் கோரிய போது, தலைமை நீதிபதி ஜெயின் அந்த வேண்டுகோளை நிராகரித்தது குறிப்பிடத்தக்கது. (ஓ-4)

## மன்னிப்புச்சபை உயர் பதவியில் பங்களாதேஷ் பெண்மணி

லண்டன்,ஓக.20

சர்வதேச மன்னிப்புச் சபையின் புதிய செயலாளர் நாயகமாக பங்களாதேஷைச் சேர்ந்த ஐரின் கான் என்ற பெண்மணி நியமிக்கப்பட்டார்.

சர்வதேச ரீதியாக மனித உரிமைகளைக் காக்கும் - அதற்காகக் குரல் கொடுக்கும் - அமைப்பான சர்வதேச மன்னிப்புச் சபையின் 40 ஆண்டுகால வரலாற்றில், அதன் செயலாளர் நாயகம் பதவியை வகிக்கும் முதல் பெண்மணி என்ற பெருமையுடன், அந்தப் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்ட முதல் ஆசிய நாட்டவர் என்ற சிறப்பையும் ஐரின் கான் பெற்றுள்ளார்.

மன்னிப்புச் சபையின் செயலாளர் நாயகமாக இதுவரை பதவி வகித்த பியரேசேன் ஐ.நா.கல்வி, விஞ்ஞான கலாசார அமைப்பான 'யுனெஸ்கோ' வில் பணியில் சேர்ந்ததால், மன்னிப்புச் சபையின் 7ஆவது செயலாளர் நாயகமாக ஐரின் கான் தற்போது நியமிக்கப்பட்டுள்ளார். (ஓ)

### போதைப்பாக்குக்குத் தடை

சென்னை,ஓக.20

பான் மசாலா, குட்கா போன்ற போதைப்பாக்கு வகைகளுக்கு தமிழக அரசு தடை விதித்துள்ளது.

போதைப் பாக்குவகைகளை உற்பத்தி செய்வது, மாநிலத்துக்குள் கொண்டுவருவது, விற்பனை செய்வது ஆகியவை இனிமேல் குற்றங்களாகக் கருதப்படும். சிறு பக்கெற்றுகளிலும் பீடாக்களிலும் கலந்து விற்கப்படும் போதைப்பாக்குகளை மெல்லுவது, வாய்ப்புற்று நோய்க்கு காரணமாவதாக மருத்துவர்கள் எச்சரித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (ஓ)

## சாதி வேற்றுமை தொடர்பாக ஐ.நா.மாநாட்டில் பிரஸ்தாபம்

### இந்திய மனித உரிமை அமைப்புகள் முடிவு

தென்னாபிரிக்காவில் நடைபெறஉள்ள இனவெறிக்கு எதிரான உலகின் முதலாவது சர்வதேச இன உறவுகள் மாநாட்டில் இந்தியாவில் நிலவும் சாதி வேற்றுமைகள் குறித்து பிரஸ்தாபிக்க இந்திய மனித உரிமை அமைப்புகள் தீர்மானித்துள்ளன.

இதனால் இந்தியாவுக்கு சர்வதேச அரங்கில் தர்மசங்கடம் ஏற்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையை எதிர்கொள்வதைத் தவிர்ப்பதற்காகவே இந்தியாவின் தேசிய மனித உரிமைகள் ஆணைக் குழு மேற்படி மாநாட்டில் உத்தியோகபூர்வமாக பங்கேற்பதைத் தவிர்த்துள்ளது.

டேர்பன் நகரில் எதிர்வரும் 31 ஆம் திகதி ஆரம்பமாகி 8 நாள்கள் நடைபெறஉள்ள மாநாட்டில் 200இக்கும் அதிகமான அரச சார்பற்ற மனித உரிமை அமைப்புகள் கலந்துகொள்ளவுள்ளன.

இந்த மாநாட்டில் இந்திய அரசுக்கு தர்மசங்கடத்தை ஏற்படுத்துவது தமது நோக்கமல்ல என்றும -

சாதி வேற்றுமைக் கொடுமை இந்தியாவில் மிக பாரிய பிரச்சினையாக உள்ளதை எடுத்துக் காட்டுவதே தமது எண்ணமென்றும் -

தாழ்த்தப்பட்ட மக்களுக்கான மனித உரிமைகள் குறித்த தேசிய பிரசார அமைப்பின் அமைப்பாளர் மார்ட்டின் மக் வென் கூறியுள்ளார்.

சாதி வேற்றுமை, இனப் பாகுபாட்டின் முக்கியமான ஒரு பாகம் என்பதை இந்திய அரசிடம் பல முறைகள் எடுத்துக்கூறியுள்ளபோதும், அதனை ஏற்க வன்மையாக மறுத்து வரும் இந்திய வெளிவிவகார அமைச்சகம், இது இந்திய எல்லைக்குட்பட்ட விவகாரம் என்று கூறி இந்தியாவுக்குள்ளேயே இந்த விவகாரம் கையாளப்படவேண்டுமென அது வலியுறுத்துவதாகவும் மக் வென் மேலும் தெரிவித்துளார்.

இதேசமயம் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக மாநாட்டில் குரல் கொடுக்கப்படுவதை அகில இந்திய கத்தோலிக்க சபை வரவேற்றுள்ளது.

இந்தியாவில் மட்டுமல்லாது இலங்கை, பங்களாதேஷ், பாகிஸ்தான், சிங்கப்பூர், ஜப்பான் ஆகிய நாடுகளிலும் சாதி வேற்றுமைகள் காணப்படுவதாகவும் -

இந்துக்களிடம் மட்டுமன்றி, கிறிஸ்தவர்கள், சீக்கியர்கள், பௌத்தர்கள், முஸ்லிம்கள் ஆகியோரிடையேயும் சாதிப் பிரிவுகள் இருப்பதாகவும் - இந்தியக் கத்தோலிக்க சபையின் பொதுச் செயலாளர் நாயகம் ஜோன் தபால் தெரிவித்தார்.

மலேசியா, தென்னாபிரிக்கா, பிஜி, கரிபியன், லத்தீன் அமெரிக்கா ஆகிய நாடுகளுக்குச் சென்று குடியேறிய இந்தியர்கள் சாதி வேற்றுமையையும் தம்மோடு எடுத்துச் சென்று அந்த நாடுகளில் விதைத்து விட்டதாக ஜோன் தபால் கவலை தெரிவித்தார். (ஓ)







தென்னாபிரிக்காவின் டர்பன் நகரில் இடம்பெறவுள்ள இனவெறிக்கு எதிரான ஐ.நா.மாநாட்டில், இஸ்ரேலின் பலஸ்தீன எதிர்ப்பு நடவடிக்கைகளை இனவெறியாகக் கருதும்படி அரபு நாடுகள் கோரிக்கை விடுக்க உள்ளன.

இஸ்ரேலுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் மேற்படி மாநாட்டில் கலந்து கொள்ள அமெரிக்கா மறுத்துள்ளது. அமெரிக்காவின் இந்த முடிவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தென்னாபிரிக்காவில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் முன்னால் நடந்த ஆர்ப்பாட்டத்தின் போது எடுக்கப்பட்ட படங்கள் இவ்வை.

# வங்கிப் பணிகளில் நவீன முறைகளை இங்கும் அறிமுகம் செய்ய வேண்டும்

## 'வாடிக்கையாளருடன் உறவு' நிகழ்வில் துணைவேந்தர் உரை

யாழ்ப்பாணம் ஒக 20

யாழ்ப்பாண மக்கள் வங்கிகளின் சேவைகளை இலகுவாகப் பெற வசதியாக வங்கிப் பணிகளில் நவீன முறைகளை இங்கும் அறிமுகம் செய்ய வேண்டும். வங்கிச்சேவைகளைக் கணனிமயப்படுத்துவதுடன் மக்கள் தமக்குத் தேவையான நேரத்தில் பணத்தைப்பெற வசதியாக தன்னியக்கம் கொடுப்பனவு இயந்திரங்களை அறிமுகம் செய்வது நல்லது.

யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மக்கள் வங்கி ஏற்பாடு செய்த ''வாடிக்கையாளருடன் உறவு'' என்ற நிகழ்ச்சி கடந்த 12 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். பல்கலைக் கழக முகாமைத்துவ மண்டபத்தில் மக்கள் வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் சி. இளம்பிறைநாதன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே துணைவேந்தர் இவ்வாறு தெரிவித்தார்.

துணைவேந்தர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

வடக்கில் தொடரும் யுத்தம் காரணமாக மக்கள் பெரிதும் பாதிப்புக்களை எதிர்நோக்குகின்றனர். இந்தப் பாதிப்புக்களில் இருந்து தனியார் வர்த்தகர்கள், கூட்டுறவுச் சங்கங்கள், சமாசங்கள் போன்றவை தம்மைக் கட்டி எழுப்பி மக்களுக்குப் பணிபுரிய வெளிநாட்டு உதவிகள் பெரியளவில் கிடைப்பதில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில்மக்கள் வங்கி உதவி தேவைப்படுகின்றது. இந்தச் சேவையை மக்கள் வங்கி திறம்படச் செய்து வருகின்றது. அதன்பணி மேலும் விரிவுபடுத்தப்படவேண்டும்; விஸ்தரிக்கப்படவேண்டும்.

கைத்தொழில் வாண்மையுள்ள பண்டத்தரிப்பு, சங்கானை, கொடிகாமம் போன்ற இடங்களில் புதிய கிளைகளை ஆரம்பிப்பதன் மூலம் மக்கள் வங்கி தனது சேவைகளை விரிவுபடுத்த வேண்டும்.

இதன் மூலமே சம்பந்தப்பட்ட பகுதி மக்களிடையே சேமிப்புப் பழக்கத்தை விரிவுபடுத்தக் கூடியதாக இருக்கும்.

ஏழ்மை நிலையிலுள்ள மக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்துவதில் மக்கள்வங்கி முன்னணியில் திகழ்கிறது. எனினும் இத்தகைய தொடர்புகளின் மூலம் கிராமிய மட்டத்தில் திரட்டப்படும் பணத்தை கொழும்பில் முதலீடு செய்வது மிகப்பெரும் குறைபாடாகும் — என்றார்.

யாழ். பலநோ. கூட்டுறவுச் சங்கத்தலைவர் சி.வி.கே. சிவஞானம் தமது உரையில்:-

மக்கள் வங்கியின் கூட்டுறவுத்துறையுடனான 40 ஆண்டு காலத் தொடர்பை எவரும் அவ்வளவு எளிதில் மறந்துவிட முடியாது. இது வரை எமது சங்கத்திற்கு எத்துணை இழப்புக்கள் ஏற்பட்டதுஎன்பதைப் பொதுமக்கள் சொல்லித் தெரிய வேண்டியதில்லை. இராணுவம் ஷெல் அடியுடன் முன்னேறுகிறது என்றால் முதலில் உடைக்கப்படுவது கூட்டுறவுச் சங்கங்களே!

எமது சங்க வேலைகளை நாம் பார்த்துக்கொள்வோம். அதில் தேவையின்றி வங்கிகள் தலையிட வேண்டிய அவசியமில்லை. எமக்குள்ள உரிமைகளை நாம் விட்டுக் கொடுக்க முடியாது ஆனால் எமக்குச் சலுகைகளை வழங்குவது வங்கியின் கடமை.

அண்மைக்கால வங்கியின் செயற்பாடுகளில் வரவேற்கத்தக்க சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. எமது உணர்வுகளையும் மதித்து எமது சங்கத்தின் சுய கௌரவத்தையும் பாதுகாக்கும்படியே நாம் கேட்கிறோம்.— என்றார்.

விழாவுக்குத் தலைமை வகித்து உரையாற்றிய மக்கள் வங்கியின் உதவிப் பொது முகாமையாளர் சி. இளம்பிறைநாதன் கூறியதாவது:—

இன்றைய ''வாடிக்கையாளர் உறவு தின'' நிகழ்ச்சியை பருத்தித்துறை, சுன்னாகம் போன்ற பிரதேசங்களிலும் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. வாடிக்கையாளர்களுடைய சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு காணவும், தேவையேற்படின் சட்ட நடவடிக்கைகள் எடுக்கவும் நாம் ஏற்பாடு செய்துள்ளோம்.

வங்கிகளுக்கு இடையே ஏற்பட்டுள்ள போட்டி சிறந்த சேவைக்கு வழி வகுத்துள்ளது — என்றார்.

வர்த்தகர் சங்கத்தின் சார்பில் செயலாளர் உரையாற்றும் போது:—

இந்நிகழ்வுக்கு அழைப்பிதழ் கடிதத்துடனே வர வேண்டும் என்று கேட்டுக் கொண்டது வாடிக்கையாளர்களை அவமதிப்பதாகும். இது வங்கியின் செயற்பாடுகளில் இருந்து வாடிக்கையாளர்களைத் தூரப்படுத்திவிடும்.

இக் கூட்டத்தில் வங்கியின் முகாமையாளர்கள் அனைவரும் காணப்படுகிறார்கள். இவர்கள் இங்குள்ளவேளையில் எந்தவொரு வாடிக்கையாளரும் தமது குறைகளை முன்வைப்பார்களா? — என்றார்.

யாழ். பல்கலைக்கழகம் சார்பில் மாணவப் பிரதிநிதி ஒருவர் உரையாற்றுகையில் —

யாழ். பல்கலைக்கழக மக்கள் வங்கிக்கிளையில் பல்கலைக்கழக மாணவர்களினதும், ஊழியர்களினதும், விரிவுரையாளர்களினதும் கருமங்களுக்கு முன்னுரிமை வழங்கப்படாவிடில் இந்தக் கிளை இங்கு இயங்குவதில் பயனில்லை. அதற்காக ஏனைய மக்களின் கருமங்கள் தடைப்படவும் கூடாது— என்றார்.

யாழ். பல்கலைக்கழக வணிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் இ. இரட்ணம் உரையாற்றுகையில் —

மக்கள் வங்கியின் கொள்கைகளை தேசிய ரீதியிலும், பிரதேச ரீதியிலும் நோக்கலாம். வாடிக்கையாளர்கள் சிறிய தொகைகளையே மக்கள்வங்கியில் வைப்புச் செய்துள்ளார்கள். அவர்களின் பெருந்தொகையான பணம் ஏனைய வங்கிகளில் உள்ளது. இது மக்கள் வங்கியின் தேசியக் கொள்கையில் பாதிப்பை ஏற்படுத்தும்.

மேலதிகப்பற்றில் தரகு விதிக்கும் முறையில் மாற்றம் தேவை. குறிக்கப்பட்ட மேலதிக தொகைக்கேற்ப குறிக்கப்பட்ட தரகை விதிக்கலாம்— என்றார்.

இந்நிகழ்வில் வங்கி அதிகாரிகள் மற்றும் வர்த்தகர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

(க-7-9)

# பிரிட்டிஷ் நீதித்துறைக் குழுவினர் இலங்கை வருவதற்கு விருப்பம்

## ஆனால் அரசு அனுமதி வழங்கவில்லை

கொழும்பு, ஓக. 20

இலங்கையின் நீதித்துறைச் செயற்பாடுகளை மதிப்பீடு செய்வதற்காகச் சர்வதேச சட்டவாளர் சங்கத்தின் முன்னாள் தலைவரும் பிரிட்டனின் ஆளுங்கட்சி எம். பியுமான பிரெனென்பிரபு தலைமையிலான குழு இலங்கைக்கு வர விருப்பம் தெரிவித்ததாகவும் ஆனால் அதற்கான அனுமதியை அரசு வழங்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பிரெனென் தலைமையில் குழு ஒன்று இலங்கை வருவதற்காக பிரிட்டனில் உள்ள இலங்கைத் தூதரகத்திடம் அனுமதி கோரியதாகவும் -- அந்தக் குழு இலங்கை வருவதற்கு 'விஸா' வழங்கத் தூதரகம் மறுத்து விட்டதாகவும்— கூறப்பட்டது.

'போதிய முன்னறிவித்தலுடன் விண்ணப்பித்தால் அனுமதி வழங்க முடியும்' என்று வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் இது குறித்துக் கருத்து வெளியிட்டபோது தெரிவித்துள்ளார்.

சர்வதேச சட்டத்தரணிகள் சங்கத்தின் முன்னாள் தலைவரும், ஜனாதிபதி சட்டத்தரணியுமான டெஸ்மன்ட் பெர்னாண்டோ இது பற்றிக் கருத்துக் கூறுகையில் தெரிவித்ததாவது:-

ஜனநாயகம் இங்கு நெருக்கடிகளை சந்தித்திருப்பது பற்றி ஆய்வு செய்வதற்கு இலங்கை வரவிருந்த பிரனென், எதிர்க்கட்சித் தலைவரையும் நீதியமைச்சர் பட்டி வீரக்கோனையும் சந்திப்பதற்கு ஏற்பாடுகளைச் செய்திருந்தார். பிரன்னென் வெளியுறவு அமைச்சரையும் சந்திக்க விருப்பம் தெரிவித்திருந்தார். ஆனால் வெளியுறவு அமைச்சர் வெளிநாடு செல்ல விருப்பதால் சந்திப்புக்கு நேர மொதுக்க முடியவில்லை.

இந்நிலையிலேயே பிரன்னெனுக்கும் அவரது குழுவினருக்கும் 'வீஸா' மறுக்கப்பட்டது இது குறித்து தூதரக வட்டாரங்கள் தகவல் தருகையில் இலங்கையில் பிரன்னென் சந்திக்க விருப்பம் தெரிவித்த பிரமுகர்கள் நாட்டில் அச்சமயம் தங்கி இருக்க மாட்டார்கள் அதனாலேயே 'விஸா' மறுக்கப்பட்டது என்று கூறப்பட்டதாக டெஸ்மன்ட் பெர்னாண்டோ தெரிவித்தார்

(ஐ-3)

### அரச ஊழியரின் மொழித் தேர்ச்சிக்காக

# வருடத்தில் இரு தடவைகள் வாய் மொழிப் பரீட்சைகள்

குருநகர், ஓக. 20

ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளில் எழுத்து மூலத் தேர்வுகளில் தேர்ச்சி பெற்று அரச அலுவலகங்களில் பணியாற்றும் உத்தியோகத்தர்களுக்கு வருடத்தில் இரு தடவைகள் வாய்மொழிப் பரீட்சையை நடத்த வடக்கு-கிழக்கு மாகாணப் பொது நிர்வாக அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

மேற்படி அமைச்சின் செயலாளர் க. பரமலிங்கம் வடக்கு—கிழக்கு மாகாணத்திலுள்ள பிரதேச செயலகங்கள், திணைக்களங்கள் ஆகியவற்றுக்கு இது தொடர்பான சுற்றறிக்கையொன்றை அண்மையில் அனுப்பி வைத்துள்ளார்.

இதேவேளை —

இவ்வாறு தேர்ச்சி பெற்றுள்ளவர்களின் விவரங்களை அவர்கள் குறிப்பிட்ட மொழிகளில் வாய்மொழித் தேர்வுப் பரீட்சைக்குத் தோற்ற வசதியாக உடனடியாகத் தமக்கு அனுப்பி வைக்குமாறும் அவர் திணைக்களத் தலைவர்களைக் கேட்டுள்ளார்.

(ம-7)

# சந்நிதி முருகன் உற்சவம் பக்திபூர்வமாக ஆரம்பம்

வடமராட்சி, ஓக. 20

வரலாற்றுப் பெருமை மிக்க தொண்டமனாறு செல்வச் சந்நிதி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் நேற்றுக் காலை 10 மணிக்கு பக்தி பூர்வமாகக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

நேற்றைய கொடியேற்றத் திருவிழாவின்போது குடாநாட்டின் பல பகுதிகளிலும் இருந்து வந்த பக்தர்கள் ஆலயத்தில் திரண்டிருந்தனர்.

ஆலயச் சூழலில் பக்தர்களின் வசதி கருதி சுகாதார மற்றும் வசதிகள் செய்யப்பட்டிருந்தன. விசேட போக்குவரத்துச் சேவைகளை வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறைச் சாலை ஏற்பாடு செய்திருந்தது.

(ஐ-173-109)

## வயோதிபர் காயம்

தென்மராட்சி, ஓக. 20

பனை மரம் முறிந்து விழ்வதைக்கண்ட வயோதிபர் தலைதெறிக்க ஓடியபோது சிறு பள்ளத்தில் கால் அகப்பட்டதில் வீழ்ந்து படுகாயமடைந்தார்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் ஆன்னாலை தெற்கில் இடம்பெற்றது.

அப்பகுதியைச் சேர்ந்த கே. வல்லிக்குட்டி (வயது 80) என்னும் வயோதிபரே தொடை எலும்பு முறிந்த நிலையில் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(ஐ-117)

# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஓக. 20

யாழ். போதனா வைத்திய சாலை சாமுண்டாதேவி சமேத ஸ்ரீ சிவஞானவைரவ சுவாமி தேவஸ்தான, மணவாளக் கோல அஷ்டோத்திர சத கலசசங்காபிஷேகம் எதிர்வரும் 31 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும்.

இதற்கான கிரியைகள் 30 ஆம் திகதி ஆரம்பமாகும். காலை 10 மணிக்கு நடைபெறும் மகாசங்காபிஷேகத்தைத் தொடர்ந்து 11 மணிக்கு விசேட பூசை இடம்பெறும். 12 மணிக்கு மகேஸ்வர பூசை நடைபெறும்.

2 மணிக்கு இடம்பெறும் வசந்தமண்டபப் பூசையை அடுத்து சுவாமி வீதிஉலா வரும் நிகழ்வும் இடம்பெறும்.

(ம-15)

* ★ ★

தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான வருடாந்த மஹோற்சவம் இன்று 11 மணிக்கு இடம்பெறும் கொடியேற்ற வைபவத்துடன் ஆரம்பமாகிறது.

தொடர்ந்து 12 நாள்கள் இடம்பெறும் இத் திருவிழா நிகழ்வில் எதிர்வரும் 30 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். சப்பறத்திருவிழா 29 ஆம் திகதி மாலை 3 மணிக்கு நடைபெறும்.

(ம-15)

* * *

வல்வை நெடியகாடு — ஞானதெணி ஞானவைரவர் ஆலயத்தின் சம்புரோகண மகாகும்பாபிஷேகம் எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை நடைபெறவுள்ளது.

கும்பாபிஷேகக் கிரியைகள் இன்று திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன 23 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8 மணிமுதல் மாலை 4 மணி வரை பக்தர்கள் எண்ணெய்க் காப்பு சாத்துதல் நடைபெறும்.

கும்பாபிஷேகக் கிரியைகளை ''கிரியா க்ரம ஜோதி'' பிரம்மஸ்ரீ பரமேஸ்வர மனோகரக்குருக்கள் நிகழ்த்துவார்.

(ம-7)

★ ★ ★

வல்வெட்டித்துறை தெடியகாடு திருச்சிற்றம்பலப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 24 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

முதலாம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை ஊறணிசமுத்திரத்தில்தீர்த்த உற்சவமும் இடம்பெறும்.

(ம-7)

★ ★ ★

சுழிபுரம், ஓக. 20

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட எழுந்தருளி மூர்த்திகளுக்குரிய மகாகும்பாபிஷேகம் நாளைமறுதினம்புதன்கிழமை நடைபெறவுள்ளது.

(ம-7-28)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஓக. 20

கைதடி இணுங்கித் தோட்டம் அருள்மிகு கந்தசுவாமி ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெறவுள்ளது.

அடுத்த மாதம் முதலாம் திகதி தேர்த்திருவிழாவும் இரண்டாம் திகதி தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

(ம-7)

உதயன்

## கெடு குடி சொற் கேளாது!

கட்டுநாயக்கா விமானத் தளம் மற்றும் விமான நிலையம் ஆகியவற்றின் மீதான தாக்குதலினால் நாட்டுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு - விபரீதம் - நாளுக்கு நாள் பல்வேறு வடிவங்களில் விஸ்வரூபம் எடுத்து வருவதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இலங்கையில் மோசமடைந்து வரும் அரசியல் குழப்பங்களால் நாட்டின் பொருளாதார நிலைமை விரைவில் மிக நெருக்கடியான கட்டத்தை அடையப்போகின்றது என்றும் -

உள்நாட்டு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் முயற்சிகள் ஒதுக்கித் தள்ளப்பட்டு யுத்தம் மிக தீவிரமடையும் அபாயநிலை உள்ளது என்றும் -

கொழும்பில் உள்ள இராஜதந்திரிகளும் ஆய்வாளர்களும் எச்சரிக்கை விடுத்திருப்பதாக முதலில் செய்திகள் வெளியாகின.

"கட்டுநாயக்காத் தாக்குதலைத் தொடர்ந்து நாட்டில் வேலையில்லாப் பிரச்சினையும் பணவீக்கமும் மிக மோசமாக அதிகரிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது; ஏற்றுமதி வர்த்தகம் அதலபாதாளத்தில் வீழப் போகின்றது. இது விடயத்தில் ஜனாதிபதி பாராமுகமாக இருப்பது கண்டனத்துக்கு உரியது" - என்று இலங்கை துறைமுகக் கப்பல் முகவர் சங்க உபதலைவர் பராக்கிரம திஸநாயக்கா தெரிவித்திருந்தார்.

"கட்டுநாயக்காத் தாக்குதலை அடுத்து கொழும்புத் துறைமுகத்துக்கு வரும் கப்பல்களுக்கான யுத்த அபாயக் காப்புறுதிக் கட்டணம் திடீரென அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனால் இரண்டாவது வாரமாகக் கப்பல்கள் கொழும்புத் துறைமுகத்தில் தரிக்காமல் செல்லுகின்றன. இந்த நிலைமை தொடர்ந்தால் கொழும்புத் துறைமுகத்தின் வர்த்தகமே அடியோடு சரிந்து படுத்துவிடும்; கொழும்புத் துறைமுகச் செயற்பாடு முற்றாக முடங்கி விடும்" -இப்படி ஆசிய சிறு கப்பல்கள் சங்கத்தின் தலைவர் ட்றிட்ஸ்ரன் ஹேராவிற் எச்சரித்துள்ளார்.

பாதுகாப்பு ஸ்திரமற்ற - பலவீன - நிலைமை காரணமாகக் கொழும்பில் உள்ள தமது தூதரகங்களை மூடுவது அல்லது தரம் குறைப்பது குறித்து வெளிநாட்டுத் தூதரகங்கள் ஆலோசிக்கத் தொடங்கிவிட்டன.

"கட்டுநாயக்கா விமான நிலையத்தைத் தாக்கி அழிப்பதன் மூலம் அரசாங்கத்தின் பொருளாதாரத்தைச் சீர்குலைக்க புலிகள் நோக்கம் கொண்டிருந்தனர். அவர்களின் அந்த நோக்கம் வெற்றியடைந்துள்ளது. அரசாங்கம் உடனடியாக யுத்தத்தை நிறுத்தி, புலிகளுடன் பேச்சு நடத்தி, சமரச நிலையை ஏற்படுத்த முயற்சிக்க வேண்டும். அப்படிச் செய்யத் தவறினால் உல்லாசப் பயணத்துறையின் வீழ்ச்சியைக் கட்டுப்படுத்தவே முடியாது; அத்துடன் அதனால் ஏற்படும் பாரிய பொருளாதார வீழ்ச்சியையும் எவராலும் தடுத்து நிறுத்த முடியாமலும் போய்விடும்" - என்று உல்லாசப் பயணத்துறை நிறுவனங்கள் அரசை எச்சரித்திருப்பதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

'கெடுகுடி சொற் கேளாது' என்பது போல இந்த ஆலோசனைகளை கேட்கும் நிலையில் அல்லது அவற்றின் ஆழத்தைப் புரிந்துகொள்ளும் நிலையில் ஸ்ரீலங்கா அரசோ அல்லது அதன் தலைமைத்துவமோ இருப்பதாகத் தெரியவில்லை.

'கெடுவான் கேடு நினைப்பான்' என்ற வாய்மொழிக்கு இணங்க, தொடர்ந்தும் யுத்த முனைப்பில் அரசு தீவிரமாக இருப்பதாகத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

யுத்த வெறியைக் கைவிட்டு, அரசு புலிகளுடன் சமாதானம் பேசி, அமைதித் தீர்வைக் காண்பதற்கு கீழிறங்கி வராவிட்டால் நாட்டின் பொருளாதார நிலைமை மிக மோசமடைவது தவிர்க்க முடியாததாகிவிடும். அதன் பாதிப்பு நாட்டின் குரல்வளையையே நெருக்கும்போது அதைத் தாங்கமுடியாது, அரசு விட்டுக்கொடுத்து கீழிறங்கிப் போகும் சமயம் அது 'குதிரை ஓடியபின் லாயத்தை மூடிய' கதையாகிவிடும். எனவே இது விடயத்தில் முன்னெச்சரிக்கையாக - சரியான ஆலோசனைகளைப் பெற்று - சந்திரிகா அரசு நடந்து கொள்வது அவருக்கும் நல்லது; நாட்டுக்கும் நல்லது.

விமானம் விழுந்த இடத்துக்குச் சென்ற

# ஏ.பீ.சி. நிறுவன செய்தியாளர் படை அதிகாரியால் தாக்கப்பட்டார்

கொழும்பு,ஓக.20

நேற்று முன்தினம் கட்டுநாயக்கா சீதுவைப் பகுதியில் விமானப் படையின் 'மிக்-27' குண்டுவீச்சு விமானம் ஒன்று விழுந்து நொறுங்கிய சம்பவம் குறித்து செய்திகளைச் சேகரிக்க உடனடியாக சம்பவ இடத்துக்குச் சென்ற செய்தியாளர் ஒருவர் விமானப்படை அதிகாரியினால் தாக்கப்பட்டார்.

ஏ.பீ.சி. செய்தி நிறுவனத்தில் கடமையாற்றும் செய்தியாளரான உதய விஜேசிங்க என்பவரே தாக்குதலுக்கு உள்ளானவராவார்.

அரசின் தகவல் திணைக்களத்தினால் தனக்கு வழங்கப்பட்ட செய்தியாளர் அடையாள அட்டையை விமானப்படை உயர் அதிகாரியிடம் தான் காண்பித்ததாகவும் -

ஆனால் அதனை உதாசீனப்படுத்திய அந்த அதிகாரி தன்னைத் தாக்கியதாகவும் -

இந்தச் சம்பவத்தை அங்கிருந்த ஏனைய செய்தியாளர்கள் நேரடியாகப் பார்த்தனர் என்றும் -

உதய விஜேசிங்க தெரிவித்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ஏ.பீ.சி. நிறுவனம், தகவல் ஊடகத் துறை அமைச்சர் அநுர பிரியதர்ஷன யாப்பாவிடமும், விமானப்படைத் தளபதியிடமும் முறையிட்டுள்ளது.

தகவல் திணைக்களப் பணிப்பாளர் ஆரிய ரூபசிங்க இது தொடர்பாகக் கூறுகையில் -

இந்தச் சம்பவம் பற்றிய ஒளிநாடாவைத் தான் பார்த்ததாகத் தெரிவித்ததுடன், கண்டிக்கப்பட வேண்டிய இந்த விடயத்தில் சம்பந்தப்பட்ட விமானப்படை அதிகாரி மீது நடவடிக்கை எடுக்குமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலர், விமானப் படைத் தளபதி மற்றும் பொலீஸ் மா அதிபர் ஆகியோரைக் கேட்டுள்ளதாகவும் கூறினார். (ஒ)

## நாட்டு நடப்பு

அருங்கொடி ஏறிற்றன்றோ?

வானுயர் கோபுரம் சூழ
வண்ணமர் தெல்லியூரில்
தேனுடன் அமுது சொட்டும்
செப்பரும் தெய்வத் தாயாள்
விண்ணவர் வியந்து போற்ற
விரும்பியே கோயில் கொண்டாள்
தானமும் தவமும் ஒன்றாய்
தங்கம்மா தந்து நிற்க
கானமா மழை தன்னை
கருணையாய் சொரிவாள் துர்க்கை
அந்ன எம் துயர் களைய
அருங் கொடி ஏறிற்றன்றோ?

- விகடகவி.

# இரசாயன ஆயுதக் கொள்வனவை அரசு ஒருபோதும் மறுக்கமுடியாது

## ஜோசப் எம்.பி. ஜனாதிபதிக்கு வலியுறுத்து

கொழும்பு,ஓக.20

பாரிய அழிவுகளை ஏற்படுத்தும் இரசாயன ஆயுதங்களைத் தாம் கொள்வனவு செய்யவில்லை என்று அரசு மறுப்புத் தெரிவித்திருப்பதில் ஆச்சரியமில்லை. ஏனெனில் இந்தக் கொடிய இரசாயன ஆயுதங்களைக் கொள்வனவு செய்ததற்கான சாட்சியங்களையும், ஆதாரங்களையும் அரசு ஒருபோதும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. எனவே வடக்கு, கிழக்கு தமிழர்களின் சட்டபூர்வமான அபிலாஷைகளை இதுபோன்ற கொடிய ஆயுதங்களின் மூலம் அடக்கி, ஒடுக்கமுடியாது என்ற உண்மையை உணர்ந்து, மேலும் தாமதியாது நேர்மே அரசின் உதவியுடனான சமாதான முயற்சியை முன்னெடுத்துச்செல்வதுடன், உடனடியாக ஒரு யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டு வடக்கு - கிழக்கில் இயல்பு நிலையை ஏற்படுத்தி, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடையை நீக்கி, புலிகளுடன் உடனடிப் பேச்சு வார்த்தைகளை ஆரம்பித்து, யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதன் மூலமே பொருளாதார வீழ்ச்சியில் இருந்து இந்த நாட்டை காப்பாற்றமுடியும்.

இப்படி மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடம் வலியுறுத்தியுள்ளார்.

வடக்கு - கிழக்கு தமிழர்களுக்கு எதிராக உபயோகிக்கும் நோக்குடன் அரசு இரசாயன ஆயுதங்களைக் கொள்வனவு செய்துள்ளதாகக் கூறப்படும் விடயம் குறித்தும் இவ்வாயுதங்களை உபயோகிப்பதன் மூலம் ஏற்படும் பாரிய அழிவுகள் சம்பந்தமான பல விவரங்களை உள்ளடக்கியும் ஜனாதிபதிக்கு ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி. எழுதியுள்ள கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

வடக்கு, கிழக்கில் வதியும் தமிழ மக்களுக்கு முழுமையான பாதிப்பை ஏற்படுத்தும் கொடிய இரசாயன ஆயுதங்களை வடக்கு, கிழக்கில் நடைபெறும் யுத்தத்தை எதிர்கொள்ள பாதுகாப்பு அமைச்சு கொள்வனவு செய்துள்ளது என்ற செய்தினைக் கண்ணுற்று நான் பெரும் கவலையும், அதிர்ச்சியும் அடைகின்றேன்.

ஆர்.பீ.ஓ. ஸ்மெல் ரொக்கட் லோஞ்சர் (R.P.O. SHMEL ROCKET LAUNCHER) என்ற தொழில்நுட்ப பெயருடைய ஆயிரம் ஆயுதங்களைப் பாதுகாப்பு அமைச்சு கொள்வனவு செய்துள்ளதென்ற உண்மை வெளியாகியுள்ளது. ரஷ்ய நாட்டில் ஒரேயொரு கம்பனியால் தயாரிக்கப்படும் இவ்வாயுதங்களை ரஷ்யாவிலிருந்து உக்ரேனிய நாட்டு கம்பனி ஒன்றின் மூலம் வரவழைத்து, பிரிட்டிஷ் ஆயுதக் கொள்வனவு கம்பனி மூலமாக பாதுகாப்பு அமைச்சு கொள்வனவு செய்துள்ளது என்ற உண்மையை நான் அறிந்துள்ளேன்.

நிலைமை இப்படியிருக்கும் போது இதுபோன்ற அழிவுகளை ஏற்படுத்தும் இரசாயன ஆயுதங்களைத் தாம் கொள்வனவு செய்யவில்லை என்று அரசாங்கம் மறுப்புத் தெரிவிப்பதில் எதுவித ஆச்சரியமும் இல்லை. காரணம் இக்கொள்வனவு சம்பந்தமான ஆதாரங்களையோ அல்லது உண்மையையோ அரசு ஒருபோதும் மறைக்கவோ, மறுக்கவோ முடியாது. இது சம்பந்தமாகத் தங்கள் இராணுவப் பேச்சாளர் சென்ற வாரம் பி.பி.ஸி. சேவையின் சிங்கள சேவையான 'சந்தேசிய' வானொலிக்கு அளித்த பேட்டியில் "இந்த ஆயுதத்தைக் கொள்வனவு செய்துள்ளோம். ஆனால் அதனைப் பாவிக்கமாட்டோம்" என்ற உண்மையையும் வெளியிட்டுள்ளார் என்பதையும் தங்களுக்கு ஞாபகப் படுத்த விரும்புகின்றேன்.

இந்த ஆயுதம் மிகவும் நவீன தொழில்நுட்ப வாயு எரிபொருள் வெடி மருந்தை (ADVANCED FUEL AIR EXPLOSIVE TECHNIQUE) உள்ளடக்கியதாகும். இதனை ஏவி வெடிக்க வைப்பதன் மூலம் வெளியாகும் வெடிமருந்து அதன் புகைமண்டலம் படரும் இடமெல்லாம் எரித்து சாம்பலாக்கிவிடும். இந்த ஆயுதத்தைக் கட்டடங்களை நோக்கி ஏவுவதன் மூலம் ஏற்படும் சேதம் 122 மில்லி மீற்றர் ஆட்டிலறி ஏவுகணையின் தாக்கத்துடன் ஒப்பிடக் கூடியதாகும்.

கிராமப்புறங்களில் இந்த ஆயுதத்தை போராளிகளுக்கு எதிராக தனித்துப் பயன்படுத்தமுடியாது. காரணம் இதன் பாரிய வெடிமருந்துத் தன்மையும், அதனால் ஏற்படும் அழிவுகளில் இருந்தும் சாதாரண பொது மக்கள் எதுவித பாதுகாப்பும் பெற முடியாததும் ஆகும்.

1993ஆம் ஆண்டு அமெரிக்கப் பாதுகாப்பு ஏஜன்ஸியால் வெளியிடப்பட்ட அறிக்கையில் இந்த ஆயுதத்தை மனித சமூகத்திற்கு எதிராகப் பாவிக்கும் போது, இதனால் பாதிப்புக்குள்ளானவர்கள் எரிகாயங்களுக்கு ஆளாகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஆயுதத்தை ரஷ்யா செச்னிய மக்களுக்கு எதிராகப் பயன்படுத்திய போது சர்வதேச மனித உரிமைக் குழுக்கள் அதற்குக் கடுமையான கண்டனம் தெரிவித்தனர். மனித உரிமை வாச் (HUMAN RIGHTS WATCH) என்ற நிறுவனம் அதன் 2000 ஆம் ஆண்டு பெப்ரவரி மாத அறிக்கையில் இந்த ஆயுதத்தை செச்னிய நாட்டில் உபயோகித்ததன் மூலம் ஏற்பட்ட மனித அழிவுகளையும் அதன் விளைவுகளையும் விளக்கியுள்ளது.

எனவே இந்த ஆயுதத்தால் ஏற்படும் தீமைகள் பற்றி தங்களுக்கு நான் விளக்கத் தேவையில்லை. காரணம் இந்த நாட்டின் தலைவி என்ற வகையிலும், முப்படைத் தளபதி என்ற வகையிலும் இவ்வாயுதம் சம்பந்தமான சகல தீமைகளையும், அழிவுகளையும தாங்கள் ஏற்கனவே அறிந்திருப்பீர்கள்.

வியட்நாம் நாட்டிற்கு எதிராக 'ஏஜென்ஸி ஒரேஞ்' (AGENCY ORANGE) என்றழைக்கப்படும் நச்சுத் தன்மையுடைய 'டிபோலியன்' (TOXIC DEFOLIANT) என்ற இரசாயன ஆயுதத்தை அமெரிக்கா உபயோகித்ததன் மூலம் அந்த நாடு உலக நாடுகளின் கெட்ட பெயரை சம்பாதித்துக் கொண்டது மட்டுமன்றி அப்போரிலும் தோல்வியையும் தழுவியது என்ற உண்மையை இச்சமயத்தில் தங்களுக்கு நினைவுகூர விரும்புகின்றேன்.

காலத்திற்குக் காலம் இந்த நாட்டை ஆட்சி செய்த அரசாங்கங்கள் - தங்கள் அரசு உட்பட - தமிழர் பிரச்சினை சம்பந்தமாகத் தீர்வு யோசனைகளை இடைநடுவில் கைவிடுவதும் அதற்கு மாறாக வீழ்ச்சி அடைந்து வரும் பொருளாதாரத்துக்கு மத்தியிலும் தமிழ் மக்களின் சட்டபூர்வமான அபிலாஷைகளை அடக்கி ஒடுக்கும் நோக்குடன் மிகவும் கொடிய ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதில் ஆர்வம் காட்டுவதும் வழமையாக உள்ளது.

தங்கள் காலஞ்சென்ற தந்தை உணர்ந்து சொன்னது போன்று தமிழர் பிரச்சினை ஓர் அரசியல் பிரச்சினையாகும். எனவே இப்பிரச்சினை அரசியல் மூலம் தீர்க்கப்படவேண்டும். ஆயுதத்தின் மூலம் தீர்த்துவிடலாம் என்ற தப்பான எண்ணத்தைத் தாங்கள் கைவிடவேண்டும். பிரச்சினைகளைப் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்க்க வேண்டுமேயன்றி பயங்கர ஆயுதங்களைப் பாவிப்பதன் மூலம் தீர்க்கமுடியாது என்ற யதார்த்தத்தையும் தாங்கள் உணரவேண்டும்.

இதுபோன்ற பயங்கரமானதும், அழிவுகளை ஏற்படுத்துவதுமான முயற்சிகளைத் தங்கள் அரசு மேற்கொள்வதன் மூலம் இந்நாட்டுக்குப் பெரும் அழிவு ஏற்படுவதுடன், சர்வதேச சமூகத்தின் முன் இந்நாடு ஒரு ஒதுக்கப்பட்ட நாடாகக் கருதப்படும் என்ற உண்மையை தாங்கள் உணர்ந்துகொள்ள வேண்டும்.

பாரிய அழிவுகளை ஏற்படுத்துகின்ற ஆயுதங்களை உபயோகித்துத் தமிழ் மக்களின் சட்டபூர்வமான அபிலாஷைகளை அடக்கி ஒடுக்கிவிடலாமென்ற கொள்கையைக் கைவிட்டு நோர்வே நாட்டின் சமாதான முயற்சியைத் தொடர்வதுடன், ஒரு யுத்த நிறுத்தத்தை மேற்கொண்டு வடக்கு, கிழக்கில் இயல்பு நிலையை ஏற்படுத்தி, தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான தடையை நீக்கி, அவர்களுடன் உடனடியாகப் பேச்சு நடத்தி, யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டிய அவசிய நடவடிக்கையை மேற்கொள்வதே அறிவுடைய செயலாகுமென தங்களுக்கு இச்சந்தர்ப்பத்தில் நான் வலியுறுத்த விரும்புகின்றேன். (ம)

## நாய்களுக்கு உரிமத் தகடு

வடமராட்சி,ஓக.20

பருத்தித்துறை நகரப் பகுதியில் வளர்ப்பு நாய்களை வைத்திருப்போர் அதற்கான இலக்கத்தகடு உரிமத்தைப் பெற்றுக்கொள்ளுமாறு பருத்தித்துறை நகர சபை அறிவித்துள்ளது.

அத்துடன் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசிகளைப் போடவேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது.

இதேவேளை - நகரப் பகுதியில் கட்டாக்காலி நாய்களை அழிக்கும் பணி தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (ம-173)

## நாளை

ஆவணி 5
செவ்வாய்க்கிழமை
திதி: திருதியை
பின்னிரவு : 2.12 வரை
நட்சத்திரம் : உத்தரம்
பின்னிரவு 1.12 வரை
சுபநேரம்: 10.35 - 12.05
ராகுகாலம் : 3.05 - 4.35
(பழைய நேரப்படி)

## உதயவாக்கு

அழகு அழியும்; ஒழுக்கம் வாழும்.


கண்ணிவெடிகள் காத்திருக்கின்றன, கவனம்!



**G.C.E. [A/L]**

**இரசாயனவியல்**

**விற்பனையாகின்றன**

- M.C.Q. [1], [2], [3] [1], [2], [3], [4], [5]
- Model Paper (2001) (கொழும்புப் பாடசாலை வினாத்தாளைக் கொண்டது) விடைகள் விளக்கத்துடன்.
- Industrial Chemistry (C-17929)

**by. த.முருகானந்தன் B.Sc.**

கிடைக்கும் இடம்: Sivan Malikai Ltd. 166, K.K.S. Road, Jaffna.



**யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்**

**மக்கள் சேவையில் மகத்தான பத்தாண்டுகள்..!**

யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் பத்தாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் ஆறுபேர் கொண்ட பத்து ஓவர் மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டி

☆ இச்சுற்றுப் போட்டி 6 வீரர்கள் பங்குபற்றும் போட்டித் தொடராக இடம்பெறும்.
☆ இச்சுற்றுப் போட்டியில் யாழ்.மாவட்டத்தில் உள்ள சகல விளையாட்டுக் கழகங்களும் பங்குபற்றலாம்.
☆ விண்ணப்பக் கட்டணம்:- ரூபா 50 மட்டும்.
☆ விண்ணப்ப முடிவு திகதி:- 26.08.2001

**விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கும் இடங்கள்:-**

1. யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்க தலைமை அலுவலகம், 317, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
2. லக்ஷ்மி பேக்கரி, ஆறுகால்மடம்.
3. ஜெயக்குமரன் பேக்கரி, மானிப்பாய்.
4. சுதா பேக்கரி, சில்லாலை.
5. சுவர்ணா பேக்கரி, சுன்னாகம்.
6. லக்ஷ்மி பேக்கரி, அச்சுவேலி.
7. யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்க வடமராட்சிக் கிளைக் காரியாலயம், கரவெட்டி வீதி, நெல்லியடி.

*317, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.* (C/17927)

யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்.


## நல்லூரில் நெரிசலில் சிக்கி பெண் காயம்

யாழ்ப்பாணம்,ஓக.20

நல்லூர் முருகன் தீர்த்தோற்சவத்தைக் காணச் சென்ற குடும்பப் பெண் ஒருவர் அங்கு கூடியிருந்த சன நெரிசலில் சிக்குண்டு கீழே விழுந்து அடியுண்டும், சனங்கள் ஏறி மிதித்தும் கடுமையான பாதிப்புக்குள்ளாகியுள்ளார்.

இச் சம்பவத்தில் யாழ்ப்பாணம், மானிப்பாய் வீதிப் பகுதியைச் சேர்ந்த ராசா லலிதாம்பிகை (வயது 54) என்ற பெண்ணே உட்காயமடைந்தவராவார். பாதிப்பிற்குள்ளானவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-15)

## கொடுப்பனவை பெற்றுக்கொள்ள அறிவுறுத்தல்

சண்டிலிப்பாய்,ஓக.20

பண்டத்தரிப்புத் தபால் அலுவலகத்தில் வழங்கப்படும் சமூகசேவைத் திணைக்களத்தின் மாதாந்தப் பொதுசன உதவிப்பணக் கொடுப்பனவை சாவகச்சேரிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வந்தவர்கள் பலர் இது வரை பெற்றுக்கொள்ளாமல் இருப்பதாகவும், அவர்களை விரைவில் வந்து தமக்கான கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ளுமாறும் பண்டத்தரிப்பு தபால் அதிபர் தெரிவித்துள்ளார்.

உரிய காலத்துக்குள் இதனை வந்து பெறாவிட்டால் கொடுப்பனவு திருப்பி அனுப்பிவைக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ம-135)

## தாச்சிப் போட்டி

வலி.வடக்கு,ஓக.20

யாழ்.மாவட்ட தாச்சிச் சங்கம் நடத்திவரும் தாச்சிச் சுற்றுப்போட்டியில் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு வலிகாமம் தெற்கு பிரதேச சபை மருதனார்மடம் திறந்த வெளியரங்கு மைதானத்தில் இடம்பெறவுள்ள அரையிறுதி ஆட்டத்தில் இணுவில் அண்ணா வி.க. அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் வசந்த ஸ்ரீ வி.க. அணி மோதும்.

(ம-86)

## வார்ட்டுகள் மீண்டும் இயங்க ஆரம்பித்தன

தென்மராட்சி,ஓக.20

மந்திகை ஆஸ்பத்திரியின் முதலாம், இரண்டாம் வார்ட்டுகள் நேற்று முன்தினம் தொடக்கம் இயங்கத் தொடங்கியுள்ளன.

எல்லை கடந்த நாடுகளின் மருத்துவக் குழுவினரால் (எம்.எஸ்.எவ்.) இந்த வார்ட்டுகள் புனரமைக்கப்பட்டதை அடுத்து இவை மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளன.

முதலாம் வார்ட் குழந்தைகள் வயிற்றுளைவு (டயரியா) பிரிவாகவும், இரண்டாம் வார்ட் பெண்கள் அவசர அனுமதிப் பிரிவாகவும் இயங்குகின்றன.

இவ் வார்ட்டுகள் புனரமைக்கப்பட்டவேளையில் ஆஸ்பத்திரியின் எட்டாம் வார்ட்டில் முதலாம் வார்ட் நோயாளர்களும், பத்தாம் வார்ட்டில் இரண்டாம் வார்ட் நோயாளர்களும் தங்கிச் சிகிச்சைபெற்று வந்தமை குறிப்பிடத்தக்கது.

(ம-117)


**கண்டாமணி பிரதிஷ்டை**

அச்சுவேலி காட்டுமலைக் கந்தசுவாமி கோயிலுக்கு நாவலம்பதி அச்சுவேலி திரு. திருமதி துரைசிங்கம் பேபி ஆகியோரால் உபயமாக வழங்கப்பட்ட பல லட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த புதிய கண்டாமணி ஒன்றை நாளை மறுதினம் (22-08-2001) புதன் கிழமை முற்பகல் 11மணி 58 நிமிஷம் முதல் 1.00 மணி வரையுள்ள அத்த நட்சத்திரமும், சதுர்த்தித் திதியும், சித்தயோகமும் கூடியுள்ள சுப முகூர்த்த வேளையில், பிரதிஷ்டைசெய்யத் திருவருள் கைகூடியுள்ளது. இவ்வேளையில் அடியார்கள் அனைவரும் கலந்துகொண்டு முருகப் பெருமானுடைய திருவருட் கடாட்சத்தைப் பெற்றேகும் வண்ணம் அன்புடன் வேண்டப்படுகின்றனர்.

கண்டாமணி நிர்மாணம்:- காயத்திரி ரேடஸ், கொழும்பு.
கண்டாமணி அச்சுநிர்மாணம்:- நாதன் இரும்புத் தொழிலகம் சங்கிலியன் வீதி, நல்லூர்.

*நாவலம்பதி, அச்சுவேலி.* (91350)

உபயகாரர்: திரு.திருமதி துரைசிங்கம் பேபி.



**பிறந்த நாள் வாழ்த்து**

**20-08-2001**

**திரு.பு.தனபாலசிங்கம்**

இன்று (20.08.2001) திங்கட்கிழமை தனது 57ஆவது பிறந்தநாளைக் காணும் வண்ணார்பண்ணையைச் சேர்ந்த

**திரு.பு.தனபாலசிங்கம்**

அவர்களைப் பல்லாண்டு காலம் நீடூழி வாழ திருவருள் புரியுமாறு இறைவனை வேண்டி வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துபவர்கள்:-*
மனைவி:- கெஜா,
மகள்:- அனுஷா,
மகன்மார்:- ஜனா, ஜயந்தா.

76/6, ஓட்டுமடம் வீதி, யாழ்ப்பாணம். (91355)



**அமரர் கே.சி.நித்தியானந்தா**

**நினைவுதின வைபவ அழைப்பு**

பனை அபிவிருத்திச் சபையின் ஸ்தாபகத் தலைவர்

**அமரர் கே.சி.நித்தியானந்தா**

அவர்களின் நினைவு தினத்தையொட்டி பனை அபிவிருத்திச் சபையினால் நடத்தப்படவுள்ள

**நினைவுதின நிகழ்வுகள்**

நாளை (21.08.2001) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு யாழ்ப்பாணம் கே.கே.எஸ். வீதியிலுள்ள யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்க கேட்போர்கூட மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு ஆர்வலர் அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

*பனை அபிவிருத்திச் சபை, 53, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.*

ஆ.மு.பாக்கியநாதன் தலைவர் மற்றும் சபை உறுப்பினர்கள், பணியாளர்கள். (C/17921)



**கலைக்குரிசில் கணேசனின் 31 ஆம் நாள் நினைவு**

20-08-2001



மலர்வு 01 - 10 - 1928

உதிர்வு 21 - 07 - 2001

**வி.சி.கணேசன்**

(நடிப்புலக மாமேதை சிவாஜிகணேசன்)

*திலகமே திலகமே திசை மாறிப்போனாயோ?*
*உலகிலே உந்தன் சிம்மக்குரல் ஓய்ந்து போனதோ?*
*உதயமே உதயமே திரையில் உதிக்காமல் போனாயோ?*
*இதயமே இதயமே இயங்காமல் வாடுதே!*

*சாந்தை, பண்டத்தரிப்பு.* (91356) - சிவாஜி ரசிகர்கள்.



**நான்காம் ஆண்டு நினைவஞ்சலி**



மலர்வு 12 - 08 - 1969

உதிர்வு 20 - 08 - 1997

**செல்வி விநாசித்தம்பி அன்பரசி**

அன்புக்கு அரசி என்று அன்பாகப் பெயரிட்டோம்
நாட்டுக்கு அரசி என்று நம்மை விட்டுப் போனீரோ?
கற்புக்கு அரசி என்று காலனவன் கவர்ந்தானோ?
வீட்டுக்கு விளக்கின்றி இருளாக நிற்கின்றோம்!
நான்காண்டு சென்றிடினும் நம் கண்ணீர் ஓயவில்லை!
*அன்புவின் ஆத்மா சாந்தியடைய ஆண்டவனை வேண்டுகின்றோம்.*

*செம்பியன்பற்று.* (91351)

பாசமுள்ள தந்தை - தாய், அண்ணன்மார் - அண்ணிமார், மருமக்கள் - பேரப்பிள்ளைகள்.



**திருமண அழைப்பு**

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான விஷு வருஷம் ஆவணி மாதம் 6ஆம் நாள் (22.08.2001) புதன்கிழமை காலை 7.25 மணிமுதல் 8.39 மணிவரையிலான சுபமுகூர்த்த வேளையில்

எமது சிரேஷ்ட புத்திரன் திருநிறை செல்வன் **ஜெயரூபன்** (தொழில்நுட்பவியலாளர்)

எமது துவித்ய புத்திரி திருநிறை செல்வி **சுமேதா** (B.A.) (முகாமைத்துவ உத்தியோகத்தர்)

ஆகிய இருவருக்கும் இறைவன் திருவருள் துணையுடன் சட்டநாதர் வீதி, நல்லூர் யாழ்ப்பாணத்திலுள்ள இளங்கலைஞர் கலாமண்டபத்தில் திருமாங்கல்ய தாரணம்செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வருகை தந்து புது மணமக்களை ஆசீர்வதிக்கும்வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

* இடம்பெயர்ந்த காரணத்தால் இதனையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகைதருமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தாங்கள் நல்வரவை நாடும்:

திரு.திருமதி நடேசமூர்த்தி
ஏழாலை தெற்கு, சுன்னாகம்.
*நிரந்தர முகவரி:* வேரக்கேணி கந்தசுவாமி கோயிலடி, மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி. (91353)

(இருவீட்டார் அழைப்பு)

திரு.திருமதி நவரத்தினம்
(ஓய்வுபெற்ற பொலீஸ் சார்ஜன்ட்)
*தற்காலிக முகவரி:* 426/2, கில்னர் லேன், யாழ்ப்பாணம்.

# யாழ்.மாவட்ட நலன்புரி முகாம்கள் பருவ மழைக்குத் தாக்குப் பிடிக்குமா?

**குடாநாட்டில் பருவமழை ஆரம்பமாக இருக்கும் நிலையில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியிருக்கும் நலன்புரி முகாம்களின் சீரழிவு நிலை குறித்து விளக்குகிறது இந்த அறிக்கை.**

யாழ்.மாவட்டத்தில் இடம்பெயர்ந்து முகாம்களில் வசிப்பவர்களை இரு பெரும் பிரிவுகளாக பிரிக்கலாம்.

பிரிவுI:- 1990இல் இடம்பெயர்ந்து தற்போது முகாம்களில் வசிப்பவர்கள் (56முகாம்களில் 1,722குடும்பங்களைச் சேர்ந்த 6,923 பேர்.)

பிரிவுII:- 2000ஆம் ஆண்டு மே மாதம் இடம் பெயர்ந்து முகாம்களில் வசிப் பவர்கள் (152 முகாம்களில் 3,774 குடும்பங்களைச் சேர்ந்த 14,896 பேர் வசிக்கின்றனர்.)

## அதிகாரிகள் அசமந்தம் அகதிகள் நிலையோ பரிதாபம்

சென்றவருடம் இடம்பெயர்ந்துள்ள 47ஆயிரம் குடும்பங்களில் 90 வீதமானோர் நண்பர்கள், உறவினர்கள் வீடுகள், காலியான, கைவிடப்பட்ட வீடுகளில் வசிக்கின்றார்கள். சிலர் சொந்த இடங்களுக்கு மீளக்குடியேறியுள்ளனர். இடம்பெயர்ந்து தற்காலிக முகாம்களாகிய பாடசாலைகள், பொது இடங்களில் தங்கியிருப்பவர்களுக்கு கொட்டில்கள் நலன்புரி நிலையங்களில் அமைக்கப்பட்டு குடியமர்த்தப்பட்டனர். கிட்டத்தட்ட 3000 கொட்டில்கள் அமைக்கப்பட்டன. இதில் 2000 அகதிகளுக்கான ஐநா.தூதரகம் மூலமும், 500 கியூடெக் மூலமும், 500 கியூமெடிக்கா மூலமும் கட்டிமுடிக்கப்பட்டன.

முகாம்களின் பராமரிப்பு பிரதேச செயலகங்களிடமே ஒப்படைக்கப்பட்டது. நிர்மாணம், பராமரிப்பு ஒழுங்காக நடைபெறாமையினால் மக்கள் பெரிய பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றார்கள். அவற்றில் சிலவற்றை இங்கு குறிப்பிடுகின்றோம்.

### முகாம்களின் அமைவிடம்

அதிகமான முகாம்கள் பள்ளக் காணிகளிலேயே அமைக்கப்பட்டுள்ளன. அதனால் மழைநீர் வழிந்தோட முடியாமல் தேங்கி நின்று பல பிரச்சினைகளை உருவாக்குகின்றது. வீட்டு நிலம் ஈரலிப்பு, சுற்றாடல் சேறும சகதியும், மலசலகூட குழிகளில் நீர் நிரம்பல், நுளம்புத் தொல்லை முதலியன உருவாக ஏதுவாகின்றது. சில முகாம்களில் உள்ள கொட்டில்கள் பிடுங்கப்பட்டு வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டன. இன்னும் சில முகாம்களுக்கு மண் ஏற்றிப் பறிக்கப்பட்டு வீட்டு (கொட்டில்) நிலம் உயர்த்தப்பட்டன. இதற்கென அதிகமான பணம் செலவாகியது.

பொருத்தமான இடங்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தால் மேற்கூறப்பட்டவற்றைத் தவிர்த்திருக்க முடியும்.

### ஒழுங்கமைப்பு

கொட்டில்கள் சில முகாம்களில் நெருக்கமாக அமைக்கப்பட்டுள்ளதினால் சமூகப்பிரச்சினைகளுக்கு வழிகோலின.

### வடிவமைப்பு

வகை ஒன்று - 12' நீளம் x 12' அகலம்

வகை இரண்டு - 15' நீளம் x 12' அகலம்.

முதலாம் வகைக் கொட்டில்களுக்கு தாழ்வாரம் இல்லை அதனால கூரையிலிருந்து வடியும் நீர மண்கவர் பிட்டிகளில் வடிந்து அவற்றைக் கரைத்தன.

கூரை கிடுகினால் வேயப்பட்டு பிளாஸ்ரிக் விரிப்புப் போடப்பட்டது. பிளாஸ்ரிக்கை காரணம் காட்டி கிடுகுகள் ஐதாகவே வேயப்பட்டன. ஆனால் ஒருவருடத்துக்குள்ளேயே போட்ட பிளாஸ்ரிக்குகள் பெரும்பாலான இடங்களில் கிழிந்து அல்லது இத்துப்போயின. மக்கள் அவற்றை பிளாஸ்ரிக் எனக் கூறாமல் 'மை பூசப்பட்ட உரைப்பை' என்றே கூறுகிறார்கள். ஆடிமாதம் பெய்த இரு மழைக்கும் கொட்டில்கள் எல்லாம் ஒழுகி மக்களுக்கு பரிதாப நிலையை உருவாக்கின. இரவு நேரத்தில் கொட்டிலைவிட்டு வெளியேறி மரங்களின் கீழ் அல்லது அயலில் உள்ள பொதுக் கட்டிடங்களிலேயே தஞ்சமடைந்தனர்.

எமது கிராமங்களில் கொட்டில்களுக்கு கிடுகுகள் நெருக்கமாகவே வேய்வார்கள். இருவருடங்களுக்குப் பிரச்சினை இல்லை. ஆகவே மேற்கூறப்பட்ட வடிவமைப்பு, நிர்மாணத்தினால் மக்கள் அவல நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதை அறிய முடிகின்றது. இவற்றுக்கு யார் பொறுப்பு? உதவி நிறுவனங்கள், அரசாங்க அதிகாரிகள் ஆகியோர் மீது மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர் என்பதை மன வருத்தத்துடன் தெரிவிக்கின்றோம். மக்களுடைய நிலையை வைத்தே எத்தனையோ கூட்டங்கள்; பட்டறைகள், வெளிநாட்டுப்பயணங்கள் நடைபெறு கின்றன. வெளிநாட்டு நிதி உதவித் தாபனங்களுக்கு முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டு நிதியும பெறப்படுகின்றது.

### நீர்வசதி

குடிதண்ணீருக்கு சில வசதிகள் செய்யப்பட்டுள்ள போதும் பற்றாக்குறை பல முகாம்களில் நிலவுகின்றது. குளிப்பதற்கு வசதியற்ற சில முகாம்களும் உண்டு.

### மலசலகூடங்கள்

மூன்று விதமான மலசல கூடங்கள் அமைக்கப்பட்டன.

(1) தகர பீப்பாய்கள் மாத்திரம்.

(2) மலசல மாபிள் கோப்பையும், பீப்பாய்க் குழிகளும்.

(3) கொங்கிறீட் குழிகளுடனான தற்காலிக கூடங்கள்.

பொதுவாக 25 ஆள்களுக்கு ஒரு மலசலகூடம் அமைப்பதே முறையாகும். ஆனால் சில இடங்களில் 15 கொட்டில்களுக்கு அதாவது 50-75 ஆள்களுக்கு ஒரு மலகூடம் அமைக்கப்பட்டது.

இவற்றின் விளைவாக குழிகள் நிரம்பி மலகூடத்தை பாவிக்கமுடியாத நிலை தோன்றியுள்ளது. குழிகள் நிரம்பிய 'கழிவுகளை' அகற்றும் பணியை சென்றவருடம் **I.C.R.C.** மேற்கொண்டது. பின் அவர்களிடம் உள்ள இயந்திர சாதனம் பிரதேச சபைகளுக்கு கொடுக்கப்பட்டு பணியும ஒப்படைக்கப்பட்டது. அவர்கள் இப்பணியை திருப்திகரமாக செய்யாமையினால் முகாம்களிலுள்ள மலகூடங்கள் பாவனையற்றுப் போயின. சுகாதாரச் சீர்கேடுகளும் தலைதூக்குகின்றன. சுகாதாரப் பரிசோதகர்களைப் பேட்டி கண்டபொழுது 'மேல் அதிகாரிகளுக்கு முறைப்பாடு செய்துவிட்டோம்' எனக் கூறுகின்றார்கள். அதேபோல் கிராம சேவையாளரை வினவியபோது மேலே கூறப்பட்ட 'கூற்றையே' அவர்களும் திருப்பிக் கூறுகிறார்கள். மேல் அதிகாரிகள் முறைப்பாடுகளில் தேவையான நடவடிக்கை ஏன் எடுக்க முடியவில்லை என்பதை மக்களுக்கு பத்திரிகை ஊடாக விளக்குவார்கள் என நம்புகின்றோம்.

சில மலசல கூடங்களுக்கு மேல் கூரையும், மறைவிடங்களும் பழுதடைந்து போயுள்ளன. பள்ளக்காணியில் உள்ள குழிகள் நிலத்தடி நீர் உயர்வதினால் நிரம்புகின்றன. சில இடங்களில் மாபிள் கோப்பைகளும், கழிவுக்குளாய்களும் அடைத்து விட்டன. சிறந்த பராமரிப்பு இன்மையாலும் பிரச்சினைகள் தோன்றுகின்றன.

அதிகாரிகள் கூட்டங்களில் "மக்கள் முகாம்களை பராமரிக்கின்றார்கள் இல்லை. ஒத்துழைப்பு தருவதில்லை" எனக்கூறி பிரச்சினைகளைத் தட்டிக்கழிக்கின்றார்கள். அலுவலகங்களில் இருந்து கொண்டு மக்களை பராமரிப்பு வேலைகளில் ஈடுபடுத்த முடியாது. ஒவ்வொரு முகாம்களிலும் குழுக்கள் அமைக்கப்பட்டு அவற்றை 'செயற்திறன்' உள்ள அமைப்பாக இயக்கவேண்டும். அதற்கு ஆர்வம், ஆற்றல், அர்ப்பணம் ஆகிய மனப்பாங்குடைய ஊக்கிகள் அவசியம தேவை. அரசசேவையில் எத்தனை பேருக்கு 'இத்தகைமை' உண்டு என்பது ஆராய வேண்டிய விடயமாகும். இன்று அரசினால் மாதாந்த சம்பளம் வழங்கப்படும் எத்தனையோ சமுர்த்தி உத்தியோகத் தர்கள் கிராமங்களில் இருக்கிறார்கள் அவர்களிடம் ஏன் இப்பணியைப் பொறுப்பிக்கக் கூடாது?

**அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம், யாழ்.மாவட்டம்.**

முகாம்களில் மக்கள் எதிர்நோக்கும் தொழில் வாய்ப்புகள், கல்வி, போஷாக்கு, சுகாதர வசதிகள் தொடர்பான பிரச்சினைகளை உள்ளடக்கிய அறிக்கை பின்பு வெளியிடப்படும். **'Sphere Project'** நியமங்களுக்கு அமைய முகாம்கள் அமைக்கப்பட்டதா என்பதை சர்வதேச நிறுவனங்கள் மதிப்பீடு செய்யவேண்டும். தாங்க முடியாத பிரச்சினைகளுக்கு மத்தியில் தத்தளிக்கும் மக்களைப்பற்றி அரச இயந்திரம் பொருத்தமான நடவடிக்கைகள் மேற்கொள்ளாமை ஆச்சரியமாகவுள்ளது. நேபாள மக்களிடம் ஒரு பழமொழியுண்டு 'அரசனுக்கு கண்ணில்லை, கல்லுக்கு காதில்லை'

'முகாம்களில் வசிப்பவர்களும் எமது சகோதரர்களே. எங்களுக்கும் இந்த நிலை ஏற்படலாம்' என்ற மனித நேய உணர்வில் உடனடி நடவடிக்கைகளை எடுப்பதற்கு அதிகாரிகள் முயலவேண்டும். 'நல்ல வீடுகள் கட்டிக் கொடுப்போம்' என்ற ஆசை வார்த்தை இம்மாதம் வரவிருக்கும் மழையினால் ஏற்படும் பிரச்சினைக்கு தீர்வாகாது. பிரச்சினைகளைத் தட்டிக் கழிப்பது நெருக்கடி நிலைக்கே வழி கோலும். ★

உ

ஓம் விராட் விஸ்வப் பிரம்மனே நமஹ!

## புதுமனைப் புகுவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் விஷு வருடம் ஆவணி மாதம் 6ஆம் நாள் (22.08.2001) புதன்கிழமை காலை 9.05 மணி முதல் 10.05 மணி வரையில் வரும் சுப முகூர்த்தத்தில்

எம்மால் புதிதாக அமைக்கப்பெற்ற

"லக்ஷ்மி வாசா"

**எனும் புதுமனையில் குடிபுகுவதற்கு**

நிச்சயித்துள்ளோம். ஆகவே அத்தருணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகை தந்து புதுமனையை ஆசீர்வதித்து எம்மை மகிழ்வித்துச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பையே தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

*தங்கள் நல்வரவை விரும்பும்*

*திரு. திருமதி ஸ்ரீஸ்கந்தராசா – சாந்தினி*

*திரு. செ. கந்தசாமிப் பத்தர் குடும்பத்தினர்.*

*18.சபாபதி வீதி,*
*தலையாழி, கொக்குவில்.* (91229)

## கல்விச்சாலைக் காட்சிகள்



மானிப்பாய் கோவில்பற்று இந்துசமய விருத்தி சங்கத்தினால் நடத்தப்பட்ட முன்பள்ளி மாணவர்களின் உடற்பயிற்சி விளையாட்டு விழாவின்போது எடுக்கப்பட்ட படம். (ஐ-185)



யாழ்.வை.எம்.சீ. அமைப்பு நடத்திவரும் ஐந்து பாலர் பாடசாலைகளின் விளையாட்டுப்போட்டி அண்மையில் யாழ்.சென். ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெற்றது. அங்கு இடம்பெற்ற சிறுவர்கள் அணிநடைக் காட்சியைப் படத்தில் காணலாம். (ஐ-51)



குருநகர் சனசமூக முன்பள்ளிப் பாடசாலை விளையாட்டுப் போட்டி குருநகர் கலை அரங்கு மைதானத்தில் நடைபெற்றது. குருநகர் சனசமூக நிலையத் தலைவர் அ.யேசுதாசன் சிறுவன் ஒருவனுக்குப் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். குருநகர் பங்குத்தந்தை வண.பிதா பீ.எவ்.பொனிபாஸ், 'கியுடெக்' அமைப்பின் முன்பள்ளி இணைப்பாளர் செல்வி ம.பத்மசேகரி குருநகர் சனசமூக நிலைய முன்பள்ளிப் பாடசாலைப் பொறுப்பாளர் ம.அல்போன்சா, ம.யூஜின் ஆகியோரும் படத்தில் காணப்படுகின்றனர். (ஐ-51)



திருநெல்வேலி அபிராமி முன்பள்ளியின் வருடாந்த விளையாட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்குத் தலைமை வகித்த திருநெல்வேலி இந்து தமிழ்க் கலவன் பாடசாலையின் பிரதி அதிபர் க.மகேஸ்வரன் பல நிகழ்வுகளில் முதலிடம்பெற்ற செல்வி அர்ச்சனா சத்தியசிறிக்குப் பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (ஐ-7)

Baraka

ஆரோக்கிய வாழ்வின் உற்ற நண்பன்

பராகா

கருஞ்சீரக எண்ணெய்
கருஞ்சீரக குளிசை



ஆயுள்வேத திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றது.

நாடு முழுவதிலும் உள்ள எல்லா பார்மஸிகளிலும் கிடைக்கிறது.

நீங்கள் நீரிழிவு நோயால் அவதிப்படுபவரா?
அல்லது உடம்பில் அதிக கொலஸ்ரோல் இருப்பதால் கவலைப்படுகிறீர்களா?
கவலை வேண்டாம்....
பராகாவைப் பாவித்துப் பயனடையுங்கள்.

EXPOLANKA COMMODITIES (PVT) LTD.
*No.11A, Mile Post Avenue, Colombo - 3, SriLanka.*

Distributor in Jaffna,
SIVA NARUMANAB POONGA
No: 288, Hospital Road,
Jaffna. Tel: 021 - 2567

*Fax : 676546*
*E-Mail : expocom@sri.lanka.net*
*Web site : www.barakaoil.com*

(C/17700)

# திருமண வாழ்வின் ஐம்பது ஆண்டுகளைப் பூர்த்திசெய்து பொன்விழாக் காணும்



## பிலிப்பு சவேரியாப்பிள்ளை

தம்பதியினர்

(1951.08.20 - 2001.08.20)

பல்லாண்டுகாலம் வாழ வாழ்த்துகின்றோம்.

*கொடிகாமம்.* (91120) - பிள்ளைகள்.

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில் 02 - 09 - 1978



அரன் அடியில் 30 - 08 - 2000

## அமரர் கார்த்திகேசு சிவகுமார்

திதி: பூர்வபக்கப் பிர்தமை

'மைந்தன்' என்றழைக்க மண்ணுலகில் இனி ஒருவரில்லை!
'தம்பி' என்றழைக்கத் தரணிதனில் இனி ஒருவரில்லை!
'அண்ணா' என்றழைக்கவும் அவனிதனில் இனி ஒருவரில்லை!
ஆண்டு ஒன்று ஆனதையா; ஆறுதல் எமக்கு இங்கில்லை!
ஆத்மா சாந்திபெற நித்தம் ஆண்டவனை வேண்டுகின்றோம்!

உங்கள் பிரிவால் துயருறும்
அன்பின்
அப்பா, அம்மா, அக்கா, தங்கை,
மைத்துனர், மருமகன்,
உற்றார், உறவினர், நண்பர்கள்.

*சுவினை கிழக்கு,*
*புத்தூர் சுன்னாகம் வீதி,*
*சுன்னாகம்.* (91331)

## முஸ்லிம் காங்கிரஸ் பிரமுகர் மீது கிரனேட் வீச்சு!

மட்டக்களப்பு,ஓக.20

மட்டக்களப்பு ஏறாவூரில் நேற்று முன்தினம் தனது கடை தீப்பற்றி இருப்பதை அறிந்து, கடையைப் பார்க்கச்சென்ற ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் - ஹிஸ்புல்லா அணிப் பிரமுகர் அமித் குஷாப் ஆசாத் என்பவர் மீது அடையாளம் தெரியாத சிலரால் கிரனேட் தாக்குதல் நடத்தப்பட்டது.

இந்தச் சம்பவத்தின் பின்னணியில் அரசியல் தலையீடு இருக்கலாம் என்று கூறப்படுகிறது. (ஒ-6)

## சடலங்கள் கையளிப்பு

மட்டக்களப்பு,ஓக.20

மட்டக்களப்பு மண்டூர்ப்பகுதியில் கடந்த வியாழக்கிழமை இரவு 7 மணியளவில் விசேட அதிரடிப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட இரு இளைஞர்களின் சடலங்களும் கடந்த வெள்ளியன்று விடுதலைப்புலிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவினர் இந்த இருசடலங்களையும் கொக்கட்டிச்சோலைப் பகுதியில் வைத்து விடுதலைப் புலிகளின் முக்கிய பிரமுகர்களிடம் ஒப்படைத்ததாக தெரிவிக்கப்படுகிறது. (ம-6)

## விமானக் கட்டணம் மீண்டும் அதிகரிப்பு

கொழும்பு,ஓக.20

கட்டுநாயக்கா விமான நிலையம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலை அடுத்து விமான சேவை நிறுவனங்கள் தமது கட்டணங்களை இரண்டாவது தடவையாக மீண்டும் அதிகரித்துள்ளன.

40 அமெரிக்க டொலர்களினால் தற்போது விமானக்கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில 28.ஆயிரத்து 300 ரூபாவாக இருந்த சிங்கப்பூருக்கான விமானக்கட்டணம் முதலில் 31.ஆயிரத்து நூறு ரூபாவாக அதிகரிக்கப்பட்டது.

அது தற்போது 38.ஆயிரத்து 300 ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அதிகரிக்கப்பட்டுள்ள விமானக்கட்டணம் மற்றும் கப்பல் கட்டணங்களால் பொதுமக்களுக்கும், வர்த்தகர்களுக்கும் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் குறித்து ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இன்று திங்கட்கிழமை வர்த்தக சம்மேளன பிரதிநிதிகளைச் சந்தித்து பேசவுள்ளார். (ம-6)

## குடிதண்ணீர் வழங்கத் திட்டம்

யாழ்ப்பாணம்,ஓக.20

வடமராட்சி மற்றும் தீவுப் பகுதி மக்களின் குடிதண்ணீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக வடக்கின் அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு-கிழக்கு தமிழ் விவகாரங்கள் அமைச்சு இப்பகுதிகளில் குடிதண்ணீர்த் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவுள்ளனர்.

இதற்கென 10 பவுசர்களை கொழும்பிலிருந்து கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக ஈ.பி.டி.பி. அமைப்பின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

# எழுதுமட்டுவாழில் 4 சிப்பாய்கள் காயம்

கொழும்பு,ஓக.20

எழுதுமட்டுவாழ் பகுதியில் கடந்த வியாழன், வெள்ளிக்கிழமைகளில் புலிகள் நடத்திய தாக்குதல்களில் நான்கு சிப்பாய்கள் காயமடைந்தனர்.

வியாழன் இரவு எழுதுமட்டுவாழுக்கு 5கிலோ மீற்றர் தெற்கில் உள்ள பொன்னார் பகுதியில் புலிகள் 40 எம்.எம். கிரனேட் செலுத்திகள் மூலம் நடத்திய தாக்குதலில் மூன்று சிப்பாய்களும் -

வெள்ளி நண்பகல் எழுதுமட்டுவாழுக்கு 5 கிலோ மீற்றர் வடகிழக்கில் உள்ள கல்வயலில் புலிகளின் துப்பாக்கிச் சூட்டில் சிப்பாய் ஒருவரும - காயமடைந்ததாக விசேட ஊடகத் தகவல்மையம் தெரிவித்தது.

(உ)

# நன்றி நல்கி பாராட்டுகின்றோம்

## கோண்டாவில் நெட்டிலைப்பாய் பிள்ளையார் கோயில்

பஞ்ச தள இராஜ கோபுர உருவாக்கத்திற்கு
பல லட்சம் ரூபா நிதி உதவி வழங்கி பேருதவி புரிந்த



வடக்கு அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் மொழி விவகாரங்கள் அமுலாக்கல் இந்து கலாசார அமைச்சரும்
ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி செயலாளர் நாயகமுமான
**மாண்புமிகு**
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கும்

யாழ்-மாவட்ட ஈ.பி.டி.பி. பிரதம அமைப்பாளரும்
நாடாளுமன்ற உறுப்பினருமான
**உயர்திரு. கா.வே. குகேந்திரன்**
**(ஜெகன்)**
அவர்களுக்கும்



எங்கள் ஆலயத்துக்கு பலமுறை வருகை தந்து
பார்வையிட்டு ஆலயத்தின் தேவையைப் பரிந்துரைத்து
ஆவன செய்த நல்லூர் பிரதேச சபைத் தலைவரும்
யாழ்.மாவட்ட ஈ.பி.டி.பி. உதவி அமைப்பாளரும்
உண்மையான விசுவாசமான சேவையாளருமான
**உயர்திரு. க.மணிபல்லவராஜன்**
**(நிசாந்தன்)**
அவர்களுக்கும்



எமது உளங்கனிந்த நன்றியையும் பாராட்டையும்
தெரிவிக்கின்றோம்.
எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் நல்லருள் புரிவாராக!

*ஆலய பரிபாலன சபையினர்,*
(91336) *கோண்டாவில் நெட்டிலைப்பாய் பிள்ளையார் கோயில்.*

# 31ஆம் நாள் நினைவு



## அமரர் முருகன் சின்னத்தம்பி

மலர்வு 12.07.1913 உதிர்வு 21.07.2001

வருடங்கள் பல சென்றாலும் உம் நினைவு
எம்மை விட்டு நீங்காது ஐயா!
அன்னாரின் ஆத்மா சாந்தி அடைவதாக!

*கந்தரோடை வீதி,*
*சூளானை,*
*சுன்னாகம்.* (91344)

*மகள்* : ஜெகசோதி,
*மருமகன்* : இராசையா,
பேரப்பிள்ளைகள்

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி




**அமரர் சி.கணபதிப்பிள்ளை** **திருமதி நாகம்மா கணபதிப்பிள்ளை**

(இளைப்பாறிய ஆசிரியர்கள்)

25-12-1909 மலர்வு 25-12-1910
உதிர்வு: 14-09-1996 திதி:- 20-08-2001

ஆண்டு ஐந்தல்ல ஆயிரம் தான் சென்றாலும்
ஆறாத்துயரோடும் ஆறாத மனத்தோடும்
நீறான உங்களை நினைத்துருகி வாழும்
அன்பு நிறைந்த
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*கட்டப்பிராய்.* (91249)





## நல்லூரான் ரத பவனி.

கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நல்லூர்க் கந்த சுவாமி கோயில் வருடாந்த இரதோற்சவத்தின் போது, பக்தர்கள் வடம் பிடித்திழுக்க, அடியார்கள் புடைசூழ திருத்தேரில் ஆரோகணித்து ஆறுமுக சுவாமி வீதியுலா வருவதையும் - இரதோற்சவத்தின் இறுதியில் பச்சைவர்ண மயமான அலங்காரத்துடன் ஆறுமுகப் பெருமான் தேரிலிருந்து இறங்கி இருப்பிடம் செல்வதையும் - அருகில் உள்ள இரண்டு படங்களிலும் காணலாம்.

*(படங்கள்:- கொனிகா கலர் லாப்)*

# நாடாளுமன்றத்தினுள் ஜனாதிபதி செல்வதைத் தடைசெய்ய முயற்சி

## ஐ.தே.க. தீவிர நடவடிக்கை

கொழும்பு,ஓக.20

சர்வஜன வாக்கெடுப்பை ரத்துச் செய்துவிட்டு, நாடாளுமன்றத்தை உடனடியாகக் கூட்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நடவடிக்கை மேற்கொள்ளாது விட்டால், அவர் நாடாளுமன்றத்துக்குள் நுழையமுடியாதவாறு தடை உத்தரவு ஒன்றை ஏதேனும் வகையில் பெறுவது குறித்து ஐ.தே.க. ஆராய்ந்து வருகிறது.

கடந்த சனிக்கிழமை காலை மாத்தளையில் இடம்பெற்ற ஐ.தே.க. பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு பேசிய அக்கட்சியின் உப தலைவரும், இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான காமினி அத்துக்கோறளை மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

இன்று நாட்டு மக்கள் மட்டுமல்லாது பெரும்பாலான அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களும் கூட ஜனாதிபதி மீது கொண்டிருந்த நம்பிக்கையை இழந்துவிட்டனர். இந்த உண்மையை உணர்ந்து ஜனாதிபதி உடனடியாகத் தனது பதவியை இராஜினாமாச் செய்து அரசையும் கலைத்துவிட்டு நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலத்தைப் பெற்றுக் கொண்டுள்ள ஐக்கிய தேசியக் கட்சியிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்க முன்வரவேண்டும்.

அரசாங்கம் சர்வஜன வாக்கெடுப்பை எந்நேரம் நடத்தினாலும், அதை எட்டு லட்சம் மேலதிக வாக்குகளால் தோற்கடிக்க ஐ.தே.க. தயாராக உள்ளது. இந்த உண்மையை உணர்ந்து கொண்டே ஜனாதிபதி சர்வஜன வாக்கெடுப்பை தள்ளிப் போட்டுக்கொண்டு வருகிறார். சர்வஜன வாக்கெடுப்பை இரத்துச் செய்து விட்டு நாடாளுமன்றக் கூட்டத்தொடரை உடனடியாகக் கூட்டுமாறு அரசாங்கத்தை வலியுறுத்த கொழும்பில் ஐ.தே.கட்சியினால் எதிர்வரும் 23ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஆர்ப்பாட்டத்தில் நாட்டின் சகல பகுதிகளையும் சேர்ந்த சுமார் ஒரு லட்சத்துக்கும் அதிகமானோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

நாடு சுதந்திரம் பெற்றது முதல் ஐ.தே.கட்சி மட்டுமே இந்த நாட்டில் தனித்த கட்சியாக ஆட்சி நடத்தி வந்துள்ளது. ஸ்ரீ.ல.சு.கட்சியும் பொ.ஐ.முன்னணியும் ஏனைய கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்தே ஆட்சியமைத்து வந்துள்ளன. கடந்த பொதுத் தேர்தலில் பயங்கரவாதம் கட்டவிழ்த்துவிடப்பட்டபோதும் ஐ.தே. கட்சி தனித்துப் போட்டியிட்டு 40.2 சதவீத வாக்குகளைப் பெற்றது. பொ.ஐ.மு. எட்டு கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்து 47.9சதவீத வாக்குகளை மட்டுமே பெற்றது.

கடந்த ஆறு வருட ஆட்சியில் நாட்டு மக்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். நாட்டின் பொருளாதாரம் சீரழிக்கப்பட்டுள்ளது. பொருள்களின் விலைகள் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணம் உள்ளன. நாட்டு மக்கள் வாழ்வதா அல்லது சாவதா என்று முடிவெடுக்க வேண்டிய நிலையில் உள்ளனர். எனவே இன்று அரசாங்கத்தை பதவியிலிருந்து இறக்கும் வரை ஐ.தே.க. தனது போராட்டத்தை தொடர்ந்து முன்னெடுத்துச் சென்றுகொண்டேயிருக்கும்.

ஜனாதிபதி உடனடியாக சர்வஜன வாக்கெடுப்பை இரத்துச் செய்ய வேண்டும். நாடாளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் கொண்டுள்ள ஐ.தே.கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு பிரதமர் பதவியைக் கையளிக்க வேண்டும். அதே சமயம், ஜனாதிபதி எந்தவொரு அமைச்சையும் பொறுப்பேற்கக் கூடாது. வேண்டுமானால் முப்படைகளின் தளபதியாக இருக்கலாம்.

நாட்டை அபிவிருத்தி செய்து நாட்டு மக்களுக்கு வளமான வாழ்க்கை ஒன்றைப் பெற்றுக்கொடுக்கவே ஐ.தே.க.போராடி வருகிறது. இந்தப் போராட்டங்கள் வெற்றியடைய நாட்டு மக்கள் பூரண ஒத்துழைப்பு நல்க வேண்டும் என்றார்.

- இவ்வாறு காமினி அத்துக்கோறளை தெரிவித்தார். (ஓ)

# அரியாலைப் பகுதியில் திருட்டுக்கள் அதிகரிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.20

அரியாலைப் பகுதியில் மீண்டும் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

திருடர்களின் பயத்தினால் இரவுப் பொழுதைப் பெரும் அச்சத்தின் மத்தியிலேயே கழிக்க வேண்டியுள்ளதாக அரியாலைப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

அரியாலை - கலைமகள் வீதியில் உள்ள பேரம்பலம் என்பவருடைய வீட்டுக்குள் கடந்த வியாழக்கிழமை நள்ளிரவு கூரை பிரித்து இறங்கிய திருடர்கள், வீட்டில் ஆழ்ந்த நித்திரையில் இருந்தவர்கள் மீது மயக்க மருந்தை விசிறிவிட்டு தாலிக்கொடி, சங்கிலி, ரேடியோ உள்ளிட்ட பெறுமதியான பொருள்களைத் திருடிச் சென்றுள்ளனர்.

சம்பவதினமிரவு அதே வீதிப் பகுதியில் உள்ள இன்னொரு வீட்டினுள் கூரை பிரித்து இறங்கிய திருடர்கள் வீட்டார் கூக்குரல் இட்டதை அடுத்து அங்கிருந்து தப்பியோடிவிட்டனர்.

அரியாலை - கனகரட்ணம் வீதி, ஸ்ரான்லிக் கல்லூரி வீதி ஆகியவற்றில் உள்ள இரண்டு வீடுகளிலும் அன்றைய தினம் பெறுமதி வாய்ந்த பொருள்கள் திருட்டுப்போயுள்ளன.

அரியாலை - மாம்பழம் சந்தியில் பொலீஸ் நிலையம் அமைக்கப்பட்டிருந்த காலத்தில் அப்பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் குறைந்திருந்தன என்றும் -

பொலீஸ் நிலையம் அகற்றப்பட்டதை அடுத்தே திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்றும் -

பொதுமக்கள் தெரிவித்தனர். (ம-7)

### யாழ்.மாநகர சபையின்

# இந்து விடுதி தாக்கப்பட்டதற்கு புளொட் அமைப்பு கண்டனம்

கடந்த சனியன்று யாழ்.மாநகர சபையின் சுகாதாரப் பணிமனை இந்து விடுதி மீது கல்வீசி, உடைமைகள் சேதமாக்கப்பட்டுள்ள சம்பவம் வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டியதாகும்.

- இவ்வாறு புளொட் அமைப்பு நேற்று விடுத்த செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ் பேசும் மக்கள் இன்னல்களிற்கு மத்தியிலும் தமது மதவழிபாடுகளை கிரமமாக, மதப்பற்றுடன் மேற்கொண்டு வருகின்றனர். இவ்வேளைகளில் இவ்வாறான விஷமத்தனமான செயல்கள் எமது பண்பாட்டினையே இழிவுபடுத்துவதாக அமைகின்றன. முரண்பாடுகள், பிரச்சினைகள் தோன்றும்போது பகுத்தறிவுள்ள நாமே மிருகங்கள் போன்று நடந்தால் மனித சமுதாயம் எதிர்காலத்தில் எத்தகைய வடிவத்தில் செயற்படும் என்பதை சிந்தித்துப் பார்ப்பது அவசியம்.

எனவே இவ்வாறான சம்பவங்கள் எங்கும், எவராலும் ஏற்படாதிருக்க வன்முறை மோகத்தைக் கைவிட்டு பேச்சு மூலம் தீர்வு காணும் பண்பாட்டை கடைப்பிடிக்க இளம் சமுதாயம் முன்வரவேண்டும் எனவும் -

ஆலய சுற்றாடல்களில், இவ்வாறான வன்முறை சம்பவங்களை ஏற்றுக்கொள்ள முடியாதெனவும் - தெரிவிக்கின்றோம். - இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## கேணி புனரமைப்பு

சித்தன்கேணியிலுள்ள புராதன கேணியைப் புனரமைப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பன்முகப்படுத்தப்பட்ட ஏரவு செலவுத் திட்ட நிதியிலிருந்து சுமார் 2 லட்சம் ரூபா மேற்படி புனரமைப்பு வேலைகளுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

புனரமைப்புப் பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கான சகல ஏற்பாடுகளையும் வலி.மேற்குப் பிரதேச செயலகம் மேற்கொண்டு வருகிறது. (ம-99)

## வாசகர் திருமுகம்

### கபடத்தனமான குற்றச்சாட்டு

"மண்டைதீவு புறக்கணிக்கப்பட்டது ஏன்?" என்ற தலைப்பில் 12.08.2001ஆம் திகதிய உதயனின் *வாசகர் திருமுகம்* பகுதியில் வெளியான விடயம் குறித்து ஈ.பி.டி.பியின் தீவக அமைப்பாளர் என்ற வகையில் பின்வருவனவற்றைத் தெரியப்படுத்துகின்றேன்.

மண்டைதீவு மக்களின் தேவைகளை நிறைவேற்றுவதில் நாம் உளப்பூர்வமாக செயறபட்டு வந்திருக்கின்றோம்.

மண்டைதீவிலுள்ள முருகன், பிள்ளையார் ஆலயங்களுக்கு தலா இரண்டு இலட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. மீனவர் சங்கத்திற்கு 5 இலட்சம் ரூபாவும், மக்களின் போக்குவரத்துத் தேவையைக் கருத்திற்கொண்டு 'லாண்ட் மாஸ்டர்' கொள்வனவிற்காக 2 இலட்சம் ரூபாவும், தொலைபேசி இணைப்புக்காக ஒன்றரை இலட்சம் ரூபாவும் வழங்கியுள்ளோம்.

அத்தோடு, மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாணும் நோக்குடன் எமது கிளை அலுவலகம் ஒன்றினையும் அங்கு அண்மையில் திறந்து வைத்துள்ளோம்.

எமது கட்சியின் செயலாளர் நாயகமும், அமைச்சருமான கௌரவ கே.என்.டக்ளஸ் தேவானந்தா அவர்களால் அங்கு இன்னும் பலதிட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இந்நிலையில், எம்மீது குற்றஞ்சாட்டப்படவேண்டும் என்ற கபடத்தனமான உள்நோக்கோடு, மண்டைதீவில் வசிக்காத - புனைபெயரைக் கொண்ட - ஒருவரால் எழுதிய கடிதத்தை ஆராயாமல் பிரசுரிப்பது பத்திரிகைத் தர்மத்திற்கு அழகானதல்ல.

இக்கட்டுரையை எழுதியவர் மண்டைதீவுக்குச் சென்று நேரடியாக நிலைமைகளைப் பார்த்துப் புரிந்துகொள்வது நல்லது.

இவ்வாறான பொய்ப் பிரசாரங்களில் இனியும் ஈடுபடவேண்டாமென சம்பந்தப்பட்டவர்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

*யாழ்ப்பாணம்.* **ந.மதனராஜா.**

### ஆசிரியர் தரமுயர்த்தலில் நீதி கடைப்பிடிக்கப்படுமா?

2000ஆம் ஆண்டு மார்கழி 31இல் 20 புள்ளிகளையும் பெற்று 50 வயதையும் பூர்த்தி செய்த அனைத்து பட்டப்பின் படிப்பு உள்ள பட்டதாரிகள், பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் தரம் 1க்கு உள்வாங்கப்படுகிறார்கள்.

ஆனால் 50 வயதைப் பூர்த்தி செய்யாத ஒரே காரணத்தால் 20-30 வரையோ அன்றி மேலும் அதிகம் புள்ளிகள் பெற்றவர்கள் தரம் 1க்குப் பதவி உயர்த்தப்படாமை நீதியானதா?

கல்விசார் தொழிலுக்கு வயது தடையாக இருப்பது நன்றா? ஆசிரியர்களின் கல்வி முன்னேற்றத்திற்கும், வாண்மை விருத்திக்கும் தடையாக, மனச்சோர்வாக, இருக்காதா? எனவே புள்ளிகளை அடிப்படையாக (தகுதியை) வைத்துப் பதவி உயர்வு வழங்கவேண்டுமே தவிர வயதை அல்ல என்பதே நீதியானதும் நியாயமானதுமாகும்.

45 வயது தாண்டிய சகல பட்டதாரிகளுக்கும் பட்டப்பின் படிப்பு அவசியம். இல்லை என்று (தடைதாண்டல்) விலக்களித்து அவர்களுக்கு உரிய சம்பள உயர்ச்சிகளும் வழங்கப்பட்டன. அத்துடன் 94இல் இவர்களை உரிய தரத்திற்கும் உள்வாங்கினர். முன்பே தடைதாண்டல் அவசியம், சம்பள உயர்வு இல்லை என்று இருந்தால் தள்ளாத வயதிலும் அவர்கள் தடைதாண்டியிருப்பர். இப்பொழுது அவர்களை தரம் 1க்கு உள்வாங்கப் பட்டப்பின் படிப்பு அவசியம் என்று மறுப்பது நியாயமா? இது யாருடைய தவறு?

94.10.06இல் II-IIஇல், 20 புள்ளிகள் பெற்றதுடன் 50 வயதையும் தாண்டியவர்களுக்கு நேரடியாகத் தரம் I கொடுக்கப்பட்டது என்றால், ஏன் 94.10.06இல் 30புள்ளிகளைப் பெற்று II-I உச்சச் சம்பளம் பெறும் ஒருவருக்கு தரம் Iஇன் உச்சச் சம்பளம் வழங்கக் கூடாது? (99.09.01இல்)

இவற்றை எல்லாம் தட்டிக் கேட்கவோ, அன்றேல் சுட்டிக் காட்டவோ, ஆசிரியர் சங்கத்தின் உயர் பதவிகளில் ஆசிரியர்கள் இல்லை என்பது புலனாகிறது எனப் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களின் முணுமுணுப்புக் கேட்கின்றது.

ஆசிரியர் சங்கங்கள், அதிபர் சங்கங்கள், நிர்வாகிகள் சங்கங்கள் எனத் தனித்தனி சங்கங்கள் இருப்பது யாவரும் அறிந்ததே. இதில் நகைப்புக்கிடமான விடயம் யாதெனில் எமது சங்கத் தலைவர், செயலாளர் போன்ற பிரதான பதவிகளில் அதிபர்களே இருக்கிறார்கள். இவர்கள் ஆசிரியர்களின் கஷ்ட நஷ்டங்கள் தெரிந்தும் தெரியாதது போல் இருக்கிறார்களா? அல்லது நட்டம் ஆசிரியர்களுக்குத் தானே, அதிபர்களுக்கு அல்லவே என்ற மனப்பான்மையா? எனப் பலரும் விசனம் தெரிவிக்கிறார்கள்.

"அகப்பை பிடிப்பவன் தன்னாள் இல்லை" என்ற நிலை ஆசிரியர்களுக்கு ஏற்பட்டுள்ளது. இனிமேலாவது சம்பந்தப்பட்டவர்கள் ஏற்ற நடவடிக்கை எடுத்து ஆசிரியர்களின் குறைகளை நிவர்த்தி செய்து அவர்கள் மனநிறைவோடு சேவை செய்ய ஆவன செய்வார்கள் என ஆவலோடு எதிர்பார்க்கிறோம்.

*புத்தூர்.* *பாதிக்கப்பட்டவர்களின் சார்பாக* **தில்லைக்கூத்தன்.**

## சின்னஞ்சிறு விளம்பரம்

### புறொயிலர் குஞ்சுகள்

BHIRAHA FARM புறொயிலர் குஞ்சுகளும் PRIMA இன சிவப்புப் பேட்டுக்குஞ்சுகளும் இன்று (20.08.2001) திங்கட்கிழமை பிற்பகல் 5.00 மணிககு விநியோகிக்கப்படும். புறொயிலரின் விலை 50/= மட்டுமே. தொடர்பு:- வை.சிவகுமார், 461, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். அல்லது றஞ்சிதன் சுபகணநாதன், பண்ணை வீதி, மாலுசந்தி, அல்வாய. (91348)

### முட்டை விற்பனைக்கு

எங்களிடம் கோழி முட்டை, இறால கருவாடு, நெத்தலிக் கருவாடு, சிரட்டைக் கரி மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம். மல்லிகா, 149, மின்சார நிலைய வீதி, பஸ்நிலையம் அருகில், யாழ்ப்பாணம். (91289)

### படிவம்

பட்டதாரி ஆசிரிய நியமன விண்ணப்பப் படிவங்கள் விற்பனையாகின்றன. விண்ணப்ப முடிவு திகதி: 10.09.2001. பாரதி, 430, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். (C/17834)

### DISSERTATION BINDING

பல்கலைக்கழக மாணவர்களின் ஆய்வுக்கட்டுரைகள், பல்கலைக்கழக நடைமுறைகளுக்கு அமையக் கட்டிக்கொடுக்கப்படும். (இரு பிரதிகள் கட்டுவதற்கான கட்டணம் ரூ.350/=) தொடர்பு: பாரதி, 430, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி இல. 3081. (C/17642)

### விற்பனைக்குண்டு

நல்ல நிலையிலுள்ள மாருதி எஞ்சின் (10H) விற்பனைக்குண்டு. தொடர்பு: பெ.பாஸ்கர், 74/2, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (91354)

### தவறிவிட்டது

மாலுசந்தி, அல்வாய் தெற்கு கரவெட்டி என்னும் முகவரியைச் சேர்ந்த முத்துக்குமார் சசிகலா என்பவரது விசேட அ.அட்டை 18.08.2001 அன்று யாழ். வீதிக்கும் நாவலர் வீதி அப்பையா கடைக்கும் இடையில் கைப்பையுடன் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சுவிஸ்சோ நகையகம், 44/1, யாழ். வீதி என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (91361)

சிமியோன் றொலஸ்கோவின் தே.அ.அட்டை (இல.770310865V) நாவாந்துறை கடற்கரை வீதியிலிருந்து நாவாந்துறை நாவலர் வீதி, தபால்கந்தோருக்கு இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் சிமியோன் றொலஸ்கோ (கொலம்பஸ்), 17/16, சென்.மேரீஸ் வீதி, நாவாந்துறை வடக்கு என்ற விலாசத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (91358)

## சமுர்த்தி அலுவலருக்கு நிரந்தர நியமனம்

வலி.வடக்கு,ஓக.20

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் கடமையாற்றிய 24 சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

நல்லூர் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் திருமதி இ. இரத்நராசா தலைமையில் பிரதேச செயலக மகாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற நிகழ்வில் நல்லூர் பிரதேச சபைத் தலைவர் க.மணிபல்லவராஜன் நிரந்தர நியமனக் கடிதங்களை வழங்கினார். (ம-86)

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஓக.20

வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுச்சேவை ஆணைக்குழுவினால் கலாசார உத்தியோகத்தர் பதவிக்கான நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்தவர்களை பயண ஒழுங்கு பற்றி ஆராய்வதற்காக இன்று பிற்பகல் 2 மணிக்கு ஆரியகுளத்திலுள்ள புதிய உயர்கலைக் கல்லூரியில் ஒன்று கூடுமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேற்படி கலந்துரையாடலுக்குத் சமுகமளிக்கும்போது சம்பந்தப்பட்டவர்கள் நேர்முகப் பரீட்சைக்கான கடிதங்களைக் கொண்டுவர வேண்டும் என்று யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் கோரியுள்ளது. (ம-7)

# பருத்தித்துறை நகரசபைக்கான நிதி ஒதுக்கீட்டில் புறக்கணிப்பு

பருத்தித்துறை நகர அபிவிருத்திக்கு வடமாகாண அபிவிருத்தி, புனரமைப்பு, புனர்வாழ்வு அதிகார சபை (றான்) போதிய நிதியை வழங்கவில்லை எனத் தெரிவிக்கப் படுகிறது.

இந்த நகரப் பகுதியில் உள்ள வீதிகளைப் புனரமைக்கவும் திருத்தவும் 58லட்சம் ரூபாவும் - சபைக்கான அலுவலகக் கட்டடத்தையும் பொது நூலகக் கட்டடத்தையும் அமைப்பதற்கு முதற்கட்டமாக 50 லட்சம் ரூபாவும் -

நிதி உதவி வழங்குமாறு பருத்தித்துறை நகரசபை வடக்கு அபிவிருத்தி, புனரமைப்பு, புனர்வாழ்வு அதிகார சபையிடம் கேட்டிருந்தது.

ஆனாலும் இதுவரை இவற்றிற்கான நிதி ஏதும் வழங்கப்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-173)

## தெய்வீக நிகழ்வு வரிசையில் இன்று

தொண்டமனாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில் நடைபெற்றுவரும் வருடாந்த மஹோற்சவத்தை ஒட்டி சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்றுவரும் உற்சவகால தெய்வீக நிகழ்வு வரிசையில் இரண்டாம் உற்சவமான இன்று காலை 10 மணியளவில் நல்லை ஆதீன ஓதுவார் சி.தில்லைமணியின் பண்ணிசை பக்கவாத்தியங்களுடன் இடம்பெறும்.

இந்த நிகழ்வுத் தொடரில் மூன்றாம் உற்சவமான நாளை காலை 10 மணியளவில் கவிமணி அன்னை தாசன் க.ஆனந்தராசா 'செல்வச் சந்நிதி' எனனுந் தலைப்பில் பக்கவாத்தியம் சகிதம் இசைச் சொற்பொழிவு நிகழ்த்துவார். (ம-173)

## தாய்மொழி விருத்திக்கு விசேட திட்டம்

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 5 இல் கல்வி கற்கும் மாணவர்களின் தாய்மொழி விருத்திக்கு "யுனிசெவ்" நிறுவனத்தின் அனுசரணையுடன் புதிய செயற் திட்டம் ஒன்று நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

இத் திட்டத்தினை நடைமுறைப் படுத்துவதற்கு முன்னோடியாக பாடசாலை ரீதியாக தாய்மொழியில் திறனடையாத மாணவர்களின் விவரங்களை வடமராட்சி கல்வி வலயம் திரட்டிவருகின்றது. (ம-182)

**ஜேர்மன் தொழில் நுட்ப நிறுவனத்தின் உதவியுடனும், புதுவை அருள்மிகு ஆலடி முருகன் தேவஸ்தான உதவியுடனும் நிர்மாணிக்கப் பெற்ற**

## புதுவை அருள்மிகு ஆலடி முருகன் தேவஸ்தான கலாசார மண்டபத் திறப்புவிழா

*காலம்* : இன்று (20-08-2001) திங்கள் பி.ப. 3.00 மணி

*இடம்* : **புதுவை அருள்மிகு ஆலடி முருகன் தேவஸ்தானம்**

*தலைவர்*: **திரு.வ.மகாராசா** அவர்கள்

*(தலைவர், ஜீ.ரீ.சற் பயனாளிகள் அமைப்பு, ஆவரங்கால் கிழக்கு)*

*பிரதம விருந்தினர்*: உயர்திரு.க.மகேதீஸ்வரன் அவர்கள்

*(பிரதேச செயலர், வலி.கிழக்கு பிரதேசச் செயலகம்)*

*சிறப்பு விருந்தினர்*:

- பிரதம இணைப்பாளர் அவர்கள் - ஜீ.ரீ.சற் ; ஜே.ஆர்.பி.
- சமூக ஆற்றுப்படுத்துநர் அவர்கள் - ஜீ.ரீ.சற் ; ஜே.ஆர்.பீ
- திரு.யூ.எல்.எ.ரவீ அவர்கள் - *(உபதலைவர், வலி.கிழக்கு பிரதேச சபை)*
- திரு. ஆ.குலேந்திரநாயகம் அவர்கள் - *(கிராம உத்தியோகத்தர், ஆவரங்கால் கிழக்கு)*

*நிகழ்ச்சி நிரல்*

☆ மங்கள விளக்கேற்றல்
☆ இறைவணக்கம்
☆ கலாசார மண்டபம் திறந்து வைத்தல்
☆ தலைவர் உரை
☆ விருந்தினர் உரை
☆ பட்டிமன்றம்

- வடமராட்சி கலை இலக்கிய சுவைஞர் சங்கமம் வழங்கும்

**திரைப்படங்களின் தரம் தங்கியிருப்பது திரைப்படக் கலைஞர்களிலா? திரைப்பட ரசிகர்களிலா?**

☆ *நன்றியுரை* :

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*ஜீ.ரீ.சற் பயனாளிகள் அமைப்பு, ஆவரங்கால் கிழக்க.*

*ஆவரங்கால் கிழக்கு, புத்தூர்.* (91362) புதுவை அருள்மிகு ஆலடி முருகன் தேவஸ்தான பரிபாலனசபை.

## மரண அறிவித்தல்

### சின்னக்குட்டி சின்னத்தம்பி

கரம்பைக்குறிச்சி, வரணியைச் சேர்ந்த சின்னக்குட்டி சின்னத்தம்பி 18-08-2001இல் காலமாகிவிட்டார்.

இவர் சரஸ்வதியின் அன்புக் கணவரும், புஸ்பராணி (சங்கீத ஆசிரியர்), நீலாம்பிகை (யா/வரணி மகாவித்தியாலயம்), காலஞ்சென்ற ஞானாம்பிகை மற்றும் மோகனாம்பிகை (இந்தியா) ஆகியோரின் அருமைத் தந்தையும், நகுலேஸ்வரன் (யா/சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ஜெயக்குமார் (யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், கவிப்பிரியா, சங்கீதன், கானப்பிரியா, சைந்தவி, சாரங்கி ஆகியோரின் பேரனும், சின்னப்பிள்ளை, ஆறுமுகம், காலஞ்சென்ற சின்னர் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நேற்று முன்தினம் (18-08-2001) சனிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

நிரந்தர முகவரி:
*கரம்பை குறிச்சி,*
*வரணி.*

தற்காலிக முகவரி:
*கரணவாய் மத்தி,*
*மாடாவ்னை,*
*கரவெட்டி.*

தகவல்:
சி.நகுலேஸ்வரன்
(மருமகன்)

(91363)

உ

## நல்லூர் - கல்வியங்காடு அருள்மிகு இலங்கைநாயகி மனோன்மணி அம்பாள் ஆலயம் புதிய சித்திரத்தேர் திருப்பணி

நாள் வேலை ஆரம்ப வைபவம்

அம்பிகை அடியார்களே!

அடியார்களின் அல்லல் போக்கி, அருள்பாலிக்கும் அன்னையாம் இலங்கைநாயகி மனோன்மணி அம்பாளின் புதிய சித்திரத்தேர்த் திருப்பணி வேலைகள் இன்று (20-08-2001) திங்கட்கிழமை நண்பகல் 12.05 மணி தொடக்கம் 1.35 மணிவரையுள்ள சுபவேளையில் ஆரம்பித்து, தொடர்ந்து நடைபெற அம்பிகையின் திருவருள் கைகூடியுள்ளது.

*சித்திரத்தேர் நிர்மாணிப்பு:-*
"தேவரதசிற்பணி"
"சிற்பஜோத"
**சு.இராசரெத்தினம் ஆசாரியார்**

மேற்படி நிகழ்வில் அம்பாள் அடியார்கள் அனைவரும் கலந்துகொண்டு அம்பாளின் புதிய சித்திரத் தேர்த் திருப்பணி வேலைகள் சிறப்பாக நடைபெறுவதற்கு தங்களால் இயன்ற நிதி உதவி, பொருள் உதவி, சரீர உதவி போன்றவற்றை வழங்கி ஒத்துழைக்குமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

சுபம்.

பொ.கிருஷ்ணமூர்த்தி சர்மா
ஆலய நிர்வாகம்.

சு.பாலசுப்பிரமணி ஐயர்
ஆலய உரிமையாளரும்,
ஆதீன கர்த்தாவும்.

(C/17934)

## நன்றியுடன் பாராட்டி வாழ்த்துகின்றோம்

*கலைவாணி சனசமூக நிலையம் – சுன்னாகம்*

எமது சனசமூக நிலைய புனரமைப்புக்கு 4 லட்சம் ரூபாநிதியை ஒதுக்கீடு செய்து, அதில் 2லட்சம் ரூபாவை உடன் வழங்கியமைக்காக,



வடக்கு அபிவிருத்தி, புனரமைப்பு, புனர்வாழ்வு மற்றும் வடக்கு - கிழக்கு தமிழ் விவகாரங்கள் இந்து கலாசார மாண்புமிகு அமைச்சர்
**கே.என்.டக்ளஸ் தேவானந்தா**
அவர்களுக்கும்



யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் ஈ.பி.டி.பியின் யாழ்.மாவட்ட பிரதம அமைப்பாளருமாகிய கௌரவ
**கே.வி.குகேந்திரன் (ஜெகன்)**
அவர்களுக்கும்



வலி.தெற்கு பிரதேச சபைத் தலைவரும் வலி.தெற்கு பிரதேச ஈ.பி.டி.பி. அமைப்பாளருமாகிய
**உயர்திரு. கைலைநாதன் கமலசேகரன்**
அவர்களுக்கும்



வலி.தெற்கு பிரதேச சபை உறுப்பினரும் வலி.தெற்கு பிரதேச ஈ.பி.டி.பியின் பிரதி அமைப்பாளருமாகிய
**திரு. சிவதாசன் சந்திரகாந்தன்**
அவர்களுக்கும்

எமது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் கூறி, உளங்கனிந்த நன்றிகளையும் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*சுன்னாகம்.* (C/17920)

*- கலைவாணி சனசமூக நிலைய நிர்வாகிகளும், மக்களும்.*

## வெள்ளி விழா வாழ்த்து



**திரு.ச.பொ.தில்லைநாதன் - தவமணிதேவி**

இன்று (20.08.2001) திங்கட்கிழமை தங்களுடைய திருமண பந்தத்தில் வெள்ளிவிழாக் காணும்

**தில்லைநாதன் - தவமணிதேவி**

தம்பதிகளை மேலும் பல்லாண்டு காலம் நலமுடன் நீடூழி வாழ திருவருள் புரியவேண்டும் என்று நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளைப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம்.

*நயினாதீவு.* (91360) - பிள்ளைகள்.

கட்டுநாயக்கா தாக்குதல் பற்றி

# மடுமாதா யாத்திரிகர்களுக்கு

# புலிகள் காண்பித்த ஒளிநாடா

கொழும்பு, ஒக. 20

மடுமாதா ஆலயத்துக்குச் சென்ற யாத்திரிகர்களுக்கு, கட்டுநாயக்கா விமானத்தளம் மற்றும் விமான நிலையத் தாக்குதல் சம்பவம் பற்றிய— சிங்கள மொழியிலமைந்த விவரணத்துடன் கூடிய — ஒளிநாடாப்படங்களை விடுதலைப்புலிகள் காண்பித்ததாகக் கூறப்படுகிறது.

மடுமாதா உற்சவத்தை முன்னிட்டு கடந்தவாரம் ஆயிரக்கணக்கான தென்பகுதி யாத்திரிகர்கள் மடுவுக்குச் சென்று நான்கு தினங்கள் தங்கியிருந்த பின் திரும்பியுள்ளனர். அவர்கள் அங்கு தங்கியிருந்த சமயத்தில் இரவு நேரங்களில் கட்டுநாயக்கா விமானப்படைத்தளத் தாக்குதல் குறித்த வீடியோப்படம் சிங்கள மொழி மூலமான விளக்கத்துடன் காண்பிக்கப்பட்டது.

விமானப்படைத்தளத்திற்கு வெளியேயுள்ள குரான விளையாட்டு மைதானத்திலிருந்து, விமானப்படையினரின் சீருடையுடன் தாக்குதலுக்குப் புறப்பட்டது முதல், விமானப் படை விமானங்கள் மீதான தாக்குதல்கள் வரை இந்தப் படக்காட்சியில் இடம்பெற்றுள்ளன.

அந்தப் படத்தில் —

விமானப்படைத்தளப் பாதுகாப்பு வேலியை வெட்டி உள்ளே நுழையும் புலிகள் பதுங்கிப் பதுங்கிச் சென்று அப்பகுதியில் பாதுகாப்புக் கடமையில் மோப்ப நாயுடன் ஈடுபட்டுக் கொண்டிருந்த விமானப் படைவீரரையும், மோப்ப நாயையும் முதலில் சினைப்பர் தாக்குதல் மூலம் கொல்கின்றனர்.

அதன் பின்னர் இருள் சூழ்ந்த பகுதியூடாக மேலும் முன்னேறிச் சென்ற புலிகள் உயர்ந்த பாதுகாப்புக் கோபுரங்களிலிருந்து அப்பகுதிகளை நோக்கிச் சக்தி மிக்க மின்சார வெளிச்சத்தைப் பாய்ச்சிக் கொண்டிருந்த படையினரின் மீது சினைப்பர் தாக்குதலை நடத்தி அவர்களைக் கொன்ற பின்னர் விமான ஓடுபாதைப் பக்கம் இருளினுள் ஊடுருவுகிறார்கள்.

அதுவரை விமானப் படைச் சீருடையில் சென்ற புலிகள், அதன் பின்னர் அந்தச் சீருடைகளைக் களைந்துவிட்டுக் கறுப்புச் சீருடைகளுடனும், காடுகளினுள் தாக்குதல் நடத்தச் செல்லும் படையணிகள் தங்கள் உருவங்களை மறைப்பதற்காக முகத்திலும் கைகளிலும் பூசும் இயற்கை வர்ணக் கலர்களை பூசி உருமறைப்புச் செய்தவாறு உள்ளே பதுங்கிப் பதுங்கிச் செல்கிறார்கள்.

அவ்வேளையில் அப்பகுதிக்குச் சற்று அப்பால் படையினர் நடமாடுகிறார்கள். அவர்களையும் ஊடுருவிச் செல்லும் புலிகள், விமானத்தள ஓடுபாதையை நெருங்கி ஓரளவு வெளிச்சத்தில் தெரியும் ஹெலிகொப்ரர்கள் மற்றும் விமானங்களை நோக்கி ஆர். பி.ஜி. மற்றும் கிரனைட் லோஞ்சர்களால் தாக்குவதும், அவை வெடித்துச் சிதறித் தீப்பற்றிக் கொழுந்துவிட்டெரிவதும் காண்பிக்கப்படுகின்றன.

இந்தப் பட ஒளிநாடாவை தென்பகுதி யாத்திரிகர்கள் பலர்புலிகளிடம் பெற்றுள்ளனர். அத்துடன் தமிழர்களுக்கு எதிராக இதுவரை காலமும் நடந்த பல்வேறு அட்டூழியங்களைச் சித்திரிக்கும் ஒளிநாடாப் படக்காட்சிகளும் இவர்களுக்குக் காண்பிக்கப்பட்டுள்ளன.

இதைவிட புலிகளின் போராட்ட வரலாறு மற்றும் தமிழர்களுக்கு எதிரான அடக்குமுறைகளைச் சித்திரிக்கும் சிங்கள மொழிமூல ஒளிநாடாக்களும் துண்டுப்பிரசுரங்களும் புலிகளினால் இவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. (ஓ)

# சைவசித்தாந்த பண்டிதர் பட்டப்பரீட்சை முடிவுகள்

யாழ். சைவபரிபாலன சபையினரால் கடந்த மே மாதம் நடத்தப்பட்ட சைவசித்தாந்த பண்டிதர் பட்டப் பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

சைவசித்தாந்த பிரவேச பண்டிதர், சைவசித்தாந்த பாலபண்டிதர், சைவசித்தாந்த பண்டிதர் என மூன்று பிரிவுகளாக நடத்தப்பட்ட இந்தப் பட்டப் பரீட்சைகளில் யாழ்ப்பாணம், திருகோணமலை, வவுனியா ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த 27 பேர்சித்தி அடைந்துள்ளனர்.

இதன்படி சைவ சித்தாந்த பிரவேச பண்டிதர் பரீட்சையில் இரண்டாம் பிரிவில் —

ஜனதீபா செகராசசிங்கம் (பண்டத்தரிப்பு), பிரிந்தா பரராசசிங்கம் (சண்டிலிப்பாய்), ஸ்ரீலதா வைத்திலிங்கம் (புங்குடுதீவு), தர்மலிங்கம் நகுலன் (தையிட்டி) ஆகியோரும் —

மூன்றாம் பிரிவில்: தம்பிப்பிள்ளை சுதன் (சண்டிலிப்பாய்), சூ. சிவதாஸ் (குருமண்காடு) ஆகியோரும் சித்தியடைந்துள்ளனர்.

சைவசித்தாந்த பாலபண்டிதர் பரீட்சையில் இரண்டாம் பிரிவில்: திருமதி சத்தியரூபன் தயாநிதி (நீர்வேலி) மனோரஞ்சினி கப்பிரமணியம் (அராலி) ஆகியோரும்—

மூன்றாம் பிரிவில்; காஞ்சனா உத்திரகுமாரன் (மாவிட்டபுரம்), சு. புஸ்பறேகா (நீர்வேலி) ஆகியோரும், சுமதி பரமேஸ்வரன் (நீர்வேலி) நூனசித்தியும் பெற்றுள்ளனர்.

சைவசித்தாந்த பண்டிதர் பரீட்சையில் இரண்டாம் பிரிவில்—

அம்பலவாணர் இராஜரட்ணம் (நல்லூர்), வைத்திலிங்கம் பாலகிருஷ்ணன் (திருகோணமலை), கு. மாலினி (கந்தர்மடம்), ஐ. சித்திரா (அளவெட்டி), விஜிதா நவரட்ணம் (மாவிட்டபுரம்), ரேவதி செல்வராசா (நீர்வேலி), கிருபாகினி குமாரசாமி (அச்சுவேலி), வி. பராசக்தி (நீர்வேலி), இந்திரா செல்வலிங்கம் (நீர்வேலி,வல்லிபுரம் வரதராஜா (கொக்குவில்), வெற்றிவேல் சக்திவேல்(வட்டுக்கோட்டை) ஆகியோரும்—

முன்றாம் பிரிவில்:- குட்டிப்பிள்ளை அரசேஸ்வரன் (நல்லூர்), றாபி திருநாவுக்ரசு (சண்டிலிப்பாய்), ஜமுனா மயில்வாகனம் (கொக்குவில்) ஆகியோரும், குமாரசாமிசர்மா சிவராஜசர்மா (திருநெல்வேலி) நூனசித்தியும் பெற்றுள்ளனர்.

மேற்படி பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை முடிவுகள் யாவும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக சைவ பரிபாலன சபையின் பரீட்சைச் செயலாளர் சைவப்புலவர் வ. கந்தசாமி தெரிவித்தார். (ம – 7)

குடாநாட்டின் மேற்குக் கரையில் உள்ள

# உவர் நீர்த் தடுப்பு அணையை புனரமைக்கப் புதிய திட்டம்

மூளாய், ஒக. 20

யாழ். குடாநாட்டின் மேற்குக் கரையில் உள்ள உவர் நீர்த் தடுப்பு அணையைப் புனரமைப்பதற்கு உலக வங்கியின் உதவியுடன் புதிய செயல்திட்டம் ஒன்று வகுக்கப்படவுள்ளது.

திட்டத்தைத் தயாரிக்கும் முதற்கட்ட நடவடிக்கையாக கடந்தவாரம் குடாநாட்டுக்கு வந்திருந்த உலக வங்கி அதிகாரிகள் மேற்படி உவர் நீர்த் தடுப்பு அணையை நேரில் சென்று பார்வையிட்டனர்.

வழுக்கை ஆற்றின் கழிமுகப்பகுதியில் இருந்து ஆரம்பமாகும் இந்த அணைக்கட்டு கடற்கரையோரமாக நீண்டு சென்று பொன்னாலைச் சந்திக்கு அண்மையில் முடிவடைகின்றது.

நீண்ட காலமாகப் புனரமைப்புச் செய்யப்படாமல் உள்ள இந்த அணைக்கட்டைப்பார்வையிட்ட பின்னர் மேற்படி பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகளையும், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளையும் உலக வங்கி அதிகாரிகள் சந்தித்துப் பேசினர்.

அணைக்கட்டைப் புனரமைப்பது தொடர்பாகவும், பொதுமக்கள் எதிர்நோக்கும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பாகவும் உலக வங்கி அதிகாரிகளால் விவரங்கள் திரட்டப்பட்டன.

கடல் நீர் உட்புகுவதைத் தடுப்பதன் மூலம் பயிர்செய்யும் நிலப்பரப்பு உவர்த் தன்மை அடைவதையும் —

நிலக்கீழ் நன்னீர் உவர் நீராக மாறுவதையும்—

தடுக்க முடியும் என்பதால், மேற்படி இருவிடயங்களையும் கருத்தில் கொண்டு புதிய செயல்திட்டம் தயாரிக்கப்படவுள்ளது. [ம-99]

# யுனிசெவ் உதவியுடன் மலசலகூடம்

மூளாய், ஒக. 20

வலிகாமம் மேற்குப் பிரதேச செயர் பிரிவில் யுனிசெவ் நிறுவனத்தின் உதவியுடன் மலசல கூடங்கள் அமைக்கப்படவுள்ளன.

மூளாய், பொன்னாலை, வட்டு. தெற்கு, அராலி கிழக்கு ஆகிய கிராமங்களிலேயே மேற்படி உதவித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. பயனாளிகளின் பங்களிப்புடன் செயற்படுத்தப்படவிருக்கும் இத் திட்டத்தின்படி குறிப்பிட்ட பெறுமதியுடைய கட்டடப்பொருள்களை யுனிசெவ் நிறுவனம் வழங்கும். இவற்றைப் பயன்படுத்தியும், ஏனைய பொருள்களைச் சேர்த்தும் மலசல கூடத்தைக்கட்டி முடிக்கப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-90)

# துப்பாக்கியைப் பறித்துச் சென்ற சிப்பாய்க்கு ஆறு மாதச்சிறை

வலி. வடக்கு ஒக. 20

பலாலி இராணுவ முகாமில் காவலில் இருந்த பெண் சிப்பாயின் துப்பாக்கியைப் பறித்துக்கொண்டு ஓட முற்பட்ட முன்னாள் இராணுவ சிப்பாய் ஒருவருக்கு ஆறு மாதக் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இராணுவச் சிப்பாயாகக் கடமையாற்றிய காலத்தில் கொலை முயற்சி மற்றும் கத்தியால் குத்தி காயம் உண்டாக்கியமை போன்ற குற்றங்களுக்காகப் பாணந்துறை நீதிமன்றத்தினால் 4 ஆண்டுகள் கடூழியச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட விஜயசிறி ஆராய்ச்சி தொன் ஜெயசிறி என்பவரே மீண்டும் மல்லாகம் நீதிமன்றினால் தண்டிக்கப்பட்டுள்ளார்.

ரி-46 ரக துப்பாக்கி மற்றும் அதற்குரிய சன்னங்கள் என்பவற்றைக் கொண்டு ஓடியதாக காங்கேசன் துறைப் பொலீஸாரால் குற்றம் சாட்டப்பட்டு மல்லாகம் மாவட்ட நீதிவான் பா சுப்பிரமணியம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டார்.

எதிரி குற்றத்தை ஒப்புக் கொண்டாதைத் தொடர்ந்து அவருக்கு ஆறு மாதக் கடூழியச் சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்த நீதிவான் குற்றவாளிக்கு பாணந்துறை நீதிமன்றம் விதித்த தண்டனைக் காலம் முடிவடைந்ததும் அவருக்கு தொடர்ந்து இந்த 6 மாதத் தண்டனை வழங்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்—

[ம-86]

# சுழிபுரத்தில் புராணப்படிப்பு

சுழிபுரம், ஒக. 20

சுழிபுரம் மேற்கு ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி கோயிலில் திருச்செந்தூர் புராணப் படிப்பு நடைபெற்று வருகின்றது.

தினமும் பிற்பகல் 3 மணி முதல் மாலை வரை நடைபெற்று வரும் புராணப் படிப்பு பூசை ஆராதனையுடன் முடிவடைகின்றது.

உரையாசிரியர் சைவமணி சி. மருதபிள்ளை உரை கூறி வருகின்றார். (ம-7-28)

# பாரவூர்தி சங்க உறுப்பினர்க்கு சகாய நிதி

யாழ்ப்பபணம், ஒக. 20

யாழ். மாவட்ட தனியார் பாரவூர்தி கூட்டுறவுச் சங்கத்தினால் இந்த வருடம் அதன் அங்கத்தவர்கள் 48 பேருக்கு அவர்களின் குடும்பங்களில் இடம்பெற்ற மரணச் சடங்கு திருமணம் பூப்புனித நீராட்டு விழா போன்றவற்றுக்கு சகாயநிதி வழங்கப்பட்டதாக சங்கத் தலைவர் வி. குமாரசாமி தெரிவித்துள்ளார்.

கடும் நோயினால் பாதிக்கப்பட்டு வருவதாக பொது உதவி கோருபவர்களுக்கு உதவு தொகை வழங்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

(ஒ-1)

# முதியோர்களுக்கு தனியாக விசேட அடையாள அட்டை

## சமூக சேவை திணைக்களம் நடவடிக்கை

வடமராட்சிகிழக்கு, ஒக. 20

முதியோர்களை அடையாளம் கண்டுகொள்வதற்காக அவர்களுக்கெனவிசேட அடையாள அட்டைகளை வழங்குவதற்கு சமூகசேவைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

65 வயதுக்கு மேற்பட்டவர்கள் முதியோர்களுக்கான அடையாள அட்டையினைப் பெறத் தகுதியுடையவர்களாவர். இவ் வயதுக்குமேற்பட்டவர்கள் தத்தமது பிரதேச செயலகங்களுக்கூடாக விண்ணப்பித்து இந்த அடையாள அட்டையினைப் பெறமுடியும்.

இந்த அடையாள அட்டையினை வைத்திருப்பதன் மூலம் வங்கிகள், பொலிஸ் நிலையம், புகையிரத நிலையம் மற்றும் அரச அலுவலகங்களில் வயோதியர்கள் தமது அன்றாட கருமங்களை இலகுவாக்க முடியும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

(ம-182)

# முல்லைக் கடலில் கைதான மீனவர் யாழ். சிறையில்

வடமராட்சி, ஒகஸ்ட் 10

முல்லைத்தீவுக் கடலில் மீன் பிடிக்கச் சென்றபோது கடற்படையினரால் கைது செய்யப்பட்ட மீனவர் ஒருவர் தற்போது யாழ். சிறைச்சாலையில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த 14 ஆம் திகதி முல்லைத்தீவுக் கடலில் கட்டுமரத்தில் மீன்பிடிக்கச்சென்ற வேளை நடுக்கடலில் தத்தளித்துக்கொண்டிருந்த சுண்டிக்குளம் அம்பலாந்தோட்டம் குருசடியைச் சேர்ந்த கந்தையா பாலசிங்கம் (53 வயது) என்பவரைக் கடற்படையினர் கைதுசெய்து பருத்தித்துறைப் பொலீஸாரிடம் ஒப்படைத்திருந்தனர்.

பருத்தித்துறைப் பொலீஸார் இந்த நபரைக் கடந்த சனிக்கிழமை பருத்தித்துறை மேலதிக மாவட்ட நீதிவான் அன்னலிங்கம் பிரேம்சங்கர் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

இந்த மீனவரை விடுதலை செய்ய உத்தரவிட்ட நீதிவான் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு மூலம் அவரைச் சொந்த இடத்துக்கு அனுப்பி வைக்குமாறும்—

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அவரைப் பொறுப்பேற்கும் வரையில் யாழ். சிறைச்சாலையில் வைக்குமாறும் உத்தரவிட்டார்.

(ம-173-117)

# இசைத் தென்றல் நிகழ்ச்சி

யாழ். கிறிஸ்தவ ஒன்றியம் 'இறை இசைத் தென்றல்' நிகழ்ச்சி ஒன்றை எதிர்வரும் 26 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலய முன்றிலில் நடத்த ஏற்பாடு செய்துள்ளது. (ம-51)

# விலை வீழ்ச்சி

யாழ்ப்பாணத்தில் மரக்கறிப் பொருள்களின் விலை மிகவும் வீழ்ச்சி அடைந்து காணப்படுகின்றது.

சுன்னாகம் மருதனார் மடம் சந்தையில் வெண்டிக்காய் கிலோ 4 ரூபா முதல் 5 ரூபா வரையும், தேசிக்காய் கிலோ 18 ரூபா முதல் 20 ரூபா வரையும், முருங்கைக்காய் கிலோ 15 ரூபா முதல் 20 ரூபா வரையிலும் விற்பனை செய்யப்பட்டு வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. (ம-86)

## காதலனைப் பெரிதாக நினைத்து

# தாயை உதாசீனம் செய்ததற்கு எனக்கு கிடைத்த தண்டனையே அவரது மரணம்

### வல்வையில் கொலையுண்டவரின் மகள் சாட்சியம்

என்னை சிறுவயது முதல் வளர்த்து ஆளாக்கி என் மேல் அளவு கடந்த பாசத்தைக் கொட்டிய எனது தாயாரை உதாசனம் செய்து காதலனையே பெரிதாக நினைத்த எனக்கு தாயார் கொலை செய்யப்பட்டமை பெரிய தண்டனையாக அமைந்துவிட்டது.

- இவ்வாறு கடந்த வாரம் வல்வெட்டித்துறைப் பகுதியில் கொலையுண்ட புஷ்பாதேவி வைத்திலிங்கத்தின் மரண விசாரணையின் போது சாட்சி அளித்த அவரது வளர்ப்பு மகளான வைத்திலிங்கம் பிரசாந்தி (வயது 17) தெரிவித்தார்.

மேலும் அவர் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

என்னைப் பெற்றவர்களை எனக்குத் தெரியாத நிலையில் சிறுவயது முதல் என்னை வளர்த்து வந்த எனது வளர்ப்புத் தாயாரான வைத்திலிங்கம் புஷ்பாதேவி கொலை செய்யப்பட்டுள்ளதாக வல்வெட்டித்துறை பொலீஸாரால் யாழ்.சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள எனக்குத் தெரிவிக்கப்பட்டது.

யாழ்.சிறைச்சாலையில் உள்ள என்னை அம்மா வந்து சந்திப்பார். கடந்த ஒன்பதாம் திகதி (09.08) பி.ப.3.30 மணிக்கு அவர் என்னைச் சந்தித்த போது எனது காதலர் தன்னைக் கத்தியைக் காட்டிப் பயமுறுத்தியதாகக் கூறினார்.

மீசாலையைச் சேர்ந்த எனது காதலனுடன் நான் பழகுவதை அம்மா விரும்பாததால் வேறு இடத்தில் எனக்கு மாப்பிள்ளை பார்க்க ஆயத்தங்கள் செய்தார். இதனால் நான் காதலனுடன் சென்று புலோலியில் உ[illegible]ள காதலனின் உறவினர் வீட்டி[illegible]ரு மாதம்வரை காதலனுடன் த[illegible]ருந்தேன். அந்தக் காலப்பகுதியில் அம்மாவுடன் எந்தத் தொடர்புகளையும் ஏற்படுத்த நான் விரும்பவில்லை.

இந்தக் காலப்பகுதியில் காதலன் எனக்குத் தாலி கட்டவுமில்லை, திருமணப் பதிவும் மேற்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

அம்மா கொடுத்[illegible] முறைப்பாட்டையடுத்து பொலி[illegible]ரால் கைது செய்யப்பட்ட நான் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தேன். விளக்கமறியலில் இருந்த வேளையில் எனது காதலன் என்னை வந்து சந்திக்கவில்லை.

அப்பா இறந்த பின்னர் அம்மா பென்சன் எடுத்து என்னை நன்றாகக் கவனித்து வந்தார். என்னை யாரும் குறையாகக் கூறினால் அவர்களுடன் சண்டை பிடிப்பார். இதனால் அம்மாவின் உறவினர்கள், அயலவர்கள் எவருடனும் நாங்கள் கதைப்பதில்லை.

என்மேல் உயிரையே வைத்திருந்த அம்மாவின் விருப்பத்திற்கு மாறாக நடந்து கொண்டது தவறுதான். அதற்கு கடவுள் கொடுத்த தண்டனையே அம்மாவின் மரணம் என நினைத்து கவலையடைகிறேன். கத்தி கொண்டு அம்மாவை பயமுறுத்தியதால் அவரை எனது காதலனே கொலை செய்திருக்கலாமெனச் சந்தேகிக்கிறேன் - என்றார்.

இறந்தவரின் சகோதரான கோ.இராஜராஜேஸ்வரன் சாட்சியமளிக்கையில் தெரிவித்ததாவது:-

இறந்தவர் எனது அக்கா. கடந்த 10ஆம் திகதி காலை நான் வீட்டில் இருந்த வேளையில் ஆயுர்வேத வைத்தியரான சுப்பிரமணி சர்மா என்பவர் என்னை அழைத்து எனது அக்கா அலங்கோலமாக வீழ்ந்து கிடப்பதாகக் கூறியதையடுத்து நாங்கள் அங்கு சென்று பார்த்தோம். வீட்டு போட்டிக்கோவில் தலை இரத்த வெள்ளத்தில் கிடக்க மல்லாந்த நிலையில் அக்கா விழுந்து கிடந்ததைக் கண்டேன். அவரின் கழுத்தின் குறுக்கே அலவாக்கு ஒன்று காணப்பட்டது. வீட்டின் கதவு திறந்த நிலையில் காணப்பட்டது. அவர் கிடந்த கோலத்தைப் பார்த்து அவர் இறந்திருககலாமெனக் கருதி வல்வெட்டித்துறைப் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தேன்.

பின்னர் பருத்தித்துறை நீதிவான் வந்து பார்வையிட்டார். அதன் பின் பிரேத பரிசோதனை நடத்தப்பட்டு சடலம் என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. நீதிவானின் உத்தரவின் பேரில் சடலம் மயானத்தில் புதைக்கப்பட்டது.

எனது அக்காவுக்குப் பிள்ளைகள இல்லாததால் அத்தான் தொழில் நிமித்தம் மட்டக்களப்பு சென்றபோது பிரசாந்தி என்னும் பிள்ளையைத் தத்தெடுத்து வந்து வளர்த்தார். அவர் இப்போது யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அக்கா தனது மகள் மீது பாசமாக இருந்ததால் மகளின் நடத்தை மீது குறை சொல்லும் ஊரவர்களுடன் தர்க்கம் செய்வார்.

அந்தப் பிள்ளை ஒரு நபருடன் ஓடிச்சென்று பின்னர் வல்வெட்டித்துறை பொலீஸாரால் பிரித்து வைக்கப்பட்டார். இதனால் அக்கா மிகுந்த மனவேதனையடைந்து காணப்பட்டார். அக்காவின் மரணம் தொடர்பாக, அவரது காதலன் மீது எமக்குச் சந்தேகம் உள்ளது - என்றார்.

இறந்தவரின் மற்றொரு சகோதரரான கோ.கருணானந்தராசா சாட்சியமளிக்கையில் சொன்னதாவது:-

கடந்த பத்தாம் திகதி காலை எனது அக்கா அலங்கோலமாகக் கிடப்பதாக அறிந்து அங்கு சென்ற வேளையில் அவரின் வீட்டுப் போட்டிக கோவில் இரத்த வெள்ளத்தில் காணப்பட்டார்.

அக்காவும் மகளும் ஒரு வருடமாகப் பாதுகாப்புக் காரணமாக எனது வீட்டிலேயே இரவு தங்குவார்கள். அவவின் மகள் தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த நபருடன் தொடர்பு வைத்துள்ள விடயத்தை அக்காவுடன் கதைத்ததால் அவர்கள் எனது வீட்டுக்கு மூன்று நான்கு மாதங்களாக வருவதை நிறுத்திக் கொண்டார்கள்.

அக்காவின் மகள் பிரசாந்தி மூன்று தடவைகள் தனது காதலனுடன் ஓடியதால் அந்த நபருக்கு தனது மகளைத் திருமணம் செய்துகொடுக்க மாட்டேன் எனக்கூறி வேறு மாப்பிள்ளை பார்ப்பதில் அக்கா ஈடுபட்டார்.

சம்பவ தினத்திற்கு முதல்நாள் மாலையில் இறந்தவர் ஆணொருவருடன் சத்தம் போடுவதைக் கேட்டேன். அவருடன் கதைத்தது யார் என்று தெரியாது. இறந்தவர் தனது நகைகளையும் பணத்தையும் தன் மடியிலேயே வைத்திருப்பார். அவர் இறந்த பின்னர் அவைகளையும் காணவில்லை - என்றார்.

வைத்திலிங்கம் புஷ்பாதேவியின் மரணம் தடித்த ஆயுதமொன்றினால் தாக்கப்பட்டதால் ஏற்பட்ட மூளைப் பாதிப்பாலும், கழுத்து நெரிக்கப்பட்டதாலும் ஏற்பட்டதென தீர்ப்பு வழங்கிய நீதிவான் இந்தச் சம்பவத்தில் பாரிய குற்றங்கள் புரியப்பட்டுள்ளதால் துரித நடவடிக்கை எடுக்குமாறு பொலீஸாரைப் பணித்தார்.

இதேவேளை -

இச்சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில் வல்வெட்டித்துறையில் தங்கியுள்ள சின்னையா ரகு என்பவரை வல்வெட்டித்துறைப் பொலீஸார் கைது செய்து நீதிமன்றில் ஆஜர் செய்தனர்.

நீதிமன்றின் கட்டளைப் பிரகாரம் சந்தேக நபர் எதிர்வரும் 22ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

(ம-117)

## வீதியைத் திருத்துமாறு கோரிக்கை

வடமராட்சி,ஓக.20

பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை ஏற்றி இறக்கச்செல்லும் லொறிகளின் போக்குவரத்து வசதி கருதி பருத்தித்துறை பஸ் நிலையத்திலிருந்து துறைமுகம் நோக்கிச் செல்லும் முதலாம் குறுக்குத்தெருவை உடனடி யாகத் திருத்தியமைக்குமாறு படையினர் பருத்தித்துறை நகர சபையிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

போதிய நிதி இன்னமும் கிடைக்காமையினால் இவ்வீதியைத் திருத்த முடியாதிருப்பதாக பருத்தித்துறை நகர சபை கவலை தெரிவித்துள்ளது.

(ம-173)

## பருத்தித்துறையில் கொல்களம் அமைப்பு

பருத்தித்துறை மீன் சந்தையில் கொல்களம் ஒன்று பருத்தித்துறை நகரசபையால் அமைக்கப்பட்டுள்ளது.

மூன்று லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள இந்தக் கொல்களம் விரைவில் இறைச்சி வியாபாரிகளின் பாவனைக்காகத் திறந்து விடப்படவுள்ளது.

இறைச்சி விற்பனைக்காக ஆடு, மாடுகளை வெட்டுவோர் இனிமேல் கொல்களத்திலேயே அவற்றை வெட்ட வேண்டும் என்று பிரதேச சபை அறிவுறுத்தியுள்ளது. (ம-173)

## ஆலய திருப்பணி வேலைகள்

மானிப்பாய் - ஆனைக்கோட்டை பிரதான வீதியிலுள்ள புற்கைதின்னி பிள்ளையார் ஆலயத்தில் திருப்பணி வேலைகள் ஆலய பரிபாலன சபையினரால் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

புதிதாக நிறுவப்பட்ட மணிக்கோபுரத்தின் கட்டட வேலைகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளன. கொடிக்கம்பம் அமைக்கப்பட்டு வருவதுடன், ஆலயத்திற்கென சகடைத்தேர் ஒன்றும் உருவாக்கப்பட்டு வருகின்றது.

(ம-135)



யாழ்.மத்தியூஸ் வீதியில் அமைந்திருக்கும் குடி தண்ணீர் பொதுக் கிணறை கிறீன்ஸ் விளையாட்டுக்கழகம் புனரமைப்புச் செய்துள்ளது. இக்கிணறு மக்களின் குடி தண்ணீர் பாவனைக்காக அண்மையில் திறந்து வைக் கப்பட்ட போது எடுக்கப்பட்ட படம். (ஐ-17)

# மாற்றுத் தொழில்களில் ஈடுபடுவதற்கு மீனவருக்கு உலக வங்கி உதவ வேண்டும்

### வடமராட்சி கடற்றொழிலாளர் கூட்டுறவு சமாச செயலர் கோரிக்கை

வடமராட்சி,ஓக.20

வடமராட்சிப் பிரதேச கடற்றொழிலாளர்கள் சுதந்திரமாகவும் நிரந்தரமாகவும் கடற்றொழில் செய்யும் நிலை ஏற்படும்வரை அவர்கள் மாற்றுத் தொழில்களை மேற்கொள்ள உலக வங்கி உதவ வேண்டும்.

- இவ்வாறு வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசச் செயலாளர் எஸ்.சூரியகுமாரன் உலக வங்கித் தூதுக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

சில தினங்களுக்கு முன்னர் உலகவங்கிப் பிரதிநிதிகள் குழு வடமராட்சி மீனவர் சங்கங்கள், விவசாயிகள் சங்கங்கள் ஆகிய வற்றின் பிரதிநிதிகளைச் சந்தித்து அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தேவைகள் என்பன குறித்து கேட்டறிந்து கொண்டனர்.

இச்சந்திப்பின்போது வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர்கள் கூட்டுறவுச் சங்க சமாசச் செயலாளர் எஸ்.சூரியகுமாரன் மேற்கண்ட கோரிக்கையை விடுத்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த 1990ஆம் ஆண்டு முதல் கடற்பிரதேசங்களில் கடற்றொழிலாளர்கள் சுதந்திரமாகத் தொழில் செய்யமுடியவில்லை.

அநுமட்டுமன்றி நிரந்தரத் தொழிலாகவும் கடற்றொழிலைச் செய்ய முடியாதுள்ளது. இதனால் இம்மண்ணில் வாழவழியற்ற நிலைக்கு மீனவர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

கடற்றொழிலார்களின் வாழ்வு நிலை உயர, சுதந்திரமாகவும், நிரந்தரமாகவும் கடற்றொழிலை மேற்கொள்ளும் காலம் வரும்வரை கடற்றொழில் சமூகம் மாற்றுத் தொழில்களைப் பெற்றுக்கொள்ள அல்லது சுயமாக மேற்கொள்ள உலகவங்கி உதவ வேண்டும்.

அத்துடன் தொண்டமனாறு தொடக்கம் முனைவரையான கடல் பிரதேசத்தில் அதிகரித்து வரும் கடல் அரிப்பைத் தடுக்க இப்பிரதேசத்தில் தடுப்புசுவர் எழுப்பப்பட வேண்டும்.

வடமராட்சி கரையோரக் கிராமங்களுக்கு குடிதண்ணீரை குழாய் மூலம் விநியோகிக்க 10 ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டம் கைவிடப்பட்டுள்ளது. இத்திட்டத்தை செயற்படுத்த வல்லிபுரக்கோயில் பகுதியிலிருந்து கரையோரக் கிராமங்களுக்கு குடிதண்ணீர் விநியோகிக்க வசதி செய்து தரவேண்டும்.

- இவ்வாறு அவர் மேலும் தெரிவித்தார். (ம-173)


## புதிய கருமபீடம்

**இலங்கை வங்கியின் 62 வருட சேவை நிறைவையொட்டி**

**தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் போது ஒரு விசேட கருமபீடம் அமைக்கப்பட்டுள்ளது.**

20.08.2001 முதல் 31.08.2001 வரை செயற்படவுள்ள இக் கருமபீடம் வலிகாமம் வடக்கு பிரதேச சபைத் தலைவர் திருமதி பா.ஸ்ரீபாஸ்கரன் அவர்களால் இலங்கை வங்கி யாழ். பிரதேச முகாமையாளர் (ACTING) திரு.சி.விக்னராஜா தலைமையில் இன்று திறந்து வைக்கப்படும்.

☆18+ சேமிப்புக் கணக்கு (விசேட திட்டங்கள் அடங்கிய)
☆சேமிப்புச் சான்றிதழ் ☆நிலையான வைப்பு
☆சிறுவர் சேமிப்புக் கணக்கு ☆மகளிர் யொற் கணக்கு
☆சாதாரண சேமிப்புக் கணக்கு ☆விவசாயிகள் யொற் கணக்கு

**போன்ற சேவைகளைப் பெற்றுக்கொள்ளலாம்.**

(91364)

இலங்கை வங்கி காங்கேசன்துறைக் கிளை
இலங்கை வங்கி உங்கள் தேவைகளைச் சந்திக்கும்



We Serve

**நல்லூர் லயன்ஸ் கழக ஆதரவில்**

## வணிகக்கல்விக் கருத்தரங்கு

*இடம்:* யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம்
*காலம்:* 22.08.2001 புதன் காலை 9.00 மணி
*கருத்துரை:* திரு.B.S.பசில் ஜெனதாஸ் (B.B.A.)
பிரபல வணிகக்கல்வி ஆசிரியர்

2001 ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் அனைவரும் பங்குகொண்டு பயன்பெறுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

★ அச்சடிக்கப்பட்ட பிரதிகள் இலவசமாக வழங்கப்படும்.

லயன் வி.மாணிக்கம்,
தலைவர்.

(91366)



உ

மாவை கொல்லங்கலட்டி

## அருள்மிகு ஸ்ரீ வீரகத்திப் பிள்ளையார் கோயில்

விநாயக சதுர்த்திப் பெருவிழா

22.08.2001 புதன்கிழமை பகல் மகா கணபதி ஹோமத்துடன் பஞ்சவிம்சதி கலச சங்காபிஷேகம் நடைபெற்று திருவிழா நடைபெறும்.

அத்தருணம் அடியார்கள் சுவாமி தரிசனம் செய்து இஷ்ட சித்திகளைப் பெறுவீர்களாக.

நடைபெறும் திருப்பணிக்கும் நித்திய பூசைச் செலவுக்கும உதவுவீர்களாக.

அன்னதானம் நடைபெறும்.

(91367) - அறங்காவலர்.

# பூமிக்கு வெளியே விண்வெளியில் நுண்ம உயிரினங்கள் கண்டுபிடிப்பு!

கலிபோர்னியா,ஒக.20

பூமிக் கோளின் வளிமண்டலத்தின் வெளிப்புற எல்லைக்கும் அப்பால் - விண்வெளியில் - பக்ரீறியாக் கூட்டத்திரளாக நுண்ம உயிரினங்களைத் தாங்கள் கண்டுபிடித்திருப்பதாக இலங்கை விஞ்ஞானி ஒருவரின் தலைமையில் இயங்கும் இந்திய - பிரிட்டிஷ் கூட்டு விஞ்ஞானிகள் குழு ஒன்று அறிவித்திருக்கின்றது.


பேராசிரியர் சந்திரா விக்கிரமசிங்க

வேல்ஸின் கார்டிங் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மதிப்புமிக்க விஞ்ஞானியான - இலங்கையரான - பேராசிரியர் சந்திரா விக்கிரமசிங்க தனது தலைமையிலான ஆய்வுக் குழுவின் கண்டுபிடிப்புப் பற்றிய அறிக்கையை கலிபோர்னியாவில் சாந்தியாகோவில் நடைபெற்ற விஞ்ஞானிகளின் சர்வதேச மாநாடு ஒன்றில் வெளியிட்டுள்ளார்.

"பூமியில் வாழும் உயிரினங்களிலிருந்து மிகத் தொலைவில் இந்த நுண்ம உயிரினங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவை ஆழ்ந்த விண்வெளிப் பகுதியிலிருந்து பூமியின் வளிமண்டலத்தின் வெளிப்புற எல்லைக்கு அப்பால் வந்துள்ளன. விண்வெளியில் இருந்து பூமிக்கு உயிரினங்கள் பக்ரீறியா வடிவத்தில் மழையாகக் கொட்டப்பட்டிருக்கலாம் என்பதை நிரூபிக்கும் முதல் சான்றாக - ஆதாரமாக - இதனைக் கொள்ளமுடியும்.

"நுண்ம உயிரினங்களைத் தாங்கிச் செல்லும் வால் வெள்ளிகள் பிரபஞ்சத்தில் வியாபித்துள்ள பூமி மற்றும் கோள்களின் மீது இத்தகைய நுண்ம உயிரினங்களைத் தூவிச் சென்றிருக்கலாம் என்ற - உயிர்த் தோற்றத்துக்கான - பிரபலமான கொள்கைக்கு சிறந்த விளக்கத்தை - நிருபணத்தை - இந்த ஆதாரம் தந்துள்ளது."

- இப்படி பேராசிரியர் சந்திரா விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (ஐ-உ)

## தேடுதல் நடத்திய படையினர் புலிகளின் தாக்குதலில் சிக்கினர்

மட்டக்களப்பு மாவட்டத்தில் குறிஞ்சிமுனை என்னும் இடத்தில் கைவிடப்பட்ட வீடு ஒன்றில் நேற்று முன்தினம் தேடுதல் நடத்திக் கொண்டிருந்த படையினர் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தியதாக விசேட ஊடகத்தகவல் நிலையம் தெரிவித்தது.

இந்தத் தாக்குதலை படையினர் பதில் தாக்குதல் நடத்தி முறியடித்து விட்டனர் என்றும் -

அங்கு இடம்பெற்ற மோதலில் சிப்பாய் ஒருவர் உயிரிழந்தார் என்றும் -

தகவல் நிலையம் மேலும் தெரிவித்தது.

இதேவேளை -

நேற்றுமுன்தினம் வடக்கு - கிழக்கில் இடம்பெற்ற பல்வேறு சம்பவங்களில் விடுதலைப் புலிகள் அமைப்பைச் சேர்ந்த ஏழு உறுப்பினர்கள் உயிரிழந்தனர் என்றும் ஊடகத்தகவல் நிலையம் தெரிவித்தது. (ஐ-3-9)

## விமானப் போக்குவரத்து குறித்து ஆராய இந்தியக் குழு வருகை

கொழும்பு,ஒக.20

இந்திய சிவில் விமானப் பாதுகாப்புப் பிரிவின் உயர்மட்ட அதிகாரிகள் ஆறுபேர் அடங்கிய குழு ஒன்று நேற்று சென்னையில் இருந்து கொழும்புக்கு வந்துள்ளது.

கட்டுநாயக்கா விமானப்படைத் தளம் மற்றும் சர்வதேச விமான நிலையம் ஆகியவற்றின் மீது அண்மையில் புலிகள் நடத்திய பெரும் தாக்குதலை அடுத்து உருவாகியிருக்கும் நிலைமையை நேரில் ஆராய்வதற்காகவே இந்தக் குழு கொழும்பு வந்துள்ளது.

இரு தினங்கள் கொழும்பில் தங்கியிருக்கும் இக்குழுவினர் பல அதிகாரிகளுடன் பேச்சு நடத்துவர்.

புலிகளின் தாக்குதலுக்குக் காரணமாய் அமைந்த பாதுகாப்புக் குறைபாடுகள் மற்றும் கொழும்பு விமான நிலையம் ஊடான சிவில் விமானப் போக்குவரத்துகளின் பாதுகாப்பு ஆகியன குறித்து விரிவாக ஆராயப்படும் என்று இந்திய சிவில் விமானப் போக்குவரத்துப் பாதுகாப்புக் குழுவின் தலைவர் வி.ஐவாலி சென்னை விமான நிலையத்தில் தெரிவித்தார். (ஐ)

## மாநகர சபை கூட்டம்

யாழ்ப்பாணம்,ஒக.20

யாழ்.மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

மேயர் என்.ரவிராஜ் தலைமையில் இடம்பெறும் இக்கூட்டத்தில் தற்போது மாநகர சபை எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக விரிவாக ஆராயப்படவுள்ளது. (ஐ-9)

## இளைஞர்கள் கைது

வாழைச்சேனை நாவலடிச் சந்தியில் வைத்து இளைஞர்கள் மூவர் இராணுவத்தினரால் கடந்த வியாழக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

இறால் ஓடையைச் சேர்ந்த இரு தமிழ் இளைஞர்களும், ஓட்டமாவடியைச் சேர்ந்த முஸ்லிம் இளைஞர் ஒருவருமே கைது செய்யப்பட்டுள்ளனர். (ஐ-9)

## விளையாட்டு நிகழ்வுகள்

குருநகர்,ஒக.20

யாழ். உதைபந்தாட்ட லீக் யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடத்திவரும் தலைவர் கிண்ணத்துக்கான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் நாளை செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ள ஆட்டங்களில் கலந்துகொள்ளும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ பி.ப. 4.15 - 'பி' பிரிவு பாடும் மீன் வி.க. எதிர் றோயல் வி.க.

★ பி.ப. 5.15 - 'ஏ' பிரிவு பொற்பதி வி.க. எதிர் ஆனைக்கோட்டை யூனியன் வி.க. (ஐ-51)

★ ★ ★

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகள் உதைபந்தாட்டச் சங்கம் யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடத்திவரும் 12 வயதுக்குட்பட்டோர் கலந்துகொள்ளும் 'சுப்பர் சிக்ஸ்' பாடசாலைகள் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

★ பி.ப. 3.45மணி புனித ஜோண்ஸ் கல்லூரி எதிர் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்.

★ பி.ப. 4.30 மணி - புனித பத்திரிசியார் கல்லூரி எதிர் ஊரெழு கணேசா வித்தியாலயம்.

★ பி.ப. 5.10 மணி - புனித ஜேம்ஸ் ம.வி. எதிர் புனித ஜோசப் வித்தியாலயம். (ஐ-51)

## நான்காம் ஆண்டு
## மனதை விட்டகலா மகளின் நினைவு

அன்னை மடியில் 16 - 12 - 1980



ஆண்டவன் அடியில் 02 - 09 - 1997

### செல்வி கவிதா சின்னையா

திதி: பிரதமை - 20.08.2001

மண்ணின் மடியில் மார்கழி மலர் என மலர்ந்தாய்
கவி எனும் பெயரினைப் போலே
கவிஎன மனதில் பதிந்தாய்
கனவுகள் சுமந்த சுமந்த உன்கண்கள்
கவனத்தைக் கவரும் உன் சிரிப்பு
கதைகள் உதிரும் உன் இதழ்கள்
காலன் பறித்திட்ட போதும்
எங்கள் நினைவில் என்றும் நீ வாழ்வாய் ராசன்
பிரிவினை என்னும் துயரில்
கருகியே வாடும் உந்தன்
உதிரம் சுமந்திடும் உறவுகள்!

அப்பா:- சின்னையா,
அம்மா:- சரஸ்வதி,
அண்ணாமார், அக்காமார்,
அத்தான்மார்,
மைத்துனிமார், பெறாமக்கள்.

*'கவிதாலயம்',*
*இல.6, நொத்தாரிஸ் வீதி,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.*
(91368)


நாகம்ஸ் சுன்னாகம்
வேணு, ரோஜா (இரட்டை வேடம்) நடித்த
பொட்டு அம்மன்
(ரீல்ஸ்)
பேய்களின் அட்டகாசம் நிறைந்த படம்
காட்சிகள்:- 11.00, 2.30 (புதியநேரம்)
(91334)

ராஜா யாழ்ப்பாணம்
இளைய தளபதி விஜய்,
தேவயானி, சூர்யா,
நடிப்பில்
ப்ரண்ட்ஸ்
தினசரி :- 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு :- 10.30, 2.00, 5.00(பு.நே.)
22-08-2001 முதல்
முதலமைச்சர் ஜெயந்தி
(C/17875)




யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் வணிகபீட மாணவர் ஒன்றியத்தால் காணாமற்போனோர் தொடர்பான விவரங்களை ஆவணப்படுத்தும் முகமாக காணாமற்போனோர் தொடர்பான விவரங்களை உள்ளடக்கிய 'உயிர்விசை' என்ற நூல் வெளியிடப்பட்டது. 'உயிர்விசை' நூலின் முதற்பிரதியை யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, கைது செய்யப்பட்டு காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தின் தலைவர் எஸ்.செல்வராஜாவிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம். (ஐ-6)



சங்கானை மண்டிக்குளம் புனரமைப்பு வேலைகளை பட்டினிக்கெதிரான நிறுவனம் ஆரம்பித்துள்ளது. நிறுவனப் பொறியியலாளர் அர்.யோகரட்ணம் மண்ணை அகழ்ந்து வேலையை ஆரம்பித்து வைப்பதனைப் படத்தில் காணலாம். விவசாய சம்மேளனத்தை சேர்ந்த க.செல்லத்துரை (தலைவர்), வே.சிவலிங்கம் (செயலாளர்), சி.கந்தசாமி (பொருளாளர்), பொ.குணராசா (உப தலைவர்), நா.லோகராசா (உறுப்பினர்) மற்றும் பட்டினிக்கெதிரான நிறுவன திட்ட உத்தியோகத்தர் க.இராஜேந்திரம் ஆகியோர் படத்தில் காணப்படுகின்றனர். (படம்: வலிகாமம் தெற்கு செய்தியாளர்)

## உலக வங்கி நிதி உதவியால் கல்விக் கல்லூரிக்கு கட்டடம்
### இங்கு வந்த அதிகாரிகள் தெரிவிப்பு

மூளாய்,ஒக.20

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரிக்கான புதிய கட்டடம் அமைப்பதற்கு உலகவங்கி நிதி உதவி வழங்க முன்வந்துள்ளது. இந்த உதவியைப் பயன்படுத்தி விரைவில் புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

இப்புதிய கட்டடத் தொகுதியை அமைத்துக் கொள்வது பற்றிய ஏற்பாடுகள் தொடர்பாக அண்மையில் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த உலக வங்கியின் அதிகாரிகள் பேச்சு நடத்தியுள்ளனர்.

இக்கட்டடத்தை அமைப்பதற்குத் தேவையான நிதியை ஒதுக்கீடு செய்வதற்கு உலக வங்கி ஏற்கனவே அங்கீகாரம் வழங்கியுள்ளது என்றும் -

எனவே இந்த நிதியைப் பயன்படுத்தி கட்டட நிர்மாணத்திற்கான அடுத்த கட்ட நடவடிக்கைகளை இங்குள்ள அதிகாரிகளே மேற்கொள்ள வேண்டும் என்றும் -

உலக வங்கியின் பிரதிநிதிகள் தெரிவித்தனர். (ஐ-99)

## நல்லூர் ஆலய சூழலில் இன்று

யாழ்ப்பாணம்,ஒக.20

நல்லூர் முருகன் உற்சவத்தை ஒட்டி இளங்கலைஞர் மன்றம் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நடத்திவரும் தெய்வீக இசையரங்கில் இன்று மாலை 6 மணிக்கு வி.பரமசாமியின் பாட்டுக்கச்சேரி இடம்பெறும். (ஐ-3)

## கூட்டம்

யாழ்ப்பாணம்,ஒக.20

யாழ். இந்துக் கல்லூரி சேவைக் கழகத்தின் விசேட பொதுக்கூட்டம் இன்று முற்பகல் 11.30 மணிக்கு கழக அறையில் இடம்பெறும் என்று கழகத் தலைவர் அறிவித்துள்ளார். (ஐ-3)

## மரண அறிவித்தல்

### திருமதி கத்தறின் கனகமணி பயஸ்

புது வீதி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி கத்தறின் கனகமணி பயஸ் நேற்று (19.08.2001) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமசேகரம் - றோசம்மா தம்பதிகளின் அன்பு மகளும் பிரான்சிஸ் பயசின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம், துரைரெட்ணம் மற்றும் ஜயாத்துரை, இராசமணி, புஸ்பமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் வேதநாயகம் (பிறிமியர் பேக்கறி), தவம், ஜெயராஜா (ஜேர்மனி), துரைநாயகம் (தர்சன் பேக்கறி உரிமையாளர்), ஜெயராணி, செல்வம் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் விமலராணி, அன்ரன் (பெரியண்ணன் ஆனைப்பந்தி கராஜ் உரிமையாளர்), சந்திரா, விமலா, ஜொய்சி, பவானி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்திற்காக புது வீதி, கொய்யாத்தோட்டத்திலுள்ள அவரது இல்லத்திலிருந்து இன்று (20.08.2001) திங்கட்கிழமை பி.ப. 3.30 மணிக்கு (புதிய நேரம்) புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*26, புது வீதி,*
*கொய்யாத்தோட்டம்,*
*யாழ்ப்பாணம்.*

தகவல்:
கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்.

(91369)



கடந்த வெள்ளியன்று நாடாளுமன்றக் குழு அறையில் இடம்பெற்ற எதிர்க்கட்சிகளின் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அங்கு வருகை தந்த போது எடுக்கப்பட்ட படம். அவருக்கு அருகே கண்டி மாவட்ட எம்.பியான காதரும் யாழ்.மாவட்ட எம்.பியான தி.மகேஸ்வரனும் காணப்படுகின்றனர். (ஐ)

# பேராபத்தில் இருந்து நாட்டை மீட்க விடுதலைப் புலிகளுடன் பேசவேண்டும்!

## ஏறாவூர் பொதுக்கூட்டத்தில் ஹக்கீம் உரை

மட்டக்களப்பு,ஓக.20

நாடு எதிர்நோக்கியுள்ள பேராபத்தில் இருந்து மீள, உடனடியாக அரசு விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் இவ்வாறு கேட்டுள்ளார்.

ஏறாவூரில் நேற்றுமுன்தினம் மாலை நடந்த கட்சியின் பொதுக் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்துகொண்ட இந்தக் கூட்டத்தில் அவர் பேசுகையில் மேலும் கூறியதாவது:-

நாடு இன்று பெரும் இக்கட்டான நிலையில் உள்ளது. பொருளாதாரத் துறை உட்பட சகல துறைகளும் ஸ்தம்பித நிலையை நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன.

இந்நிலையில் இருந்து நாட்டை மீட்பதாயின் விடுதலைப் புலிகளுடன் அரசு உடனடியாகப் பேச்சை ஆரம்பிக்க வேண்டும்.

சர்வஜன வாக்கெடுப்பு நடத்தும் திட்டத்தை முழுமையாகக் கைவிட்டுவிட்டு நாடாளுமன்றத்தைக் கூட்டி நாட்டைக் காக்க அரசு முன்வர வேண்டும்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசு மக்களின் விருப்பத்துக்கு முகம் கொடுத்து செயற்பட வேண்டும் என்றார் அவர். (ஐ-3)

### லொயிட்ஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்டணங்களைக் குறைக்குமாறு இக் குழுவினர் லொயிட்ஸ் நிறுவனத்தின் அதிகாரிகளிடம் நேரில் கோரியுள்ள னர்.

எதிர்காலத்தில் தாக்குதல்களின் போது ஏற்படும் சேதங்களுக்காக 5 லட்சம் அமெரிக் டொலர்களை (500 கோடி ரூபா) முதலில் வழங்க ஸ்ரீலங்கா அரசு சம்மதித்தால், அடுத்த இரு வார காலப்பகுதிக்குள் அதிகரித்த கப்பல் காப்புறுதிக் கட்டணங்களைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று லொயிட்ஸ் நிறுவனப் பிரதிநிதிகள் அரசுக் குழுவினரிடம் தெரிவித்துள்ளனர். (ஐ-9)

### புலிகளுடன்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐ.தே. கட்சி ஆட்சியில் இருந்த முழுக்காலமும் அச்சம் நிறைந்த செயல்களையே அது தனது ஆயுதமாகப் பயன்படுத்தியது. கடந்த காலங்களில் முன்னெடுக்கப்பட்ட சமாதான முயற்சிகளை விடுதலைப் புலிகள் சீர்குலைத்திருந்தனர். இருந்த போதிலும் சமாதானத்தை அடைவதற்கென புலிகளுடன் தொடர்ந்தும் பேச்சுக்களை நடத்தத் தயாராகவிருக்கின்றோம்.

காலஞ்சென்ற பிரதமர் எஸ். டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா மனிதாபிமானக் கொள்கையுடன் செயற்பட்டார். தன்னைக் கொன்றவரை மன்னிக்கும்படி அவர் கோரியிருந்தார். அந்த மகோன்னத மனிதனின் குறிக்கோளை உடைய எனக்கு, கண்ணில் காயத்தை ஏற்படுத்திய கொழும்பு நகரசபை வளாகக் குண்டு வெடிப்பின் பின்னணியில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் இருந்தபோதிலும் அவரை சிறுநீரக சிகிச்சைக்கென நோர்வேக்கு அனுப்புவதில் அனுசரணை வழங்கியிருந்தேன்.

- இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்தார். (ஐ-3)

### பொருள்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயர்வு ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது.

அதிகரித்த கப்பல் கட்டணத்தைக் காரணம் காட்டி, ஏற்கனவே தாங்கள் கையிருப்பில் வைத்திருந்த பொருள்களின் விலைகளையும் வர்த்தகர்கள் உயர்த்தியிருப்பதாகவும் -

இறக்குமதி செய்யப்படும் பொருள்களை வாங்கி விற்பதற்கு இனிமேல் பெரும் தொகைப்பணத்தை மேலதிகமாகச் செலவிடவேண்டி வரும் என்று தங்களின் நடவடிக்கைக்கு அவர்கள நியாயம் கற்பிக்க முயல்வதாகவும் -

கூறப்படுகின்றது.

தலைநகரின் முக்கிய சந்தைகளில் பொருள்களின் விலைகள் அதிகரித்திருப்பதை அடுத்து. அடுத்து வரும் வாரங்களில் நாடு முழுவதும் உணவுப் பொருள்களின் விலைகள் மேலும் அதிகரிக்கும் சூழ்நிலை ஏற்பட்டிருப்பதாகவும் -

எச்சரிக்கப்பட்டிருக்கின்றது. (ஐ)

## 'மிக்' விமான அனர்த்தம்:

# விசாரணை நடத்த நால்வர் கொண்ட குழு

கொழும்பு,ஓக.20

ஸ்ரீலங்கா விமானப்படையின் 'மிக 27' ரக ஜெட் குண்டுவச்சு விமானம் நேற்றுமுன்தினம் சீதுவையில் வீழ்ந்து நொறுங்கிய சம்பவம் தொடர்பாக விசாரணைகளை நடத்த நால்வர் கொண்ட குழுவை விமானப்படைத் தளபதி ஜெயலத் வீரக்கொடி நியமித்துள்ளார்.

விமானப் படையின் பிரதம அதிகாரி ஏயர் வைஸ் மார்ஷல் ஜி.பி. பெரேரா தலைமையில் அமைக்கப்பட்டுள்ள இந்தக் குழு உடனடியாகத் தனது விசாரணைகளை ஆரம்பித்தது.

இதற்குப் புறம்பாக நீர்கொழும்பு சிரேஷ்ட பொலீஸ் அத்தியட்சகர் ராஜா வீரக்கோன் தலைமையிலான இருவேறு குழுக்களும் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன.

விமானத்தின் கறுப்புப் பெட்டி மீட்கப்பட்டுள்ளதாகவும் - விபத்துக்கான உடனடிக் காரணத்தை அறிய அந்தப் பெட்டி பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும் - பொலீஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஐ-3-9)

### வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திரும்பினர்.

அதிகாலை முதல் நண்பகல் வரை ஐயனார் சிலையின் கண்களில் இருந்து நீர் வழிந்துகொண்டிருந்ததாக அங்கு சென்று திரும்பிய பக்தர்கள் தெரிவிக்கின்றனர்.(ஐ-164)

### நல்லூர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபடுத்தப்பட்டிருந்ததைக் காணமுடிந்தது.

ஆலயச் சூழலில் சிவில் உடையில் பொலீஸாரும், படையினரும் கண்காணிப்பிலும் ஈடுபட்டிருந்தனர். எனினும் பெரும் அசம்பாவித சம்பவங்கள் எதுவும் நேற்று ஆலயச் சூழலில் இடம்பெறவில்லை.

இதேவேளை -

ஆலயச் சூழலுக்கு வெளியே - கந்தர்மடம் பகுதியில் - நேற்று மாலை இரு இளைஞர் கோஷ்டிகளுக்கு இடையே மூண்ட கைகலப்பில் சிலர் காயங்களுக்கு இலக்கானதாகத் தெரியவந்தது. (ஐ-9)

### இராஜதந்திரிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றது.

கொழும்பின் பாதுகாப்புத் தொடர்பான ஸ்திரமற்ற தன்மையை விடுதலைப் புலிகள் மட்டுமன்றி வேறு வெளிநாட்டு கெரில்லா அமைப்புகளும கூட பயன்படுத்தலாம் என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

இதன்காரணமாக சர்வதேச மட்டத்தில் பல கெரில்லா அமைப்புக்களின் பெரும் எதிர்ப்பையும், அதிருப்தியையும் சம்பாதித்திருக்கும் அமெரிக்கா போன்ற நாடுகள் கொழும்பில் உள்ள தங்களது தூதரகங்கள் குறித்து அதிகம் சிந்திப்பதாகத் தெரிகின்றது.

ஒஸாமா பின்லேடன் போன்ற சர்வதேச தீவிரவாதிகள் கூட - புலிகளின் பெயரில் - கொழும்பின் அசாதாரண நிலையை - பலவீனமான பாதுகாப்பு ஏற்பாடுகளைத் தங்களுக்கு வாய்ப்பாகப் பயன்படுத்தி விடக்கூடும என்ற கருத்துக் குறித்தும் கொழும்பில் உள்ள பல வெளிநாட்டுத் தூதரகங்களில் உள்ள இராஜதந்திரிகள் அதிக சிரத்தை காட்டுகின்றனர்.

இதன்காரணமாக பல வெளிநாடுகள் தங்களின் தூதரகங்களை மூடி, தூதுவர்களை புதுடில்லிக்கோ அல்லது மாலைதீவு போன்ற அயல்நாடு ஒன்றுக்கோ இடமாற்றுவது குறித்துத் தீவிரமாக ஆலோசிக்கின்றன.

தேவையானால் கொழும்பில் தங்களின் தூதரகத்தின் தரத்தைக் குறைத்து - இரண்டாம் தர நிலையில் உள்ள அதிகாரிகளுடன் - உப அலுவலகமாக அதனை இயங்கச் செய்வது குறித்தும் -

புதுடில்லி போன்ற இடங்களில் உள்ள தமது தூதரகங்களின் கட்டுப்பாட்டின் கீழ் இந்த அலுவலகங்களை இயக்குவது குறித்தும் -

அவை ஆராய்ந்து வருகின்றன.

வெளிநாட்டுத் தூதரகங்கள் மட்டுமல்லாமல், பல வெளிநாட்டு வர்த்தக நிறுவனங்களும் கொழும்பில் உள்ள தமது பிரதான அலுவலகங்களை வேறு நாடுகளுக்கு இடம்மாற்றுவது குறித்து ஆலோசித்து வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்புக்கான விமான, கப்பல் போக்குவரத்துக் கட்டணம், காப்புறுதிக் கட்டணம் என்பன அதிகரித்தமை -

இவற்றின் காரணமாக எதிர்பார்க்கப்படும் வர்த்தக மந்த நிலைமை -

விமானப்படையும் இலங்கையில் உள்ள ஒரேயொரு சர்வதேச விமான நிலையமும் ஒரே ஓடுபாதையைப் பயன்படுத்துவதால் தங்கள் உயரதிகாரிகளின் பயணப் போக்குவரத்தில் உள்ள ஆபத்து -

நிறுவனத்தின் தாயகத்தின் மீது காழ்ப்புணர்ச்சி கொண்ட சர்வதேச தீவிரவாத அமைப்புகள், அந்த தாயக நாட்டின் மீது பழி தீர்ப்பதற்கு அந்த நாட்டின் நிறுவனம் ஒன்றின் கொழும்புக்கிளை மீது பழிவாங்கும் தாக்குதலை நடத்தலாம் என்ற அச்சம் -

அந்த அச்சத்தைப் போக்கக்கூடிய பாதுகாப்பு உறுதிப்பாடு கொழும்பிலும், சுற்றுப்புறங்களிலும், தென்னிலங்கையிலும் இல்லாமை -

ஆகிய காரணங்களுக்காகவே வெளிநாட்டு வர்த்தக நிறுவனங்கள் தமது பிராந்தியத் தலைமையகங்களை கொழும்பிலிருந்து வேறுநாட்டுக்கு மாற்றுவது குறித்துப் பரிசீலிக்கின்றன என்று கூறப்படுகின்றது.

ஐரோப்பிய யூனியன் தனது கொழும்புத் தூதரை கொழும்பிலிருந்து விலக்குவது என்று ஏற்கனவே முடிவு செய்துவிட்டது. இனிமேல் - அடுத்த ஜனவரி முதல் - அத்தூதரகத்தின் தரம் குறைக்கப்படும் இரண்டாம் நிலை அதிகாரி ஒருவரே தூதரகத்தின் துணை நிலைத் தூதராகச் செயற்படுவார். புதுடில்லியில் உள்ள ஐரோப்பிய ஒன்றியத் தூதரின் கீழ் கொழும்புத் துணை அலுவலகம் செயற்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. (உ)


# 31 ஆம் நாள் நினைவஞ்சலி

மண்ணில் 1944 - 05 - 29



விண்ணில் 2001 - 07 - 20

அமரர் ஜோ.ச.சத்தியநாதன்

கல்லூரியின் சங்க நிர்வாகியும், கல்லூரிக்கு தன்னை அர்ப்பணித்த பழைய மாணவனும் ஆவார். சிறந்த கரப்பந்தாட்ட வீரன், சிறந்த உதைபந்தாட்ட வீரனும் பயிற்றுநருமான அமரரது பிரிவினால் துயருறும் அன்னாரது குடும்பத்திற்கு கல்லூரிச் சமூகம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றது.

ஹாட்லிக்கல்லூரிச் சமூகம்,
பருத்தித்துறை.

(C/17937)



COMPUTERS FOR SALE

Pentium 4

89,500/= மட்டுமே

நம்பமுடியவில்லையா?

விபரம் நாளைய உதயனில்.

(C/17936)



## தவறிவிட்டது

யாழ்ப்பாணம் கொய்யாத்தோட்டத்தைச் சேர்ந்த ப.ஜெ.ம.விஜேந்திரன் ஆகிய எனது கடவுச்சீட்டும் (k0625419), Air Lanka விமான ரிக்கெற் மற்றும் ஆவணங்கள் அடங்கிய சிறிய bag ஒன்று மானிப்பாய்க்கும் யாழ்ப்பாணத்திற்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து கீழ்க் கண்ட விலாசத்திற்கு உடன் தொடர்பு கொள்ளவும்.

*(சன்மானம் வழங்கப்படும்)*

1/14, புதுவீதி,
முதலாம் ஒழுங்கை,
கொய்யாத்தோட்டம். (91365)



BIT

Bachelor of Information Technology
University of Colombo

விரிவுரைகள் ஆரம்பம்

யாழ் மாவட்டத்திலிருந்து கல்வியாண்டு 2001/2002 BIT கணனிப்பட்டக்கல்விக்கு தெரிவு செய்யப்பட்ட மாணவர்களிற்கான விரிவுரைகள் 19.08.2001 முதல் ஆரம்பமாகியுள்ளது என்பதை அறியத் தருகிறோம்.

சனிக்கிழமை : காலை 10.00 முதல் மாலை 5.00 மணி வரை
ஞாயிற்றுக்கிழமை : காலை 8.30 முதல் மாலை 3.30 மணி வரை
வகுப்புக்கள் நடைபெறுகின்றது

எமது நிறுவனத்தினூடாக விண்ணப்பிக்கத் தவறிய மாணவர்களுக்கு எமது நிறுவனத்திலேயே விரிவுரைகளைத் தொடரவும் பல்கலைக்கழக பதிவிற்கான

வடக்கு, கிழக்கில அதிகூடிய மாணவர்கள் BIT பட்டப்படிப்பிற்கு தெரிவு செய்யப்படுவதும் அதிகூடிய வீதத்தில் பரீட்சைகளில் சித்தியடைவதும் IIS நிறுவனத்திலேயே என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ஒளிமயமான உங்கள் எதிர்காலக் கல்விக்கு நிலையான ஓர் நிறுவனத்தை தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்

INSTITUTE OF INFORMATICS STUDIES (IIS)
(Affiliated to Irish International University, Dublin)
100, Clock Tower Road, Jaffna.
T.P : 021 - 2831 EMAIL : iis@sltnet.lk


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.08.2001இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.